கல்கி

KALKI 28·8·83 ரூ1·20





PHILIPS
டிரான்ஸிஸ்டர் துறையில் நம்பகமான பெயர் கொண்ட பிலிப்ஸ் இப்போது வழங்குகிறது அசல் டிரான்ஸிஸ்டர் பாட்டரி:
பிலிப்ஸ் எக்ஸ்ட்ரா
PHILIPS
extra
TYPE R20 E
1.5 VOLTS
MADE IN INDIA
TYPE R6E
பிலிப்ஸ் எக்ஸ்ட்ராவின் கூடுதல் அம்சங்கள் சக்தி. பாதுகாப்பு. கசிவுத் தடுப்பு. நீண்ட ஆயுள். பிலிப்ஸ் எக்ஸ்ட்ரா. டிரான்ஸிஸ்டர் பற்றி நன்கறிந்தோர் வழங்குவது.
பிலிப்ஸ்
பிலிப்ஸ் — ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய வீடுதோறும் விளங்கும் நம்பகமான

நட்சத்திரங்கள் குழந்தைகளானால்....?

நமது பிரபல நட்சத்திரங்கள் குழந்தையாக இருந்தபோது எப்படியெல்லாம் அடம்பிடித்துக் குறும்பு செய்திருப்பார்கள்? வேடிக்கையான கற்பனை.



நீதிபதி வெறுக்கும் அநீதிகள்



புதிதாகப் பதவி ஏற்றுள்ள நீதிபதி திரு கே. எம். நடராஜன் அவர்களுடன் ஒரு பேட்டி:

கேள்வி: கணவன் நீதிபதியாகப் பணியாற்றும் நீதிமன்றத்தில் அவர் மனைவி வக்கீலாகப் பணியாற்றுவது குறித்து உங்கள் சொந்தக் கருத்து என்ன?

பதில்: நீதிபதிக்கு நெருங்கிய உறவினர்கள், மனைவி உட்பட, அவர் முன் தோன்றி வழக்காடினால் நீதி ஒரு பக்கம் சாய்ந்து விடக் கூடிய அபாயம் உண்டு என்று பொதுவாகத் தோன்றினாலும், இந்தக் கருத்துச் சரியானது அல்ல என்பதே என் எண்ணம். நீதிபதிகள் மனைவிக்காகவோ அல்லது மற்றபடி வேண்டியவர்களுக்காகவோ சட்டத்திற்குப் புறம்பாக நீதி வழங்கவே முடியாது. ஆனால் நீதிபதிக்கு நெருங்கிய உறவினர்கள் அவரது கோர்ட்டில் ஆஜராகக் கூடாது என்று சட்டத்தில் இருக்கிறது. சாமர்த்தியமான சில வக்கீல்கள் இதையும் ஓர் அனுகூலமாகவே எடுத்துக் கொள்கிறார்கள். உதாரணமாக ஒருநீதிபதி குற்றவாளியைக் கடுமையாகத் தண்டித்து விடுவார் என்று பரவலாக ஒரு அபிப்பிராயம் இருந்து வந்தது. அவரிடமிருந்து தப்புவதற்கு ஒரு வழி கண்டு பிடித்தனர். அவருடைய நெருங்கிய உறவினர் ஒரு பெண் வக்கீல். அவர் எடுத்துக் கொள்ளும் கிரிமினல் வழக்குகள் வேறு கோர்ட்டுக்கு மாற்றப்பட்டு விடும். எனவே சில வக்கீல்கள் அந்தப் பெண் வக்கீலை வக்காலத்துப் போடும்படி செய்து தங்கள் கட்சிக்காரர்களுக்கு உதவினர்.

கேள்வி: நீங்கள் அநீதி என்று மனம் புழுங்குவது எது?

பதில்: போலீஸ் பொய்ச் சாட்சி தயாரித்து வழக்குகளை ஜோடிப்பது ஒன்று. இதனால் உண்மையான குற்றவாளிகள் தப்பி விடுகிறார்கள். அப்பாவிகள் தண்டனை பெறுகிறார்கள். சேலத்தில் நான் வக்கீல் தொழிலாற்றிய போது, எனக்குத் தெரிந்த ஒருவன் சம்பவம் நடந்ததாகக் கூறப்பட்ட தினத்தில் முழுக்க முழுக்க என் வீட்டிலேயே இருந்தான். எந்தக் குற்றமும் அவன் செய்ய வாய்ப்பில்லை என்று எனக்கு நன்கு தெரிந்தது. கொலை வழக்கில் சிக்கிய அவன் தவிர்க்க முடியாத பலமான பொய் சாட்சியம் காரணமாகத் தண்டனை பெறும்படி ஆகிவிட்டது. அவனைக் காப்பாற்ற முடியாமலே போய் விட்டது. அவனது தண்டனை நிறைவேற்றப்பட்ட சில தினங்களில் அவனால் கொல்லப்பட்டதாக நிரூபிக்கப்பட்ட அதே நபர் உயிரோடு உலவுவது தெரிய வந்தது. பின்னால் எவ்வளவுதான் சர்க்கார் நஷ்ட ஈடு தர முடிந்தாலும் தூக்கிலிடப்பட்ட நிரபராதியின் உயிரை மீட்டுத்தர முடியுமா? இரண்டாவதாக ''டிபார்ட்மெண்டல் விசாரணை'' என்ற சாக்கில் தொழிலாளர்கள் பெயரில் உயர் அதிகாரிகள் சார்ஜ்ஷீட் கொடுப்பதோடு, தாங்களே விசாரணையும் செய்து, தண்டனையையும் கொடுத்து விடுகிறார்கள். தொழிலாளர்களுக்குத் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளப் போதிய வசதிகள் செய்து தரப்படுவதில்லை. வக்கீல்கள் வைத்துத் தங்கள் நிலையைச் சரியானபடி விசாரணையில் எடுத்துக் கூறச் சந்தர்ப்பம் தருவதில்லை. இந்த நிலையை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்த நிலை மாற அரசாங்கம் ஆவன செய்ய முன்வரவேண்டும்.


கேள்வி: உங்கள் அநுபவத்திலிருந்து ஒரு சுவையான செய்தி தர முடியுமா?

பதில்: ஒரே நாளில் ஒன்பது பேர்களை வெட்டிக் கொன்ற மலையூர் மம்பட்டியான், அவனது சகாக்கள் வழக்குகளை நான் நடத்தி யிருக்கிறேன். கடைசிவரை மம்பட்டியான் போலீஸார் வசம் மாட்டிக் கொள்ளாமல் தப்பித் தலைமறைவாகிவிட்டான். இப்போது நடக்கும் சினிமாப் படம் கூட அவனது உண்மையான வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப் பட்டது. ஆனால் சினிமாவில் காட்டப்படும் முடிவுப்படி நிச்சயம் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகவில்லை என்பது மட்டும் அந்த ஊர் மக்கள் அனைவரும் அறிந்த உண்மை.

பேட்டி, புகைப்படம்:
பிரேமாலயா நரசிம்மன்


ஷா வாலஸ் வழங்கும்
சூப்பர் பவர்
ரீகல்
டிடர்ஜெண்ட் கட்டி
அழுக்கைத் தகர்த்திடும்
துணிகளைக் காத்திடும்
ரீகலின் அபார சலவை சக்தி, உங்கள்
துணிகளில் விடாப்பிடியாகப்
படிந்திருக்கும் அழுக்கைத் தகர்த்து
விரட்டுகிறது. உங்கள் துணிகளை
அதிவெண்மையாகவும் பளிச்சென்றும்
சலவை செய்கிறது.
மேலும் ரீகலின் பாதுகாப்பான சலவை
உங்கள் துணிகளுக்கு இதமானது,
மென்மையானது... புதுமையான
நறுமணத்துடன் கூட.
Regal
Tough on dirt - Soft on clothes
ஷா வாலஸின் தரமான தயாரிப்பு
Shaw Wallace
ACIL/0592/83-Tam-R

கோத்ரெஜ் ஸ்டோர்வெல் — ஆயுட்கால அன்பளிப்பு!



கோத்ரெஜ் ஸ்டோர்வெல், எந்த சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற அருமையான அன்பளிப்பு. ஆயுட்காலம் முழுவதும் நினைவில் நிற்கும் அன்பு பரிசு. வழக்கமான மற்ற ஸ்டீல் அல்லது மர அலமாரிகளோடு ஒப்பிடும்போது, இந்தப் பயன் மிக்க, கவர்ச்சியான, ஸ்டீல் அலமாரி தனக்கே உரிய, நீடித்த உழைப்பாற்றல் மற்றும் கூடுதல் பாதுகாப்பு போன்ற, நலநயங்களைக் கொண்டது.

கோத்ரெஜிடம் மட்டுமே உள்ள வண்ணப் பூச்சு முறை காரணமாக, கீறல் விழாத, மேம்பட்ட மெருகு, இதன் அழகிற்கு மேலும் பொலிவூட்டுகிறது.

தவிரவும் முழுநீள 137 செ.மீ. வெளி காட்டு 'ப்ளேட்' கண்ணாடி, தகர்க்க முடியாத பூட்டுகள், மறைவான கீல்கள், இறுக மூடிக்கொள்ளும் மும்முனைப் பூட்டு மற்றும் அட்ஜஸ்ட் செய்யக்கூடிய ஷெல்ப்புகள்.

இத்தனைச் சிறப்புகளாலும் கோத்ரெஜ் ஸ்டோர்வெல் மறக்க முடியாத, பல தலைமுறைகளுக்கு உழைக்கும் அன்பளிப்பாக அமைகிறது.

கோத்ரெஜ் Godrej®

மேம்பட்ட தொழில்—
நுட்பம் மற்றும் மதிப்பு.

மாணவ மணிகளுக்கு...
பரிசு ரூ 1000

அன்புள்ள கல்லூரி மாணவ மாணவியருக்கு,

வணக்கம்.

சென்ற வாரத்திலிருந்து சுஜாதாவின் ''மாறுதல் வரும்'' என்ற ஓரங்க நாடகங்களை மிகுந்த ஆர்வத்துடன் படிக்க ஆரம்பித்திருப்பீர்கள்.

முதல் நாடகமாகிய ''மாறுதல்'' ஒரு முன்னுரை போன்றது. ரசமான வசனங்களால் இந்த முன்னுரை சிறக்கிறது. நாடக மேடையில் மீண்டும் ஒரு திருப்பம் உருவாவதை உணர்த்துகிறது.

அடுத்த இரு நாடகங்களும் நடிப்புத் திறனை



வெளிப்படுத்த அருமையான வாய்ப்பளிக்கும் நாடகங்கள். பெரிய ''செட்டு''க்கள் ஏதும் தேவையில்லாததால் சிரமமின்றி அரங்கேற்றலாம். ''வாசல்'', ''கிருஷ்ணா, கிருஷ்ணா'' ஆகிய இரு நாடகங்களில் ஏதேனும் ஒன்றை நீங்கள் உங்கள் கல்லூரி மேடையில் அரங்கேற்ற சுஜாதாவும் பூர்ணம் விசுவநாதனும் அனுமதி அளித்துள்ளார்கள்.

ஆனால் ஒரு மகிழ்ச்சி மிக்க நிபந்தனை! கல்கி நிறுவனம் வழங்கும் ரூ. 1000 பரிசு பெறுமளவுக்குப் பாடுபட்டு இந்த ஆண்டு இறுதிக்குள் வெற்றிகரமாக நாடகத்தை நடத்த முயல வேண்டும்.

கல்லூரி முதல்வர் அல்லது தமிழ்த் துறைப் பேராசிரியர் தவிர நாடகத்தை உள்ளூர் பிரமுகர்கள் இருவரேனும் பார்வையிட ஏற்பாடு செய்ய வேண்டும். இம்மூவரும் உங்கள் நாடகத்துக்கு அளிக்கும் மதிப்பெண் சான்றிதழைக் கல்கி ஆசிரியருக்கு அனுப்ப வேண்டும்.

இவ்வாறு வந்து சேரும் சான்றிதழ்களில் மிக அதிகமான மதிப்பெண் பெற்றுள்ள கல்லூரி நாடகக் குழு ரூ. 1000 பரிசு பெறும். தப்பித் தவறி இரு நாடகக் குழுவினர் ஒரே அளவில் மிக அதிகமான மதிப்பெண்கள் பெற்றிருந்தால் சுஜாதாவோ அல்லது பூர்ணமோ நேரில் வந்து அந்த நாடகங்களைப் பார்வையிட்டு முடிவு தெரிவிப்பார்கள்.


எனவே அடுத்த வாரம் முதல் கல்கியை வெகு கவனமாகப் படித்து நாடகத்தை ரசிப்பதுடன் நாடக அரங்கேற்றத்துக்கும் தயாராகுங்கள்!

''நடிப்புக் கலையில் எனக்கு நாட்டமில்லையே கல்கி அறிவித்துள்ள இந்தப் போட்டியில் பங்குபெற முடியவில்லையே என்று எந்த மாணவ மணியும் வருந்த வேண்டாம். உங்களுக்காக கல்கி 9–10–83 இதழ் மாணவர் சிறப்பிதழாக மலர்கிறது. அதற்கு இப்போது முதலே நீங்கள் சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், துணுக்குகள், நாடகம் தலையங்கம், கார்ட்டூன், சினிமாச் செய்தி என்று பலப் பல அம்சங்களையும் அனுப்பலாம். தொடர் அம்சங்கள் தவிர மற்றபடி கல்கி 9–10–83 இதழை முழுக்க முழுக்க நீங்களே தயாரிக்கலாம். சிறப்பாக இருந்தும் இந்த 9–10–83 இதழில் இடம்பெற முடியாது போகும் படைப்புக்கள் அடுத்து வரும் இதழ்களில் வெளியாகும். பிரசுரமாகும் அனைத்துக்கும் சன்மானம் உண்டு. கதை, கட்டுரை முதலானவற்றில் உங்கள் கல்லூரி விலாசத்தை மறவாமல் எழுதுவதுடன் உறையின் மீது ''மாணவர் மலர்'' என்றும் கண்டிப்பாகக் குறிப்பிடவும். திருப்பி அனுப்புதலோ, கடிதப் போக்குவரத்தோ இடையாது.

—ஆசிரியர், கல்கி

கல்கி 9-10-83 மாணவர் சிறப்பிதழ்

மாணவமணிகளின் கருத்தோவியங்கள் வரவேற்கப்படுகின்றன


ஜெயவர்த்தனே
ஒருமைப் பாட்டுக்கு உறுதிமொழி தர வேண்டும்
அமிர்தலிங்கம்
பேச்சு வார்த்தைக்கு நிபந்தனை கூடாது.
20
நாடு முன்னேற 20 அம்ச திட்டம்
2
வேலை வாய்ப்புக்கு 2 அம்ச திட்டம்!
0
என் முன்னேற்றம் என்னமோ ஸைபர் அம்சம் தான்!
தெலுங்கு கங்கா
கொடு, கொடு, ரெண்டாவது தவணை 30 கோடி ரூபா! தண்ணி டாங்க் ரெடி பண்ணிக்கிட்டு இருக்கோம்! உன் பாடு ஜாலி தான்!
ராமராவ்

கல்கி



1983 ஆகஸ்டு 28
ருத்ரோத்காரி ஆவணி 12
மலர் : 42 இதழ் : 4

திண்டாட்டம் தீருமா?

"வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க இருமுனைத் திட்டம் வகுக்கப்படும்'' என்று பிரதமர் சுதந்திர தினத்தன்று பேசியிருக்கிறார். ரொம்ப சந்தோஷம். இந்த மாபெரும் பிரச்னையை எந்த விதமாக அணுகப் போகிறார்கள் என்பதுதான் மற்றொரு மாபெரும் பிரச்னை.

1932லேயே விசுவேசுவரய்யா கூறினார்: வேலை வாய்ப்புப் பெருக முக்கியமானவை — (1) தொழில் வளர்ச்சி. புதிய புதிய தொழில்கள் வேகமாக உருவாக வேண்டும். கிராமப்புறங்களில் விவசாய உற்பத்தி பெருகுவதுடன் குடிசைத் தொழில்களும் அபிவிருத்தி அடைய வேண்டும். (2) இவை எல்லாவற்றுக்குமான நவீன ஞானத்தை விவசாய, தொழில், குடிசைத் தொழில், வர்த்தகம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள இளைஞர்களுக்கு அளிக்க வேண்டும். இதற்கு ஆங்காங்கே பயிற்சி நிலையங்கள் உருவாக வேண்டும்.'' மேதையின் இந்த வாக்கை நாம் இன்றளவும் நிறைவேற்றி வைக்கவில்லை.

ஆண்டுக்கு ஐந்து சதம் தொழில் வளர்ச்சி 10 லட்சம் பேருக்கு வேலை தரும். 7 சதம் உயர்ந்தாலோ 15 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிட்டும். ஆனால் நமது அரசு தொழில் வளப் பெருக்கத்துக்கு அவசியமான அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்யவில்லை, தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்பான பொருளாதாரக் கொள்கையையும் கடைப்பிடிக்கவில்லை.

இரண்டாவது கல்வி. சுதந்திரம் வந்த பிறகு நாம் கல்வி பெறுவோரின் எண்ணிக்கையை ஏகமாக உயர்த்தினோமேயன்றி, தேசத்தின் முன்னேற்றத்துக்கு உதவக் கூடிய தொழில் கல்வி அளிக்கவில்லை. இன்னமும் பிரிட்டிஷ் காலம் போல் குமாஸ்தாப் பட்டாளங்களையே உருவாக்குகிறோம். படித்த இளைஞன் உடல் வணங்கி வேலை செய்ய மாட்டான் என்ற கருத்து தவறு என மேற்கு வங்கம் நிரூபித்திருக்கிறது. கால்வாய் வெட்டுதல், நிலத்தைச் சமன்படுத்துதல் போன்ற மண்வெட்டி பிடிக்கும் காரியங்களில் படித்த இளைஞர்கள் படிக்காத தொழிலாளரோடு சேர்ந்து பெருமிதத்துடன் ஈடுபடுவதைப் பல சந்தர்ப்பங்களில் அம்மாநிலம் நிதர்சனமாகக் கண்டிருக்கிறது. எனவே கல்வித் திட்டத்தில் உடல் உழைத்து வேலை செய்ய வாய்ப்புக்கள் ஏற்படுத்தாதவரை, தொழில் நுணுக்கங்கள் கற்றுத் தரப்படாதவரை நமது இளைஞர்களைக் குறை கூறிப் பயனில்லை. வீட்டிலே பக்கெட் பம்புக்கு வாஷர் மாற்றவோ, சைக்கிள் டியூப்பில் பங்சர் ஒட்டவோ, மின்சார இஸ்திரிப் பெட்டி பழுதானால் ரிப்பேர் செய்யவோ, ஒரு சின்னச் சதுரம் நிலம் கிடைத்தால் காய்கறி பயிரிடவோ கூட கற்றுத் தராத, பழக்கம் ஏற்படுத்தாத கல்வியினால் வாழ்க்கையில் என்ன பயன்?

வேலை வாய்ப்பைப் பெருக்கும் தொழில் கல்வித் திட்டம்; தொழிலகங்கள் பெருக அதிகபட்ச ஊக்கம் இவை இரண்டும் தவிர மூன்றாவதாகக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டமும் முனைப்பாக அமல்படுத்தப் பட வேண்டும்.

இந்த அடிப்படைகளைக் கவனியாமல் குடும்பத்தில் ஒருவருக்கு வேலைத் திட்டம்; படித்த இளைஞருக்குப் பண உதவி என்றெல்லாம் பேசுவதும் செயல்படுவதும் நாடு தழுவிய நோக்கில் நிரந்தரப் பரிகாரமாகாது.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

கருணாநிதி அன்பழகன் ராஜினாமா பற்றி...

○ எஸ். எஸ். டி. ராஜன், சிறுதைநூர்

? இலங்கையில் நடைபெற்ற சம்பவங்களில் உங்கள் உள்ளத்தை நெகிழச் செய்த சம்பவம் எது?

! ஈழத் தமிழர் பலருக்குச் சிங்களவரே புகலிடம் தந்து அவர்களை வெறியர்களிடமிருந்து காப்பாற்றிப் பாதுகாப்பான இடத்துக்கு அனுப்பியுள்ளனர். இதன் மூலம் சிங்கள வெறியர்களின் கோபத்துக்கும் ஆளாகியிருக்கின்றனர். இந்த மனிதாபிமானம் மிக்க நிகழ்ச்சிகள் என் உள்ளத்தை நெகிழச் செய்வதுடன் அன்பு, வெறித்தனத்தையும், துவேஷத்தையும் வெற்றி கொள்ளும் என்ற நம்பிக்கையையும் அளிக்கிறது.

○ காஜா கலியன்பன், நீடூர்

? ரத்னபாலா ஆசிரியர் கே. ஆர். வாசுதேவன் அவர்களைச் சந்தித்திருக்கிறீர்களா?

! நிறையவே சந்தித்திருக்கிறேன். கதிரிலிருந்து அவர் விலகிக் கொண்ட விதம் அவரது சிறந்த பண்பாட்டை உணர்த்தியது. ஆழ்ந்த அறிவை அடக்கம் திரைபோட்டு மறைக்கிறது. சிறுமை



அமிர்தலிங்கம்

கண்டு சீறும் உள்ளத்தை அவரது சாந்தம் தவழும் முகம் ஒளிக்கிறது. சமீபத்தில் அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு உள்ளம் எவ்வளவு உறுதியானது என்பதை எடுத்துக் காட்டியது. அவருடைய ஆசை அனைத்திந்திய எதிர்கால செல்வங்களுக்கென ஆங்கிலத்தில் ஒரு சிறந்த பத்திரிகை வெளிவர வேண்டும் என்பது.

○ சிந்தாமணி ஜெகதீஷ், திருச்சி.

? நெடுமாறனின் தியாகப் பயணம் பற்றி நீங்கள் கூற விரும்புவது?

! பக்தவத்சலம் கொடுத்திருக்கும் அறிக்கை என் கருத்துடன் ஒத்துப் போகிறது. குமரி அனந்தன், நெடுமாறன் ஆகியோருக்கு ஜெயவர்த்தனேயை எதிர்ப்பதைவிட இந்திரா காந்தியை எதிர்ப்பதே முக்கியமாகப் போய் விட்டது. இலங்கைத் துயரத்தை இவர்கள் அரசியலில் தமக்கு லாபம் தேடப்



பக்தவத்சலம்

பயன் படுத்துகிறார்கள். அதிலும் குமரி அனந்தனின் இந்திரா படம் எரிப்புப் போராட்டம் மிகவும் கண்டனத்துக்குரியது.

○ ஆ. சந்திரசேகரன், லால்குடி

? கருணாநிதியின் ரயில் நிறுத்தப் போராட்டத்தை எம்.ஜி. ஆரின் ராஜ தந்திரம்தான் வெற்றி கொண்டது என்றால் ஒப்புக்கொள்வீரா?

! பேஷாக. அதில் இந்திராவின் ஒத்துழைப்பும் இருந்தது. ஆனால் நெடுமாறன், குமரி அனந்தன் ஆகியோரைக் கைது செய்யாமல் பொறுமை காத்தது முழுக்க முழுக்க எம். ஜி. ஆரின் மிகப் பெரிய சாணக்கியம். இதன் மூலம் அவர்கள் போராட்டத்தின் அபத்தத் தன்மையை வெட்ட வெளிச்சமாக்கியுள்ளார். கைது செய்யப்பட வேண்டும் என்ற அவர்கள் ஆசையை நிறைவேற்றியிருந்தால் உணர்ச்சிக் கொந்தளிப்புக்கு இடமளித்து முதல்வர் கெட்ட பெயரும் சம்பாதித்துக் கொண்டிருப்பார்.

○ த. புகழேந்தி, கூகூர்

? கருணாநிதி, அன்பழகன் இருவரும் எம். எல். ஏ. பதவியை ராஜினாமாச் செய்திருப்பது பற்றி...?

! இதனால் ஒரு பயனும் இல்லை. இலங்கைத் தமிழர் பிரச்சினை இதனால்



அன்பழகன்

தீராது. தமிழகம் சிறந்த எதிர்க் கட்சித் தலைவர்களின் பணியைச் சட்ட மன்றத்தில் இழந்து நிற்பது வருந்துதற் குரியது. 'இவர்கள் மீண்டும் தேர்தலுக்கு நின்றால் நாங்கள் எதிர்த்துப் போட்டியிடாமல் விட்டுக் கொடுப்போம்' என்றுகூறிப்பெருந்தன்மையைக் காட்டிக் கொள்ள எம்.ஜி.ஆருக்கு ஒரு வாய்ப்பை அளித்தது தான் மிச்சம்.

○ இரணியல் தயா, சென்னை-29

? தமிழ் ஈழ கோரிக்கையைப் பிரதான கொள்கையாக முன் வைத்துப் பிரும்மாண்ட வெற்றி பெற்றது தமிழர் ஐக்கிய முன்னணி. அவ்வாறிருந்தும் ஈழத் தமிழ் நாடு கோரிக்கைக்குப்பெருந்த ஆதரவில்லை என்று நீர் கூறுவது நியாயமா?

! அந்தக் கோரிக்கையைப் பிரதானக் கொள்கையாகத் தேர்தலில் முன் வைத்ததே தவறு என்கிறேன். ஈழத் தமிழரைத் தவறான பாதையில் அழைத்துச் செல்வதாகும் இது. சீக்கியரின் தனி நாடு கோரிக்கை

யான கலிஸ்தானை நாம் ஒப்புக் கொள்ளத் தயாராக இருக்கிறோமா? இங்கே ஒரு இந்து முஸ்லிம் கலவரம் நிகழ்கிறது எனில் பாகிஸ்தான் படை அனுப்புவதை வரவேற்போமா? கௌரவமான மாற்று யோசனைகள் முன் வைக்கப்படுமானால் சுதந்திரமான ஈழத் தமிழ் நாடு கோரிக்கையைக் கைவிட்டு, மாற்று யோசனைகளைப் பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக இப்போது அமிர்த



லிங்கம் கூறியிருப்பதை அனைவரும் வரவேற்போம்.

○ சி. பூபால் சிங், சென்னை-35

? நீங்கள் கேட்டவை பகுதிக்கு ரேடியோவில் நீங்கள் கேட்டவை ஒலிபரப்பாவது போல் வரையப் பட்டுள்ளதே? தராசுக்குத் தனித் தன்மை கிடையாதா?

! ஓவியர் பாலுவிடம் 'என்ன இப்படிக் குட்டு வாங்கிக் கொடுத்துவிட்டீரே?' என்றேன். அதற்கு அவர், 'நீங்கள் கேட்டவை என்ற தலைப்பே வானொலியிடமிருந்து கடன் வாங்கப்பட்டதாக இருக்கும்போது நான் படம் போட்டுக் காட்டினால் என்னவாம்?' என்று மேலும் ஒரு நறுக்கைவைத்து விட்டார்!

○ எஸ். அன்புமணி, ஈரோடு

? 'உங்கள் குடும்பப் பட்ஜெட்டை யார் கவனிப்பது?' என்பது போன்ற கேள்விகளுக்கு ஏன் பதில் அளிக்கிறீர்கள்? அதனால் வாசகருக்கு என்ன பயன்?

! ஒரு புன்னகை.

○ எஸ். வி. ராஜசேகர், சென்னை

? நல்ல நகைச்சுவை நடிப்பு இருந்தும், ஏன் ஜூனியர் பாலையாவால் பிரகாசிக்க முடியவில்லை?

நடிப்பில் அவர் அசல் அச்சு தம் அப்பாவேதான், தோற்றம் நடிப்பு, குரல் அனைத்திலும். அதுவே அவருக்கு ஒரு 'டிராபேக்' ஆகி விட்டிருக்கலாம். அவரைப் பார்க்கும்போது அவர் அப்பா ஞாபகம் வருமானால் இவர் பிரகாசிப்பது கஷ்டம். தொழில் வர்த்தகத் துறையில் அப்பா போட்ட அஸ்திவாரத்தில் மகன் கட்டடம் எழுப்ப முடியும்; கலைத் துறையில் ரொம்பச் சிரமம். இருப்பினும் அவர் வெற்றி பெற்று இரட்டிப்புப் பெருமை அடைய வாழ்த்துவோம்.

○ நல்லதம்பி, ஆரணி

? ஆயுதப் பயிற்சியுடன் கூடிய தேகப் பயிற்சிக்குத் தடை விதித்து அவசரச்சட்டம் பிறப்பித்திருக்கிறாரே எம். ஜி. ஆர்?

! ஆர். எஸ். எஸ்.ஸின் சிலம்பப் பயிற்சி ஆட்சியாளருக்கு ஏன் அச்



சத்தை அளிக்க வேண்டும் என்பது புரியவில்லை. சினிமாவில் எத்தனையோ வீரம் காட்டி ரசிகர்களை மகிழ்வித்த எம். ஜி. ஆர். வீரத்தை வளர்க்க எதற்காகத் தயங்க வேண்டும், தெரியவில்லை. மேலும் ஐந்து பேர் கூடி சிலம்பம் பழகக் கூடாதென்றால் நாலு, நாலு பேருக்காகக் கற்றுத் தருவது ஆர், எஸ். எஸ்ஸுக்குக் கடினமாயிராது. அதுவும் விட்டால் இருக்கவே இருக்கிறது ஆயுதமற்ற கராட்டே, ஜூடோப் பயிற்சிகள்.

○ வே. கோபால், மாதேமங்கலம்

? மதியழகன் மறைந்து விட்டாரே? அவரைப்பற்றி...?

! பெருமை 1: அறிஞர் அண்ணா தி. மு. க.வை ஆரம்பித்தபோதே ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவர். பெருமை 2: தொடர்ந்து மும்முறை தமிழக சட்ட சபை உறுப்பினராக ஒரே தொகுதியிலிருந்து (ஆயிரம்விளக்கு) தேர்ந்தெடுக்கப் பட்டவர். பெருமை 3: அண்ணா, கருணாநிதி ஆகிய இருவரது அமைச்சரவைகளிலும் இடம் பெற்றவர். பெருமை 4: சபாநாயகராகவும் விளங்கியவர். பெருமை 5: ''தென்னகம்'' ஆசிரியர் பெருமை 6: அரசியல் காரணங்களுக்காக ஏழு முறை சிறை செல்லத் தயங்காதவர். இவை ஒருபுறமிருக்க, சபாநாயகரான இவரது ஒலி பெருக்கி அணைக்கப்பட துணை சபாநாயகர் சட்ட சபையை நடத்தியதுதான் மறக்க முடியாத பரபரப்பான சரித்திர நிகழ்ச்சியாகப் பேசப்படும். இதன் பிறகு இவர் அ. தி. மு. க.வுக்குப் போனது, மறுபடி தி. மு. க.வுக்கு வந்தது... மறந்துவிடுவதே நல்லது!

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
ஆர். சந்திரசேகரன்,
43, புது அக்ரஹாரம்
லால்குடி-621.601





"இவர் என்.ஆர். ரவீந்திரன். சுருக்கமா ரவின்னு கூப்பிடுவோம். இவர்தான் இது நாள்வரையிலும் ஒங்க ஸீட் வொர்க்கைப் பார்த்துக்கிட்டிருந்தார். ஏதாவது சந்தேகம் வந்தா இவரைக் கேட்கலாம்'' — மானேஜர் கொஞ்சம் உயரமாயும் சிவப்பாயும் இருந்த ஒருவனை அறிமுகம் செய்து வைத்தார்.

''வணக்கம்!'' — கைகூப்பினாள் காயத்ரி. அவனும் கைகூப்பி முறுவலித்தான். முகம் முழுதும்-சந்தோஷம் படர மெலிதாய் வணக்கம் சொன்னது அவளுக்குப் பிடித்தது. அந்த வங்கியின் திருப்பூர்க் கிளையில் தனக்கு அறிமுகப்படுத்தின ஏழு பேரில் இவன் நேசத்துக்கு உரியவன் என்று இவளுக்குப் பட்டது. அவன் சிரிப்பிலும் பார்வையிலும் சினேகம் இருந்தது.

எட்டாவது ஸ்டாஃப்பாகச் சேர்ந்த இவளும் அவனுமே முப்பத்தைந்துக்குக் கீழாக இருப்பவர்கள். மற்ற ஆறு பேரும் நாற்பதைக் கடந்து விட்டவர்களாக இருக்கும். மற்றொரு லேடி ஸ்டாஃப்பான விசாலாக்ஷி (காதோரங்களில் நரையோடின) உதடடில் கூட ஒட்டாத புன்னகையோடு வணக்கம் சொன்னாள்.

ரவீந்திரன் சிறிது நேரம் அவள் பார்க்க வேண்டிய வேலைகளை விவரித்தான். வேலை ஈஸி என்கிற பாவனையில் சொன்னது அவளுக்குப் பிடித்திருந்தது. புதிய இடம், ஸ்டாஃப்களும் எப்படி இருப்பார்களோ என்று மனத்தில் வியாபித்திருந்த கவலை கவடு தெரியாமல் அவனால் மறைந்தது. நன்றி சொன்னாள் அவன் முடித்ததும்.

அவனுக்குக் கல்யாணம் இன்னும் ஆகவில்லை என்பதைத் · தற்செயலாகத்தான் காயத்ரி அறிந்தாள். மூன்றாவது நாள் மாலை. இவள் டாய்லெட் போய்விட்டுச் சிறிதுநேரம் பாத்ரூம் கண்ணாடியில் புடவை மடிப்புகளையும் கலைந்த கேசங்களையும் சரி செய்கிறபோது ராமநாதன் செட்டியாரின் அடிக்குரல் பேச்சு லேசாகக் கேட்டது.

''அப்பா, ரவி... நீயும் 'பேச்சலர்'... காயத்ரியும் கல்யாணம் ஆகாதவ... பார்த்துப்பா... அடிக்கடி அவ உன்கிட்டச் சந்தேகம் வேறே கேட்கிறா!''

''சேச்சே! தப்பா நினைக்காதீங்க செட்டியார். நியாயமாகவே தவிர்க்க முடியாதப்பதான் சந்தேகம் கேட்கிறாங்களே தவிர நீங்க நெனைக்கிற மாதிரி இல்லே!''

காயத்ரி லேசாகச் சிரித்துக் கொண்டாள். செட்டியார் ரொம்பப் பொல்லாத ஆள் தான்! ரொம்ப 'க்ளோஸ்' நோட் பண்ணுறாரே!

வீடு திரும்பியதும் பெரியப்பா அன்றுதான் அவளின் சௌகரியங்களைப் பற்றி விசாரித்தார். தன் கம்பெனியின் வியாபாரம் தொடர்பாகச் சென்னை போயிருந்தார். திருப்பூர்க்காரங்க எப்படிப் பழகுறாங்க என்று கேட்டார். காயத்ரிக்கு ரவீந்திரனின் நினைவு வந்தது.

''நல்லாப் பழகுறாங்க பெரியப்பா... கஷ்டமாத் தெரியலே!''

''திருப்பூர் க்ளைமேட் உனக்குப் பிடிச்சிருக்குமே!''

ரவீந்திரனும் வந்த முதல் நாளே திருப்பூர்க் க்ளைமேட்டைப் பற்றிக் கூறியது இவள் நினைவுக்கு வந்தது. 'இதனால்தான் இங்கே பனியன் நிட்டிங் அதிகம்; நம்ம கஸ்டமர்ஸ்ல பெரும்பாலும் நிட்டிங் பேக்டரீஸ் வச்சிருக்கவங்கதாம்' என்றான்.

''எங்க பெரியப்பாவும் நிட்டிங் கம்பெனி தான் வச்சிருக்கார். 'வைகை டெக்ஸ்' கேட்டிருக்கீங்களா?''

''ஓ! நீங்க பெரியப்பா வீட்லதான் தங்கியிருக்கீங்களா? நான் கூடக் கேக்கணும்னு நெனைச்சேன். அப்ப, சாப்பாட்டுப் பிரச்னை இல்லேன்னு சொல்லுங்க!''

''ஆமாமா!'' — காயத்ரி முறுவலித்தாள்.

அவள் காதலித்தால் அப்பா சம்பந்த-மூர்த்தி நிச்சயமாய்த் தடை விதிக்க மாட்டார். உடம்பின் வியாதிகளைப் பார்த்துக் குணமாக்கத் தெரிந்தவருக்கு மனசையும் புடிக்கத் தெரியும். ஆனால் இவளுக்குத்தான் யார்மீதும் இதுவரை இப்படியொரு எண்ணம் பூத்ததில்லை. மதுரை மீனாட்சி கல்லூரியில் பி. ஏ. ஆங்கில இலக்கியம் முடித்தாள். பிறகு தியாகராசர் கல்லூரியில் எம். ஏ. முடித்தாள். தினமும் திருநகரிலிருந்து பஸ்ஸில்தான் போய் வந்தாள். எம். ஏ.யில் கோ-எஜுகேஷன் வேறு. ஆனால், மனசில் சின்னச் சலனம் கூட அப்போது வந்ததில்லை.



விருட்சங்களின் விதை

ஜானகிமகன்

ஆனால் அதை இப்போது ராமநாதன் செட்டியாரின் பேச்சுத் தூண்டி விட்டதோ? குருவி உட்காரப் பனம்பழம் விழுந்ததோ?

ரவீந்திரன்!... நல்ல நேம்! பர்சனாலிட்டியும் இருக்கிறது. செக்கென்று அரைக் - கை சிலாக்கை இன் பண்ணி வருகிற அழகே தனிதான்... நல்ல உயரம்... சிவப்பு. அடர்த்தியான மீசையே ரொம்பக் கவர்ச்சியாக அவன் முகப் பொலிவைக் கூட்டுகிறது.

சனிக் கிழமை மதியம் மணி பன்னிரண்டை நெருங்கிக் கொண்டிருந்தது. சீக்கிரம் முடித்துவிட்டு இரண்டு மணிக்குள் டாலி செய்ய வேண்டும். வேர்க்க விறுவிறுக்க அப்போது நுழைந்த ஒருவன் இவளிடம் அவசரமாய் ஐயாயிரம் 'வித்ட்ரா' பண்ண வேண்டும் என்றான். வாங்கிப் பார்த்தாள். கரண்ட் அக்கௌண்ட். ரவியை நோக்கிக் கையைக் காட்டினாள்.

ரவீந்திரன் வந்தவன் மீது எரிந்து விழுந்தான். வந்தவன் வெகு நேரம் ஸாரி கேட்டதை இவன் பொருட்படுத்தவே இல்லை.

''சார்... இன்னிக்கு லேபரர்ஸுக்குக் கூலி கொடுக்கணும். ப்ளீஸ் அட்ஜஸ்ட் பண்ணுங்க!''

ரவி மசியாமல் இருந்தது இவளுக்கு வேதனையாகப் போயிற்று.

இவள் இரண்டு மணிக்குக் கிளம்பும் போது அவனும் வெளியே வந்தான். பக்கத்தில்தான் பஸ் நிலையம் இருந்தது. மனத்தில் அரித்துக் கொண்ட இருந்ததை அவனிடம் கேட்டே விட்டாள்.

''அந்தக் கஸ்டமருக்காக நீங்க கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணியிருக்கலாம். பாவம். கூலி கொடுக்கப் பணம் எடுக்க வந்திருக்கிறான்!''

''எப்படி முடியும் சொல்லுங்க? இரண்டு மணிக்குள்ள டாலி பண்ணணும். பசி உயிரை வாங்குது. கடைசி நேரத்தில வந்து கழுத்தறுக்கிறான்... இப்படிச் செஞ்சாத்தான் புத்தி வரும். அடுத்த தடவை நேரத்துக்கு வருவான்!''

அவன் குரல் ஓங்கப் பேசியதைக் கண்டு அவள் மேலும் வாதம் செய்ய விரும்பவில்லை. மௌனித்து விட்டாள். மனிதாபிமானக் கண்ணோட்டம் சிறிதும் இல்லாமல் தவற்றுக்குத் தண்டனை கொடுத்தே தீர வேண்டும் என்கிற அவனுடைய மனப்பான்மையை அவள் விரும்பவில்லை.



ஐந்து மணிக்கே அந்தி கறுத்துவிடும் டிசம்பர் மாதத்தின் இரண்டாவது வாரத்தில் ஒரு நாள். ஐந்து மணி அடித்ததும் வெளியேற முடியவில்லே. காரணம் மழை கொட்டிக் கொண்டிருந்தது. அன்று நான்கு மணிக்கே எல்லோருக்கும் வேலே முடிந்திருந்தது. இதுபோன்ற நேரத்தில் செட்டியார் சும்மா இருப்பதில்லே. எதைப் பற்றியாவது பேச்சைக் கிளப்பி விட்டுவிடுவார். அந்த மழை நேரச் சாயங்காலத்தில் பெண்களின் சுதந்திரம் பற்றிப் பேச்சு வாதமாக வளர்ந்து விட்டது.

''வீட்டுக் காரியங்களேச் சரியாச் செய்யறதில்லே. புருஷனேச் செய்யச் சொல்றுங்க. அப்படியே செஞ்சாலும் ரொம்ப அக்கறையாச் செய்யறதில்லே. சேட்டா தெரியலேங்கறுங்க. முடியலேங்கறுங்க. மோஸ்ட்லி கொஞ்சம் வசதியான குடும்பத்திலேருந்து வந்த படிச்ச லேடீஸ் இப்படித்தான்! வேலேக்காரி வேணுங்கறுங்க... என் ஃப்ரண்டோட வொய்ஃப் இப்படித்தான்!'' என்றுன் ரவி.

''நீங்க என்ன சொல்ல வர்றீங்க?''

காயத்ரிதான் மீண்டும் கேட்டாள்.

''என்னேட சொந்தக் கருத்து இது. காலேஜ் படிப்பு நம்ம பெண்களுக்குத் தேவையேயில்லே. பட்டப் படிப்பு மனசைக் கோழையாக்கி விடுது... யதார்த்தங்களேப் புரிஞ்சுக்க விடுறதில்லே... வாழ்க்கையில ஃபைனன்ஷியலா ஏதாவது சின்னக் கஷ்டம் வந்தாக் கூட உடனே மனமுடைஞ்சு போறுங்க... புருஷனேட போஸியா பிரஸ்டீஜ் பார்த்துக்கிட்டு வெறுமனே எதிர்வாதம் பண்ணுவாங்க... சரியா விட்டுக் கொடுக்கிறதில்லே!''

இவள் அவனே மறுத்துப் பேசினுள். அவன் அதை ஏற்றுக் கொள்ளவில்லே. பி. காம் படித்த இவனுக்குப் படித்த பெண்களேப் பற்றி இப்படியொரு அபிப்பிராயம் இருப்பது ஆச்சரியம் தந்தது. மேல்சாவனிச உணர்வும் கன்சர்வேடிவ்வான மனமும் இவனிடம் அதிகமாகவே உள்ளன என்று உணர்ந்தாள். இவன் தனக்கு மனேவியாக வருபவளின் எண்ணங்களுக்கு மதிப்புத் தராமல் தன்னிச்சைத்தனமாகவே நடப்பான் என்று புரிந்தபோது அவளுக்குள்ளே அவளேயறியாமலேயே ஒரு வருத்தம் நுழைந்து போயிற்று.

சித்திரைத் திருவிழாவுக்காகக் காயத்ரி மதுரை சென்றுள். ரவீந்திரனேயும் அழைத்தாள். அவன் வர விரும்பவில்லே.

மீனுட்சியம்மன் திருக்கல்யாணத்தன்று கல்யாணத்தைப் பார்த்துவிட்டுக் காரில் வீடு திரும்பியதும் அப்பா இவளின் கல்யாணம் பற்றி இவளிடமே கருத்துக் கேட்டார். நல்ல வரன் வந்திருப்பதாகக் கூறினுர். டாக்டர் ஆகப் பணி புரிகிறுன் என்றும், சொந்தமாகக் கிளினிக் ஒன்று நடத்துகிறுன் என்றும் தெரிவித்தார். அந்த டாக்டருக்கு இலக்கியத்தில் ரொம்பவும் ஈடுபாடென்றும் தன் தாயின் பெயரில் சிறு கதைகள் கூட எழுதி வருகிறுன் என்றும் ஆச்சரியத்தோடும் உற்சாகத்தோடும் பேசினுர்.

''பேர் நேம் என்னப்பா?''

''விஜயலட்சுமி... என்னம்மா நீ என்ன சொல்றே?''

''இந்த வருஷம் போகட்டுமேப்பா!''

''சரியம்மா! உன்னிஷ்டப்படியே செய்கிறேன்.''

திருப்பூர் திரும்பியதும் மறு நாள் வேலேக்குச் செல்லும்போது அவனேயும் மீறி அவள் மனம் படபடத்தது. பேங்கில் நுழைந்தபோது இயல்பான நிலேயில் அவள் மனம் இல்லே. அவனேப் பார்த்ததும் அவன் முகத்தில் சந்தோஷம் மின்னலாய் வெளிச்சமிட்டு உறையும் நிமிடத்தை வெகு ஆவலாய் எதிர்பார்த்தாள். ஆனுல் ஏமாற்றம். அன்று ரவி வரவில்லே. விசாலாட்சியிடம் காரணத்தைக் கேட்கலாமா என்று நினேத்துத் தயங்கி விட்டாள்.

அவளே ஆச்சரியப்படும்படி அன்று மாலே நாலரை மணிக்கு மேலே விசாலாட்சியே சகஜமான பாவனேயோடு பேச உட்கார்ந்தாள். அருகில் யாருமில்லே.

''காயத்ரி... பேங்க்ல வேலே பார்க்கறவங்க கை நிறையச் சம்பளம் வாங்கறுங்கன்னு ஜனங்களுக்கு நம் மேலே ஒரு ஜெலஸி இருக்கு. அது தவறுதான். ஆனு நம்மில சில பேர் நடந்துக்கிறவிதம் அதுக்குத் தூபம் போட்டுறப்பலத் தானே இருக்கு... நிறையப் பணத்தைக் கண்ணுல பார்க்கப் பார்க்க மன சில ரொம்ப ஆசை வருமோ என்னமோ...!''

காயத்ரிக்குப் புரியவில்லே. ''எதுக்கா சொல்றீங்க?'' என்றுள்.

''இந்த ரவியைப் பத்திச் சொல்ல வரேன்'' என்றதும் இவள் மனம் திடுக்கிட்டது. ''இன்னிக்கு வரல போலிருக்கே!'' என்றுள் மெதுவாக.

''எப்படி வருவான்?...லீவாச்சே...மூணு நாளாச்சே. இவன் எண்ணூறுக்கும் மேலா வாங்கறுன். இவனுக்கு அண்ணன் ஒருத்தன் இருக்கான். அவன் ஸ்டேட் பாங்க்ல வேலே

''உன் கணவர் உனக்கு மிக்ஸியும் கிரைண்டரும்தான் வாங்கித் தந்தாரே அப்படியும் உனக்குக் கைவலி எப்படி வந்தது?''

''உம்... அதற்கான ஸ்விட்சை நான் தானேடி போட வேண்டியிருக்கு?''



செய்யறான். ஆயிரம் இருக்கும் சம்பளம். இருந்தும் பேராசையைப் பாரேன். அண்ணன்காரனுக்குப் போன வருஷம் கல்யாணம் நடந்துச்சு. நாங்கெல்லாம் போயிருந்தோம். பொண்ணு என்ன அழகு தெரியுமா! பாவம் நிம்மதி இல்லாம ஆக்கிட்டானுக... கல்யாணத்தப்ப பேசினபடி நகை போடலேன்னு அவளைப் பெத்த வீட்டுக்கு அனுப்பிச்சிட்டாங்க. இந்த ரவியும் வீட்டோட சேர்ந்துகிட்டு பொண்ணு வீட்ல போய்த் தகராறு பண்ணியிருக்கான். பொண்ணோட அண்ணனுக்கும் இவனுக்கும் கைகலப்பே ஆயிருச்சாம்... என்ன கொழுப்பு பாருங்க காயத்ரி? 'ட்ரெஸ்ல' இருக்கிற டீசன்ஸி மனசில இல்லே. ரொம்ப கிரீடிஃபெல்லோ இந்த ரவி. படிச்சு என்ன பிரயோஜனம்? பண்பில்லையே!''

காயத்ரி திகைத்துப் போயிருந்தாள்.

மறுநாள் அவன் வேலைக்குவந்திருந்தான். யாரும் அறியாமல் இவளைப் பார்த்துப் புன்னகைத்தான். இவள் முறுவலிக்கத் தயங்கி அமர்ந்தாள். அவனாக இவளிடம் பேச வந்த சமயங்களில் பேச்சைச் சுருக்கிக் கொண்டாள். அன்று மாலை அவள் பஸ் நிலையத்தில் நின்றிருந்தபோது இவன் அருகில் வந்தான். சித்திரைத் திருவிழாவைப் பற்றி விசாரித்தான். அவள் அதிகம் பேசவில்லை.

''காயத்ரி... ஒங்க கிட்ட ரொம்ப நாளா சொல்லணும் சொல்லணும்னு நெனைச்சுக்கிட்டு இருந்ததை இன்னைக்குச் சொல்லலாம்னு நெனைக்கிறேன். காயத்ரி... ஐ லவ் யூ... என் மனைவியா நீங்க... நீ வரணும்னு ஆசைப்படறேன்... மனமார உன்னை நேசிக்கிறேன்.... இந்தக் கடிதத்திலே எல்லாம் எழுதியிருக்கேன். அதிலிருக்கிற அட்ரஸுக்கு ஒங்க முடிவை எழுதுங்க...!''

நீட்டிய கடிதத்தை அவள் வாங்கவில்லை.

''ஸாரி மிஸ்டர் ரவீந்திரன்: வெரி ஸாரி. ஆரம்பத்தில ஒங்களைப் பத்தி ஒண்ணும் தெரியாதப்ப எனக்கும் ஓர் எண்ணம் வந்தது... பட் இப்போ இல்லே... காரணம் பல விஷயங்களிலே ஒங்க தாட்ஸ் அண்ட் ஐடியாக்களும் என்னோட எண்ணங்களும் ஒத்துப் போகலே.. ஏதாவது ஒரு வகையில ஒருத்தருக்கொருத்தர் மேலே ஏற்படற ஈர்ப்பு. எண்ணங்கள் ஒத்துப்போனாத்தான் மனசில வேர் விடும். அது இல்லே... எண்ணங்களாலே முரண்படற உறவுகள் காலம் பூரா நிலைக்கிறதில்லே... கல்யாண பந்தம்கிறது நேத்துப் பேஞ்ச மழையில முளைச்சு அழிகிற காளான் செடி இல்லே... அது ஒரு விருட்சம் மாதிரின்னு எனக்குப் படறது. காதல் அந்த விருட்சங்களுக்கு விதையாகணுமே தவிர காளான்களுக்கு விதையாகிவிடக் கூடாது.''

இந்த இடத்தில் நிறுத்திவிட்டு அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் தலை குனிந்திருந்தான். மார்பில் கட்டியிருந்த அவன் கைகளில் அவனுடைய காதல் கடிதம் கசங்கிக் கொண்டிருந்தது.

பஸ்ஸில் ஏறி அமர்ந்து கொண்டாள் காயத்ரி. அவள் மனசில் அப்பா சொன்ன அந்த டாக்டரைப் பற்றிய நினைவுகள் தளிர்த்தன.



பக்த துருவ மார்க்கண்டேயா

ஒரே கல்லில் இரண்டு கொழு கொழு மாங்காய்கள்.

என்றும் பதினாறு மார்க்கண்டேயன் ஜனனத்தில் ஆரம்பித்து, பாதை விலகி என்றும் பிரகாச துருவனின் கதையைச் சொல்லி (மிகவும் அழகான ராஜபாட்டை), மறுபடியும் மார்க்கண்டேயனை சிவன் காப்பாற்றுகிற கதை.

குழந்தைகளுக்காக குழந்தைகள் நடித்த படம். பெரியவர்களையும் இழுத்துப் பிடிக்கிறதென்றால், காரணங்கள்:

- கொழுக் மெ ¨ழுக் தொப்பையைக் காட்டிக் கொண்டு (எவ்வளவு அழகு அந்தத் தொப்பை உருட்டல் நடை!) படம் முழுவதும் வளைய வரும் பேபி வம்ஸிக்ருஷ்ணாவின் அலட்டல் இல்லாத துருவ நடிப்பு.
- காவியுடுத்தித் தவம் செய்யக் கிளம்பி காட்டில் தண்ணீர் கூடக் கிடைக்காமல் தவித்து மயங்கி விழும் குழந்தைக்கு தாய் தன் அரண்மனை நாராயணச் சிலைக்குச் செய்யும் பாலாபிஷேகப் பால், பக்கத்துப் பாறையைப் பிளந்து கொண்டு பீய்ச்சியடித்துக் குழந்தை வாயை நனைக்கும் சிலிர்ப்பு.
- தீயின் ஆக்ரோஷம், ஆழி அலைகளின் அபாரப் பாய்ச்சல், கிங்கரர்களின் அட்டூழியம், மிருகங்களின் பயமுறுத்தல் என்று விஸ்தாரமாய்க் காட்டிய போதும் அலுப்பேற்படாமல் கொடுத்த விதம்.
- மழலை ததும்பும் மற்ற குழந்தைகளின் மாறுதலான வேஷங்கள்.
- சிண்டு முடியும் நாரதராய் வரும் ரவிஷங்கரின் நமுட்டுச் சிரிப்பு நடிப்பு.
- ஷோபனா, ரோகிணியின் தாய்க் குமுறல்கள் சீற்றங்கள், கண்ணீர்கள்.
- சுருசியின் தாயாக வரும் சுதாவின் வில்லி நடிப்பு.
- கோப முத்திரை கூடுதலாய்த் தெறிக்கும் சிவ தாண்டவம்.
- இனிய இசையில் அள்ளித் தெளித்த பாடல்கள்.

திரைக்கதை, வசனம், கலை, தொகுப்பு, இயக்கம் — இன்னும் ஏதாவது மிச்சமிருக்கிறதா என்ன? — ஆ, இசையமைப்பில் பாதி பொறுப்பு (மீதி பொறுப்பு: எஸ். ராஜேஸ்வர ராவ்) அத்தனையும் ஏற்றிருக்கும் டாக்டர் பானுமதி ராமகிருஷ்ணாவுக்குத் திருஷ்டி சுற்றிப் போட வேண்டும். இப்படி ஒரு சிறப்பான படத்தைக் கொடுத்ததற்கு.

(பெரிது படுத்தக் கூடாத கறுப்புப் புள்ளிகள்: அந்த 'முதலிரவு'ப் பாட்டு, நடுத் தெரு குரூப் டான்ஸ், துருவனைத் திருப்பி அனுப்ப முயற்சி செய்யும் முனிவரின் அற்பமான ஆடல் காட்சி, இன்னும் சில டெக்னிகல் ஓட்டைகள்).

-ஜெய மன்மதன்

''தன்னைத் தானே உயர்ந்த மனிதனாக நினைத்துக் கொள்பவன் உண்மையிலேயே உயர்ந்த மனிதன் இல்லை!''

—வில்லியம் ஹாஸ்லிட்

''குழந்தைப் பருவ இதயத்தை எவன் இழக்காமல் இருக்கிறானோ அவனே உயர்ந்த மனிதன்.''

—மென்ஸியஸ்


''உயரிய பதவிகள் உயர்ந்த மனிதர்களை மேலும் உயர்வடையச் செய்கின்றன. தாழ்ந்த மனிதர்களை இன்னும் தாழ்வடையச் செய்கின்றன.''

ஜீன்டி. லாபரூயேர்

''சந்தர்ப்பம் சாதகமாக இல்லையென எந்த உயர்ந்த மனிதனும் குறைப்பட்டுக்கொள்ள மாட்டான்.''

—எமர்ஸன்

தொகுப்பு: செந்தமிழ்ச்செல்வன்



ஜெயமன்மதனுடன் ஒரு பேட்டி

''வணக்கம், நான் ஒரு பத்தி ரிகை நிருபர். உங்களைப் பேட்டி எடுக்கலாம்னு... சினிமாப் பார்த்து விமர்சனம் எழுதறீங்களே, பாவம், உங்களுக்கு வேற தொழிலே கெடைக்கலியா...?''

''எரியற நெருப்பிலே எண்ணெய் ஊத் தாம விஷயத்துக்கு வாங்க.''

''ரொம்பக் கடுப்பா இருக்கீங்க போலி ருக்கு.... சமீபத்தில் என்ன படம் பார்த் தீங்க?''

''போலீஸ் போலீஸ்....''

''அதான் கடுப்பா? கதை எப்படி?''

''ஒரு இன்ஸ்பெக்டர் அண்ணன். அவ ருடைய தங்கச்சி. தங்கச்சியோட ரெண்டு பொண்ணுங்க. இன்ஸ்பெக்டருக்கு அடி உதை. கொலே. தங்கச்சி கற்பழிப்பு கொலே. கொலையைப் பார்த்த சின்னப் பொண்ணு கண்ணுல சதக் சதக். பார்வை அவுட். பெரிய பொண்ணு அனிதா வளருது. பழி வாங்கும் பாவை. குருட்டுத் தங்கையை வேற கற்பழிச்சுக் கொலே. அப்புறம் பழி வாங்கும் பாவைக்கு மகா ரோஷம் வீரம் லாம் வந்து டுமீல், டுமீல், டுமீல்....''

''இந்தக் கதையை நான் எங்கேயோ கேட்ட மாதிரி இருக்கே....''

''வேற ஏதாவது தமிழ்ப் படம் பார்த் திருப்பீங்க....''

''படத்தில நடிச்சவங்க பத்தி....''

''சில்க் ஸ்மிதா... அவங்கதான் பழிவாங் கும் பாவை, சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் (மஃப்டி), டான்ஸ் ராணி, ஆல் இன் ஒன். கொஞ்சிப் பேசி உதட்டைச் சுழிக்கறச்சே பாருங்க.....''

''ஐயோ வேணுங்க... கேக்கறச்சயே மனசு ஒரு மாதிரி இருக்குது....''

''சப் இன்ஸ்பெக்டரா மனோரமா. ஐயோ பாவங்க.....''

''அப்புறம்?''

''ஜி. சீனிவாசன் — சாமியார் வேஷத்து வில்லன். சங்கிலி முருகன் நீலப் படம் எடுக்கற வில்லன். செந்தாமரை — ம்ஹூம்— இவர் ஒரு வில்லன். ஏதோ பொழுது போகாம சடுகுடு வெளையாட வந்தா மாதிரி இருக்கு....''

''இவ்வளோதானா?''

''இன்னும் இருக்கே... குருடு — சுலக்ஷணா. அம்முக்குட்டி வனிதா. புதுசா ஒரு ஆள்— நரேஷ்குமாரோ என்னவோ? எதுக்கும் அடுத்த வாரம் வாசகர்கள் எழுதற கடிதங் களைப் பாருங்க... அவங்கதான் எல்லா விஷ யங்களையும் விரல் நுனியில் வச்சிருக்காங்க, குட்டறதுக்குன்னே ரெடியா....''

''ம்யூசிக்....?''

''எம். எஸ். வி.ன்னு ஒரு காலத்தில பிர மாதமான பாட்டுல்லாம் கொடுத்தவரு...''

''டைரக்ஷன்?''

''வேற ஏதாவது இருந்தாக் கேளுங்க ளேன்....''

''படம் போலாமா, வேணாமா?''

''நீங்க என் கீப்ரெண்டா இல்லியான்ற தைப் பொறுத்திருக்கு இதுக்குப் பதில்.''





கல்கி வாங்கியதும் என்றும் போல் ஆவலுடன் பக்கங்களைப் புரட்டி 'தராசு' பதில்களைப் படித்தேன். ஈழத்தமிழர் பற்றி பதில்களைப்படித்ததும் எரிச்சலான எரிச்சல். கல்கியைச் சுக்கு நூறு கிழித்துப் போட்டேன். அதன் பின்னர் தான் நினைவு வந்தது. மற்ற பகுதிகளை படிக்கவில்லையே என்று. இன்னும் 1.20 அழுது தொலைந்தேன்.
சென்னை-29 இளையபாரதி 'தயா'

● இலங்கைப் பிரச்னை குறித்து தராசுப் பகுதியில் கேட்கப்பட்ட கேள்விகள் அனைத்திற்கும் அளிக்கப்பட்டுள்ள பதில்கள் யதார்த்தமாய் எழுதப்பட்டிருந்தன.
திருச்சி-14 எஸ். முரளி

● வரதட்சிணை என்னும் வஞ்சகத் தீயில் வெந்து கருகும் பெண்களுக்கு டில்லியில் உள்ள மாதர் சங்கங்களைப் போல ஆங்காங்கே ஏற்பட்டால்தான் விமோசனம் கிடைக்கும்.
ஊரூர்வெளிக்கடை ராஜன்

● உண்மையான காதலா நட்பா பாசமா என்று புரிந்து கொள்ள முடியாத உறவை சித்திரித்த சிறுகதை ''எனது வெண்ணிலா'' சோக முடிவைக் கண்டு மெய்சிலிர்த்துப் போனேன்.
அத்திமலைப்பட்டு மது ஜெயபால்

● சுஜாதாவின் ''மாறுதல் வரும்'' நாடகப் பகுதி என்போன்ற நாடகப் பித்தர்களின் ஆவலைத் தணித்து ஆறுதல் தரும்!
கோவை கலைக்கண்ணன்

● ரெட்டைத் தலைப்புக் கதைகளைப் போட்டு அதுக்காக ஒரு போட்டியும் வச்சு.... ம்.... அருமையான யோசனை சார்!
சென்னை-4 மயிலை கோபி

● ஜே. எஸ். ராகவனின் சிறுகதை சிரிக்க வைத்தது. அன்னத்தின் சிறுகதை சிந்திக்க வைத்தது. ஜெயரதனின் சிறுகதையோ குடும்பச் சூழ்நிலையைப் படம் பிடித்துள்ளது.
மதுரை-1 எஸ். முத்துபாண்டி


● வாரா வாரம் செலவே இல்லாமல் முக்கிய புண்ணிய ஸ்தலங்களுக்கு கூட்டிச் செல்லும் ஆவத்திக்கு எனது பாராட்டுக்கள்.
கரூர் பி. பாலசுப்ரமணியன்

● இலங்கையில் தமிழ்ப் பெண்கள் 20பேர்களை ராணுவத்தினர் கற்பழித்ததைத் தொடர்ந்து தீவிரவாதிகள் யாழ்ப்பாணத்தில் ஒரு ராணுவ ஜீப்பைத் தாக்கி 13 சிங்கள ராணுவத்தினரைக் கொன்றனர். இலங்கை ராணுவ வீரர்கள் உடனடியாக 13 தமிழர்களைப் படுகொலை செய்திருக்கின்றனர். இலங்கை அரசு மட்டும் இந்தச் செய்தியை அமுக்கி வைக்காமல் வெளியிட்டிருந்தால் இலங்கைத் தமிழர் மீது இந்த அளவுக்கு வெறித் தாக்குதல் இருந்திருக்காது எனப் பார்வையாளர்கள் சுட்டிக் காட்டுவதாக 4ம் தேதி தினமணி நாளிதழில் குறிப்பிட்டிருப்பதைத் 'தராசு'வின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.
போடிநாயக்கனூர் எஸ். சையது முகமது

● இந்துவை வாரமாய்த் தன் வளமான கவர வரிகளின் மூலம் கல்கி வாசகர்களைத் தன் வசப்படுத்தி வைத்திருந்த வைரமுத்து சென்ற வாரம் 'கவிதையும் மன்மதக் கலைதானே?' எனும் தலைப்பில்கவிதை என்றால்என்ன என்பதை விளக்கிக் கூறியதுடன் வளர்ந்து வரும் இளம் கவிஞர்களுக்காகத் தனக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஒரு பக்கத்தையும் தந்து தான் ஒதுங்கிக் கொண்டிருப்பது பாராட்டத் தக்க சிறப்புடையதாகும்.
நெல்லிக்குப்பம் ரா. ஜோதிராமன்

● ராஜீவ் காந்தியின் வரிவிதிப்பைப் பற்றிய பேச்சை தலையங்கத்தில் படித்து அவருக்கு இது எல்லாம் கூடப் பேசத்தெரியுமா என்ன? என்று ஆச்சரியப்பட்டேன். அதை தலையங்கத்தில் வெளியிட்ட உங்கள் பண்பை எண்ணி மகிழ்ந்தேன்.
சின்னசேலம் கோ. பாபு

● நம்ப தம்பி பாக்யராசு படத்தின் மேல ஆனே முடிச்சு விமர்சனத்தை என்மனசில் என்ன இருந்திச்சோ அதை அப்படியே எழுதிட்டீங்களே!
பாண்டிச்சேரி-1 தெ. நாராயணமூர்த்தி





இலவசம்!

கவர்ச்சியான ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் கிண்ணம், 2 டின் ஃபாரெக்ஸ் வாங்கும்போது.

சில தேர்ந்தெடுத்த ஊர்களில் மட்டுமே வழங்கப்படுகிறது. ஸ்டாக் உள்ளவரை.



க்ளாக்ஸோ வழங்கும் **ஃபாரெக்ஸ்®**

வளரும் குழந்தைகளுக்கான விசேஷ திட உணவு.

CASGLF-43-203 TAM

மாலையில் பூக்கும் மலர்கள்

4

''செக்''—

''க்ரேட்! கௌரி நீ நிஜம்மாவே குருவை மிஞ்சின சிடை ஆயிட்டியே!''

''அது என்ன சிடை முறுக்கு, பாலா?''

''சீடனுக்குப் பெண்பால் சிடை...''

''கடவுளே! யாராவது கேட்டாங்கன்னா, எங்க அமுதத் தமிழை இப்படியா கொலை பண்ணுவேன்னு ஒழி ஒழின்னு ஒழிக்கப் போறாங்க...''

''யார் கேக்கப் போறாங்க! இங்க நீயும் நானும் தனியா இருக்கோம். கதவு வேறு தான் போட்டிருக்கு. அப்புறம் என்ன? குருவை மிஞ்சின சிடையானதுக்குத் தட்சிணை கிட்சிணைஒண்ணும் கிடையாதா டார்லிங்?''—

''கிடையும்... கிடையும்: கொஞ்சம் பொறுங்க... முதல்ல என் கேள்விக்குப் பதில் வேணும். நிஜம்மா நான் நல்லா ஆடறேனா, இல்லே நீங்க வேணும்னே உல்லுல்லாக் கட்டிக்கு விட்டுக் கொடுத்தீங்களா?''

''உன் மேலே உனக்கு நம்பிக்கை இல்லையா?''

''இருக்கு... ஆனா, அதைவிட உங்க திறமைல நம்பிக்கை இருக்கிறதாலதான் இந்தச் சந்தேகம்!''

''நீ கத்துக்கிட்டு ஒரு வாரம்தானே ஆறதுன்ற திமிர்லே நான் கொஞ்சம் கவனக் குறைவா ஆடியிருக்கலாம் — ஈவன் தென் யு டி ப்ளே ரியலி வெல்...''

''தாங்க்ஸ்.''

''தட்சிணை?''

கௌரி சிரித்துக் கொண்டே முன்னால் சாய்ந்து அவன் கன்னத்தை மென்மையாய்க் கடித்தாள்.

''ஹா! என் பெண்டாட்டிக்கு உடம்பு பூரா மூளைங்கிறதோட, கொஞ்சம் நாய்க் குணமும் இருக்கு... நான் ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்பா...''

''இன்னொரு ஆட்டம் போடலாமா பாலா?

''ம்ஹூம்...''

''என்னை நீங்க பதிலுக்குத் தோக்கடிக்க வேணுமா?''

''ம்ஹூம்...''

''ஏன் பாலா?''

''இரண்டு காரணம்... கத்துக்கிட்ட ஒரு வாரத்துக்குள்ள இத்தனை செஸ் பைத்தியமா இருக்கறதைப் பார்த்தா, எங்க நீ ஸ்மித் மாதிரி ஆயிடுவியோன்னு பயமா இருக்கு... அப்புறம்...''

''அது யாரு ஸ்மித்?''

''அவனைப் பத்தி உன்கிட்டச் சொன்ன இல்லையா? என்கூட லண்டன்ல இருந்தான். அவனும் எப். ஆர். ஸி. எஸ். படிச்சுக்கிட்டு இருந்தான். எமகாதக ப்ரிலியன்ஸ்... செஸ்னா உயிர். எப்ப நேரம் கிடைச்சாலும் ஆட உட்கார்ந்து விடுவான். லோகல் சாம்பியன். என்னையெல்லாம் எண்ணி அஞ்சாவது, ஆறாவது மூவ்ல 'செக்' பண்ணிடுவான். ஒரே சமயத்துல ஆறு பேர்களோட விளையாடுவான். என்கிட்ட ஒரு மூவ் பண்ணிட்டு, நான் யோசிக்கிற நாழில அடுத்த அஞ்சு பேர் கிட்டயும் காய்களை நகர்த்திட்டு வருவான். நான் இதை நகர்த்தினா, எதிராளி அதை நகர்த்துவான்னு மண்டைக்குள் நூறு மூவ்களை நிமிஷத்தில யோசனை பண்ணிப் பண்ணி பயங்கரமா ஆடுவான். இப்படி ராத்திரி பூரா செஸ்



சிவசங்கரி

பத்தியே நினைக்கத் துவங்கினதால படிப்புல இன்ட்ரஸ்ட் குறைஞ்சிபோச்சு... தென், ஒரு நாள் ஒரு கத்துக்குட்டி எதிர்பாராத விதமா இவனைத் தோற்கடிச்ச அதிர்ச்சியத் தாங்க முடியாம, பிரமை பிடிச்ச மாதிரி ஆயிட்டான். படிப்பு, அத்தனை மூளை எல்லாம் வீணாகி, மெண்டல் இன்ஸ்ட்டிட்யூட்ல பேந்தப் பேந்த விழிச்சுக்கிட்டு நின்னவனைப் பார்த்தப்போ, காட்! தட் வாஸ் டெரிபிள்!''



தீவிரமாக, சின்னக் குரலில் பாலாஜி நண்பனின் அவலத்தை விவரிக்க, கௌரி அந்த வேதனை புரிந்த மாதிரி அவன் கையைப் பற்றிக் கொண்டாள்.

''கேட்கவே ரொம்பக் கஷ்டமா இருக்கு பாலா... புவர் சாப்....''

ஒரு நிமிஷம் ஆகியும் பாலாஜி ஸ்மித் பற்றின எண்ணங்களிலிருந்து மீண்டு வராத மாதிரி தோன்ற, அவனுக்கு உதவும் நோக்கத்துடன் கௌரி பற்றியிருந்த கையை வாய்க்கு எடுத்துச் சென்று உள்ளங் கையில் முத்தமிட்டாள்.

''இரண்டாவது காரணம் என்னன்னு சொல்லல்லியே!''

பார்வையை நிமிர்த்தின பாலாஜி சட்டென்று குறும்பு ஆளை உசுப்பிவிட, அவளை முரட்டுத்தனமாய் அருகில் இழுத்து அணைத்தான்.

''நாம இப்போ ஹனிமூன்ல இருக்கோம். அதான் இரண்டாவது காரணம்...''

''ஸோ வாட் பாலா?''

''ஸோ வாட்-ஆ? வாரம் பூராவும் செஸ் கத்துக்கிட்டு அதையே விளையாடிக்கிட்டு இருந்தோம்னு சொல்லு — கேக்கறவங்க சிரிப்பாங்க....''

''ஏன் பாலா சிரிப்பாங்க?'' வேண்டுமென்றே குழந்தைத்தனமாக முகத்தை வைத்துக் கொண்டு கௌரி வினவ மண்டையில் செல்லமாக முட்டி 'கழுதை' என்றவன் அரை நிமிஷத்துக்கெல்லாம் மெதுவாக 'கௌரி' என்றான்.

''ம்?''—

''ஆர் யூ ஹாப்பி?''

''வெரி... என்னைப் பார்த்தா தெரியலே?''

''உனக்கும் எனக்கும் எட்டு வயசு வித்தியாசம் இருக்கே — இது உனக்கு அதிகமாத் தோணலே?''

''உங்களுக்கு?''—

''ம்ஹூம் — இல்லே''—

''அப்ப எனக்கு மட்டும் தோணும்னு எப்படி நினைச்சீங்க?''

''ஏதாவது கேட்டா குறுக்குக் கேள்வி போட்டு ஆளை மடக்கிடு....''

கு. க. அதிகாரி: ஒவ்வொரு முறை பிரசவத்தின்போதும் என்ன நினைப்பீர்கள்?
பெண்மணி: இந்த ஒரு வேலையை மட்டும் புருஷன் கிட்டே விட முடியலையேன்னு!

—ப. பழனி



''ஐ லவ் யூ பாலா....''

''ஐ லவ் யூ டூ... கௌரி... வர்றயா லேக்கைச் சுத்திக் கொஞ்சம் வாக் போயிட்டு வரலாம்....''

கௌரி சிரிப்பை அடக்கிக் கொண்டு அவனை ஏறிட்டாள்.

''ஹனிமூன்ல செஸ் விளையாடறதைக் கேட்டுச் சிரிக்கிறவங்க இரண்டு வேளையும் 'வாக்' போறதை மட்டும் கேலி பண்ண மாட்டாங்களா?''—

''ஹெய்...யு நாட்டி கேர்ல்!..உன்னை...''

''கடவுளே! தெரியாமக் கேட்டுட்டேன். விடுங்க... ப்பா... மொரடு... மொரடு... என் கண்ணில்ல வாங்க சமர்த்தா வாக் போயிட்டு வரலாம்...''

சிரிப்பு மாறாத முகத்துடன் இருவரும் கிளம்பினார்கள்.

கறுப்பு ஷாலைத் தோளைச் சுற்றிப் போட்டுக்கொண்டு ஒருவர் இடுப்பை ஒருவர் அணைத்தபடி நடந்தார்கள்.

ஓரமாய்ப் போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்து போவோர் வருவோர்களை விமர்சித்துச் சின்னக் குழந்தைகள் மாதிரி வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தார்கள்.

ரோஜாப் பூக்களைக் கன்னத்தில் ஒட்டிக் கொண்ட இனுசில் குழந்தை ஒன்றைப் ப்ராமில் வைத்து ஆயா தள்ளிக் கொண்டு வர, அதைக் கையில் தூக்கி முத்தமிட்டு, கொஞ்சின பின் திரும்ப வண்டியில் வைத்து அனுப்பினார்கள்.

அந்தக் குழந்தை கண்ணிலிருந்து மறையும் வரை அதையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு பாலாஜி,

''கொஞ்சம் ஸீரியஸாப் பேசலாமா?''என

கௌரி தலையைச் சாய்த்துக் கண்களை இடுக்கினாள்.

முகத்தில் இது என்ன புது விதமான பேச்சு! என்கிற வியப்பு...

''நம்ப எதிர்காலத்தைப் பற்றி...''

''வாட் அபௌட் தட்?''

''நமக்குக் குழந்தை உடனே வேணும்னு நீ ஆசைப்படறியா?....''

''ம்? பிறந்தா நல்லா இருக்கும்னுதான் தோணுது., நம்ப ரெண்டு பேரும் சந்தோஷமா வாழறதுக்குச் சாட்சியா...''

''ஸோ... குழந்தை பிறக்கிறதுதான் சாட்சினு நினைக்கிறே!''

உடனே பதில் சொல்லாமல் கௌரி சில நிமிஷங்களுக்கு யோசனை பண்ணினாள்.

''இல்லே... குழந்தை சந்தோஷத்துக்குச் சாட்சின்னு சொன்னது தப்புதான்... நம்ப நிறைவை வெளில காட்டக் கண்டிப்பா சாட்சி தேவை இல்லைதான்... ஆனாலும்... நமக்குன்னு ஒரு குழந்தை: உங்கள்ல கொஞ்சம், என்கிட்டேயிருந்து கொஞ்சம் எடுத்துக் கலந்து நாம உருவாக்கற குழந்தை நிச்சயம் மகிழ்ச்சியைக் கூட்டும்னுதான் தோணுது.''

''ரைட்... நௌ ஐ அக்ரீ வித் யூ... ஆனா, உடனே வேணுமா டார்லிங்?''

''உங்களுக்கு வேணுமா பாலா?''

''நாட் இமிடியட்லி...நான் இண்டியாக்கு வந்து ஆறு மாசம்தான் ஆறது... இன்னும் எந்த விதத்திலேயும் செட்டில் ஆகலே...



SIMOES/JIL/2/83 TAM



DIPR/509/83/ELEGANT

நம்ப கல்யாணமே என்னைப் பொறுத்த வரை ஒரு ப்ளெஸண்ட் ஸர்ப்ரைஸ். 'இன்னும் நாலு வருஷத்துக்காவது கல்யாணம்கிற பேச்சை எடுக்கக் கூடாதுனு சொன்னவளை ஒரேயடியா பல்டி அடிக்க வச்சிட்டியேன்னு அன்னிக்கு அக்கா கூட உன்னைக் கேலி பண்ணாங்களே நினைவு இருக்கா? முதல்ல நாம செட்டில் ஆறது முக்கியம்... அதைச் செஞ்சிட்டு அப்புறமா குழந்தை பத்தி நினைக்கலாம்கிறது என் அபிப்பிராயம்.''

''இப்ப நாம செட்டில் ஆகித்தானே இருக்கோம் பாலா? நமக்கு என்ன குறை இருக்குன்னு நினைக்கிறீங்க?''

''ப்ளீஸ் தப்பாப் புரிஞ்சுக்காதே டார்லிங். நாம ஊர் திரும்பினதும் தனியா வீடு பார்த்துக்கிட்டுப் போயிடணும்னு நான் விரும்பறேன். உங்கப்பா ஒரு ஜெம் ஆஃப் எ மேன்... இருந்தாலும் என் சம்பாத்தியத்தில, என் மனைவியை வசதியா வைச்சிக்கிறதுதானே எனக்குப் பெருமை?''

கௌரி சந்தோஷத்துடன் புன்னகை செய்தாள்.

''நீங்க இப்படி நினைக்கிறதுதான் எனக்குப் பெருமையா இருக்கு பாலா... அப்பா கண்டிப்பாப் புரிஞ்சுப்பார்...''

''வெரி குட்.. இதோட இன்னும் ஒரு வருஷம் குழந்தை வேணாம்னு நான் நினைக்கிறதை நீயும் புரிஞ்சுக்கணும் டார்லிங்...''

தோளைச் சுற்றி அணைத்திருந்த கரத்தில் கன்னத்தைத் தேய்த்தாள். பல் தெரிய ஐ அண்டர்ஸ்டாண்ட் என்கிற அனுசரணையுடன் சிரித்தாள். பின் ''குளிர்றது பாலா'' என்றாள் கொஞ்சலாய்.

அறைக்கு வந்த பின் சூடான சமோஸா காப்பி சாப்பிட்டுக் கொண்டே இன்னொரு ஆட்டம் செஸ் விளையாடினார்கள்.

நிறையச் சிரித்தார்கள். அதைவிட நிறையப் பேசினார்கள்.

நடு நடுவில் தாங்கள் புதிதாய்க் கல்யாணமானவர்கள் என்பது நினைவுக்கு வந்துவிட்ட தினுசில் மென்மையாய், ரசனையுடன் உணர்வுகளை அமிழ்ந்து விட்டு அனுபவித்தார்கள்.

தேனிலவிலிருந்து திரும்பினதும் முதல் வேலையாய்க் கௌரி தந்தையிடம், தாங்கள் தனிக் குடித்தனம் செய்ய விரும்புவதைப் பற்றிப் பேசினாள். சரியாகப் புரிந்து கொண்ட சாம்பசிவம் மாப்பிள்ளைக்கு உறுத்தாத வண்ணம் வீட்டை செட்டில் பண்ண உதவி செய்ய, அடுத்து வந்த மாதங்கள் ரொம்ப இனிமையானவை...

முதல் வருஷ மண நாளை அமர்க்களம் இல்லாமல் கொண்டாடி முடிந்ததும், இனி எந்த விதப் பாதுகாப்பு நடவடிக்கையும் வேண்டாம் என்று தீர்மானித்தார்கள்.

இரண்டு மூன்று மாசங்களுக்குப் புதுசாய் எதுவும் நடந்துவிட வில்லை.

ஆனால் நாலாம் மாசம் மாத விலக்கு முப்பது, முப்பத்தைந்து நாட்களைக் கடந்து நாற்பதைத் தொட முயல, இத்தனை வருஷங்களில் ஒரு தரம் கூட இவ்வளவு தள்ளிப் போனதில்லை என்பதால், தனிமையில் கௌரியும், பாலாஜியும் சின்னதாகச் சந்தேகப்பட்டு சந்தோஷிக்க முற்பட்டார்கள்.



''மொத்தம் இருப்பதே ஐந்து அறைகள்தான். அதுக்கு பேர், ஃபைவ் ஸ்டார் ஓட்டலா?''

''ஒவ்வொரு ரூமுக்கும், கமல், ஸ்ரீதேவி, கார்த்திக், ராதா, ரஜினி என்று ஃபைவ் ஸ்டார் பேர் வச்சிருக்கோமே போதாதா?''

''உனக்கு மென்ஸிஸ் ட்யூ டேட் தாண்டியாச்சு இல்லியா, கௌரி?''

''ம்....''

''எத்தனை நாள்?''

''சாதாரணமா இருபத்தி எட்டுலேந்து முப்பத்தி ரெண்டு, மூணு நாளுக்குள்ள வந்திடும்...இப்ப,கூட ஒரு வாரம் ஆயிருக்கு. வேணா, நாளைக்கு கைனகாலஜிஸ்ட் கிட்ட அப்பாயிண்ட்மெண்ட் வாங்கிடலாமா பாலா?''

''இன்னும் ஒரு வாரம் போகட்டும் கௌரி நாற்பத்தைந்து நாள் ஆகட்டுமே...''

ஒரு நிமிஷம் மௌனமாய் அமர்ந்துவிட்டுக் கௌரி பேசினாள்.


''வாந்தி, கீந்தி, தலை சுத்தல்னு ஒண்ணும் இல்லியே, பாலா? ஒருவேளை ப்ரெக்னன்ஸி இல்லியோ என்னவோ?''

லேசான கவலையுடன் பேசினவளைப் பாலாஜி அணைத்து ''ஈஸி டார்லிங்...ஈஸி: எதுக்காக அனாவசியமா ஒர்ரி பண்ணிக்கணும்''என்று தேற்றியதற்கு ஏற்ப, நாற்பத்தி நான்காம் நாள் காலை கௌரிக்குத் தீட்டு வந்துவிட்டது.

'இது அபார்ஷனா இல்லியானு தெரிய டாக்டர் கிட்டப் போயிட்டு வந்திடலாம்' என்று எவ்வளவோ பாலாஜி சொல்லியும் ஏமாற்றத்தில் காரணமாய் ''வேணாம் பாலா... இது டிலேட் மென்ஸஸ்தான். பெரிசு படுத்தாதீங்க. ப்ளீஸ்'' என்று தீர்மானமாய்க் கௌரி மறுத்து விட்டாள்.

இது நடந்த ஐந்தாம் மாசம் மீண்டும் நாற்பத்தியாறு நாட்கள் தள்ளிப் போய் விட்டு மிகுந்த வலியுடன் தீட்டுப் படத் துவங்கப் பிடிவாதமாய் உடனே அவளை கைனகாலஜிஸ்டிடம் பாலாஜி அழைத்துச் சென்றான்.

பரிசோதித்துப் பார்த்த டாக்டர், அது கர்ப்பம்தான். ஆனால் செர்விகல் ஆஸ்-கர்ப்பப் பையின் நுழைவாசல் — திறந்து விட்டதால் குறைப் பிரசவம் ஆவது உறுதி என்று கணிக்க, சரியாக அன்று இரவு எட்டு மணிக்குக் கௌரியின் இரண்டாவது கர்ப்பமும் கலைந்து போயிற்று. (தொடரும்)


"சில குடும்பத் தலைவிகளால்
உங்கள் வாயை மூடவும் முடியும்,
அவர்களுக்கு வேண்டியதை
எடுத்துச் செல்லவும் தெரியும்!"

சிறிது நேரத்துக்கு முன்புதான் ஆஸ்பத்திரியிலிருந்து 'டிஸ்சார்ஜ்' ஆகி வீட்டுக்கு வந்திருந்தாள் அருணா.

மூன்று மாதங்களாக ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்குமாக நடந்து நடந்து அலுத்துச் சலித்துப்போய் மூலைக்கொருவராகச் சுருண்டு கிடந்தார்கள் விசாலமும் சாம்பமூர்த்தியும்.

அனுதாபத்துடன் தாய் — தந்தையரை நோக்கினாள் அருணா.

சாஸ்திரப்படி — ஏன் — சட்டப்படியும் கூடத்தான், திருமணம் செய்து கொடுத்து விட்ட பிறகு கணவன்தான் சகலமும். பெற்றவர்கள் எந்த விதத்திலும் பொறுப்பேற்க வேண்டியதில்லையாம். ஆனால் நடைமுறையில்....?

எவ்வளவுதான் மகளைப் படிக்க வைத்திருந்தாலும் வரதட்சிணை — பாத்திரம் — பணம் — நகைகள் என்று வாரிக் கொடுத்துத் திருமணம் செய்து கொடுத்திருந்தாலும் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் கூட ஒரு பெண்ணுக்குத் திருமணம் என்கிற பந்தத்தில் போதுமான பாதுகாப்பு இருக்கவில்லையே! ஐந்தாறு வருடங்களுக்குள் தாய்மை அடையா விட்டால் இன்னமும் பிறந்த வீட்டுக்குத்தானே திருப்பி அனுப்பப்படுகிறார்கள்?

மூன்று மாதங்களாகச் சாம்பமூர்த்திக்கு ஏகப்பட்ட செலவு. விசாலத்திற்கு அளவில்லாத சிரமம். இருந்தாலும் கூட அவர்கள், மகள் உயிருடன் வீட்டுக்குத் திரும்பி வந்து விட்டதே போதும் என்றிருந்த மன நிம்மதி அடைந்தவர்களாக இதோ உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக அவர்கள் பல தெய்வங்களிடம் நேர்ந்து கொண்டிருப்பவைகளை நிறைவேற்றவே பல ஆயிரம் ரூபாய்கள் அவர்களுக்குத் தேவைப்படும். இத்தனைக்கும் அருணா திருமணம் செய்து கொடுக்கப்பட்டவள்.

காலையில் சாம்பமூர்த்தி கேட்டார்:

''நான் பார்த்து உன்னைக் கோபாலிடம் கொண்டு போய் விடலாம் என்று எண்ணியிருக்கிறேன், அருணா. உன்னால் முடியுமா?''

''ஒரு வாரம் போகட்டுமே அப்பா.''

''சரியம்மா!''

கொடிக்குக் காய் கனக்காதாம். ஆனால் ஊராருக்கு?

மூன்று மாதம் வைத்துக் கொண்டவர்களுக்கு மேலும் ஒரு வாரம் வைத்துக்கொள்வதில் சிரமம் ஏதுமில்லைதான். ஆனால் அருணாவுக்கு? ஒரு வாரத்துக்குப் பிறகோ — பல வாரத்துக்குப் பிறகோ கூட அவளுக்குக் கோபாலிடம் போய் வாழ இஷ்டமில்லை. இருந்தாலும் அவள் இங்கேயிருந்து போயே ஆகவேண்டும்.

இது அருணாவின் நிலை.

கோபாலின் நிலை....?

மணமாகி நான்கு வருடங்களாகியும் ஒரு நாள் கூட அவளுடைய உடம்பை விட்டுப் பிரிந்திருக்க விரும்பாதவன். குழந்தை பிறந்தால் உடற்கட்டு குலைந்து விடும் என்று கூறித் தினமும் அவன் கையாலேயே அவள் வாயில் மாத்திரைகளைப் போட்டுத் தண்ணீர் ஊற்றி வந்தவன் — இந்த மூன்றரை மாதங்களாகத் தனித்து வாழ்ந்து வருபவன். மனைவியை இரு கரம் நீட்டி வரவேற்க வேண்டாமோ? வேண்டும்தான். ஆனால் அவன் வரவேற்க மாட்டான். அவனுக்கு வேண்டிய, அவன் விரும்பிய அவளுடைய உடற்கட்டில் குறை ஏற்பட்டு விட்டதே இப்போது? குறைவு

ஜீவனாம்சம்

சுமதி



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி-1983
ரூ 250/- பெறும் மூன்றாவது பரிசுக் கதை-2

பட்டுவிட்ட அருணாவின் உடம்பை அவனால் எப்படி ஏற்க முடியும்? இதை அருணாவின் உள்ளம் நீக்கமறத் தெரிந்து வைத்திருக்கிறது. ஆனால் அவனுடைய அம்மா? அப்பா?

ஏது எப்படி இருந்தாலும் அருணா அவனிடம் போய்த்தான் தீர வேண்டும். ஏனென்றால் அவள் கழுத்தில் அவன் அணிவித்திருப்பது புனிதமான தாலி. அதன் புனிதத்தை அவன் மதிக்கா விட்டாலும் அவள் மதிக்க வேண்டும். அப்போதுதான் அவனுடைய அம்மாவும் அப்பாவும் நிம்மதியாக இருப்பார்கள். ஊராரின் வாய்களும் சும்மா இருக்கும்.

குளிர்ந்த நீரில் முகம் கழுவி லேசாகப் பவுடர் பூசி நெற்றியின் மையத்தில் செந்தூரத் திலகமிட்டுக் கொண்டாள் அருணா. இந்த மிக எளிமையான ஒப்பனையே அவளுக்குப் போதுமானது. அப்படியொரு பொலிவு அவள் முகத்துக்கு. ஆனால் கோபாலுக்கு இது மட்டும் போதாதே!

''அருணா!''

திரும்பினாள்.

''பிள்ளையார் கோவிலுக்கு வருகிறாயா? வேண்டிக் கொண்டிருக்கிறேன்....'' என்றாள் விசாலம் கொஞ்சம் தயக்கமாக.

''வருகிறேனே... எவ்வளவு நேரம்தான் வீட்டிலேயே அடைந்து கிடப்பது?''

''ஐந்து நிமிடத்தில் வந்து விடுகிறேன்.'' என்று விசாலம் உள்ளே போனாள்.

அருணாவும் மாற்றுப் புடவை உடுத்திக் கொண்டு தயாரானாள்.

கையில் ஒரு ரவிக்கையுடன் வந்தாள், விசாலம்.

''இதைப் போட்டுக்கொள்கிறாயா அருணா? ஆஸ்பத்திரியில் சொன்னார்களே...!''

''இதனால் மனிதர்களின் பார்வையை மட்டும்தான் ஏமாற்ற முடியும். பிள்ளையாருக்குத் தெரியாதா என்ன? வேண்டாம்...'' இதைச் சொல்லும்போது அருணாவின் குரல் உடைந்துதான் போயிற்று. விழிகள் நீரில் மிதக்கவே செய்தன.

இருவரும் புறப்பட்டு வெளி ஹாலுக்கு வந்தார்கள்.

''கோயிலுக்கா?'' சாம்பமூர்த்தி கேட்டார்.

''ஆமாம்... மணி ஆறு ஆனதும் வாசல் விளக்கை மட்டும் போட்டு விடுங்கோ'' என்றாள் விசாலம்.


''வருகிற புதன் கிழமை நாள் நன்றாக இருக்கிறது அருணா. டிக்கட் இரண்டு ரிசர்வ் செய்து விடட்டுமா?''

''இரண்டு வேண்டாம்பா. ஒன்றே போதும்.''

''என்ன அருணா இது! செத்துப் பிழைத்திருக்கிறாய். தனியாகப் போனால் நன்றாக இருக்குமா?''

''இருப்பேனா சாவேனா என்று அஞ்சியிருந்தபோதே தனியாக வந்தவள்... செத்துப் பிழைத்த பின் தனியாகப் போகப் பயப்படுவானேன்? தயவு செய்து ஒரு டிக்கட் ரிசர்வ் செய்யுங்கள் அப்பா'' என்று கெஞ்சினாள் அருணா.

குழப்பம் சாம்பமூர்த்தியை ஊமையாக்கியது.



புலர்ந்தும் புலராப் பொழுது.

கையில் சூட் கேஸுடன் அழைப்பு மணியை அழுத்தினாள் அருணா.

கால் மணி நேரத்துக்குப் பிறகுதான் கதவு திறக்கப்பட்டது. அதுகூட கால் பங்குதான். கோபால்தான். ஜாம்பஜார் ஜக்கு மாதிரி ஒரு தோற்றம்.

''நீயா!''

மௌனமாக நின்றாள் அருணா.

அவனுடைய ஆத்திரம் எகிறிக் குதித்தது.

''என் சந்தோஷத்தை விட உன் உயிர்தான் உனக்குப்பெரிசாப் போச்சுஇல்லையா?'' அவளுடைய மேல் முந்தானையைப் பிடுங்கி எறிந்தவன், ''இப்படிச் சலவைக் கல் மாதிரி மழுமழுவென்று வந்து நிற்கிறியேடி, உனக்கு வெட்கமாக இல்லை? இதைவிடச் செத்துத் தொலைத்திருந்தால் சந்தோஷமாக இருந்திருக்குமேடி! என் ஆசையில் மண்ணை வாரிப் போட்டு விட்டாயேடி! இனிமேல் உனக்கு இங்கே வேலையில்லை. போ, வெளியே!''— காட்டுக் கத்தலாகக் கத்தினான் கோபால்.

சிலையாய் நின்று கொண்டிருந்தாள் அருணா.

''இப்ப நீ வெளியே போகிறாயா இல்லை... நான் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளட்டுமா?''

''நான் இருக்க வேண்டிய இடம் இதுதான்.''

''முடியாது. உன்னை என்னுடன் வைத்துக் கொள்ள விருப்பமில்லை. என் மனைவி அழகாக இருக்க வேண்டும். உடற் கட்டோடு இருக்க வேண்டும். எனக்கு உள்ளம் தேவையில்லை. உன் உடம்புதான் தேவை. அது இப்போ முழுசாக இல்லை. அதனால் நீ இனிமேல் வேண்டாம். போய்விடு.''

ஒரு புழுவைப் பார்ப்பது போன்ற அருவருப்புடன் அவனைப் பார்த்தாள் அருணா.

''என்னடி முழிக்கிறே?...?''

''எவ்வளவுசிரமப்பட்டுநம் கல்யாணத்தை என் அப்பா நடத்தி வைத்தார்? அந்தத் திருமணம் என்கிற புனிதமான பந்தத்தை இப்படியும் கேவலப்படுத்த வேண்டுமா?''

''புனிதமாவது மண்ணாங்கட்டியாவது! எல்லாம் உடம்புக்காகத்தாண்டி! அது தருகிற சுகத்துக்காகத்தாண்டி! அது ஒழுங்காக இல்லையென்றால் எவளோ ஒருத்தியான உன்னை நான் எதுக்காகடி வைத்துக் காப்பாத்தணும்?''

''குழந்தைகளுக்காக ஒரு படம் தயாரிக்கிறீர்களாமே என்ன படம்?''
''சின்ன வயதில் சிலுக்கு.''
- கே.எஸ். கணபதி சுப்ரமணியம்



''இப்பவும் நான் என் பெண்மையையோ தாயாகும் தன்மையையோ இழந்துவிடவில்லையே?''

''குறைந்துவிட்ட உன் பெண்மையை என்னால் சகித்துக் கொள்ள முடியாது. போ, என்றும் போய்விடு! மாதா மாதம் உனக்கு ஜீவனாம்சமாக நூறு ரூபாய் அனுப்பிவிடுகிறேன். கோர்ட்டுக்குப் போனாலும் அதுதான் உனக்குக் கிடைக்கும்...''

கையிலிருந்த சூட் கேஸைக் கீழே வைத்து விட்டுப் புடவையைச் சரி செய்து கொண்டாள் அருணா.

அந்தப் பெட்டியை எடுத்து வாசற்படிக்கு வெளியே வீசினான் கோபால்.

அவள் வியப்புடன் அவனைப் பார்த்தாள்.

அவன் கையைப் பற்றித் தரதரவென்று இழுத்து வாசற்படிக்கு வெளியே கொண்டு போய்த் தள்ளினான்.

கதவைப் படீரென்று மூடிக் கொண்டான்.

''டாக்டர்!''

''அருணா! நீயா!'' உடம்புக்கு ஏதேனும்?''

''ஒன்றுமில்லை டாக்டர்! நன்றாகவே இருக்கிறது. இங்கிருந்து 'டிஸ்சார்ஜ்' ஆன அன்று உங்களிடம் நான் 'கூடிய சீக்கிரம் நான் இங்கேயே திரும்பி வருவேன். அப்போது எனக்கு நீங்கள் கண்டிப்பாக ஒரு வேலை கொடுக்க வேண்டும் என்று சொன்னேன் ஞாபகம் இருக்கா டாக்டர்?''

''இருக்கிறது அருணா. ஆனால் மார்பகப் புற்று நோய் வந்தவர்களுக்கு ஆரம்பத்திலேயே வந்து விட்டால் மார்பகம் மட்டும் இழக்கும்படியாக இருக்கும். மீண்டும் அந்த நோய் வருவதற்கு சான்ஸே இல்லை. அதனால்தான்... நான் அன்று... நீ இங்கே — இந்த மருத்துவ மனைக்கு மீண்டும் ஒரு நோயாளியாக வரவேண்டியிருக்காது' என்று சொன்னேன்.... ஆனால்....''

''இப்போது நான் நோயாளியாக வரவில்லை டாக்டர். இந்த மருத்துவ மனையில் உள்ள நோயாளிகளுக்குப் பணி விடை செய்யும் ஒரு நர்ஸாக வர விரும்பி வந்திருக்கிறேன். நான் ஏற்கனவே 'ந்யூட்ரிஷன்' கோர்ஸ் படித்திருக்கிறேன். இது தனியார் மருத்துவ மனைதானே? தயவு செய்து எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்க டாக்டர்! நான் போகப் போக எல்லாம் கற்றுக் கொண்டு விடுவேன்... ப்ளீஸ்...'' அருணா கெஞ்சினாள்.

ஒவ்வொரு மூன்றும் தேதியும் கோபாலிடமிருந்து அருணாவுக்கு நூறு ரூபாய் மணியார்டர் வந்து கொண்டிருந்தது.

''நீதான் சம்பாதிக்கிறாயே அருணா. எதற்கு இந்தப் பிச்சைக் காசு? திருப்பி அனுப்பி விடேன்!'' என்றாள் விசாலம்.

''கல்யாணம் என்ற பந்தத்தை இந்த அளவுக்கேனும் அவர் மதிக்கிறாரே என்று நான் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறேன் அம்மா. வீணாகக் கோர்ட் அது இது என்று சிரமப்பட அவசியமில்லாமல் நடத்துகொள்கிறார் இல்லையா?''

ஒரு வருடத்திற்குப் பிறகு ஒரு நாள் சாம்பமூர்த்தி ஒரு புதிய செய்தியைக் கொண்டு வந்தார்.


ஒளிவிடும் விண்மீனை
ஓடிப் பிடித்திட...
இதோ,
சேஸ்
வாஷிங் பவர்
இது ஒரு சிறந்த
டிடர்ஜென்ட் பவுடர்.
இதன் சக்தியோ அதிகம்.
விலையோ குறைவு!
'டாக்' நிறுவனத்தின்
தொழில் நுட்பத்துடன்
தயாரான தரமான
டிடர்ஜென்ட் பவுடர்,
சேஸ்.
இப்போது
தமிழ்நாடெங்கும்
எல்லா கடைகளிலும்
(கூட்டுறவு, அமுதம்
ஸ்டோர்கள் உட்பட)
கிடைக்கும்.
chase
WASHING POWER
வாங்குவீர் சேஸ்—
பெறுவீர்
நட்சத்திர வெண்மை!
தயாரிப்பு: TAC தூத்துக்குடி
தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் & ஃபெர்டிலைசர்ஸ் லிமிடெட். 553, அண்ணா சாலை, சென்னை 600 018
ADWAVE TAC: 2344 R

"அருணா! கோபால் இப்ப ரொம்பக் குடிக்க ஆரம்பித்து விட்டானாம். வீட்டிலேயே கண்ட கண்ட பெண்களை யெல்லாம் கொண்டு வந்து வைத்துக் கொண்டு கூத்தடிக்கிறானாம்."

"அப்படியா! இனிமேல் இது மாதிரிச் செய்திகளைக் காதில் வாங்கிக் கொள்ளாதீர்கள் அப்பா!"

சாம்பமூர்த்தி வியப்புடன் மகளைப் பார்த்தார்.

இரண்டு வருடங்களுக்குப் பிறகு ஒருநாள்.

"அருணா! மாப்பிள்ளைக்கு உடம்பு சரியாக இல்லையாம். கம்பெனியில் வேலையை விட்டு நீக்கி விட்டார்களாம். என்ன உடம்பு என்று தெரியவில்லை." என்று சொன்னார் சாம்பமூர்த்தி.

அருணாவிடம் எந்த விதமான சலனமும் இல்லை.

ஆறு மாதங்களாக மணியார்டர் வராத தன் காரணம் புரிந்தது.

மேலும் ஒரு வருடம் சென்றிருக்கும்.

கோபாலிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

அன்புள்ள அருணா!

உனக்கு நான் எழுதுகிற முதல் கடிதம் இது. கடைசிக் கடிதமாகவும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். ஆம், இந்தக் கடிதம் கண்டவுடன் நீ புறப்பட்டு வந்துவிட வேண்டும். உனக்கு ஆச்சரியமாக இருக்கும். 'போ! போ!' என்று விரட்டியடித்தவன் 'வா! வா!' என அழைக்கிறானே என்று.

ஒரு வருடத்திற்கு முன்பு என் இடது காலும் இடது கையும் பாரிச வாயுவினால் சுவாதீனமற்றுப் போய் விட்டது. அதனால் என்னால் தொடர்ந்து கம்பெனியில் வேலை பார்க்க முடியவில்லை. பிடிப்புப் பணம், சேமிப்புப் பணம் எல்லாம் வைத்தியர் செலவில் கரைந்து போய் விட்டது. நான்கு மாதங்களாக வீட்டிலுள்ள தட்டு முட்டுச் சாமான்களை விற்றுத்தான் காலம் தள்ளிக் கொண்டு வருகிறேன்.

நீ இங்கே வந்து விட்டால் என் கம்பெனியிலேயே வேலை போட்டுக் கொடுப்பார்கள். நீ பழைய சம்பவங்களை மறந்து விட்டு உடனே வருவாய் என்று நம்புகிறேன். ஏனென்றால் நீ ஒரு இந்தியப் பெண். அதுவும் தமிழ்ப் பெண். திருமணத்தைப் புனிதமாக நினைப்பவள்.

இனிமேல் உன் மனம் புண்பட நான் பேச மாட்டேன். பேசவும் முடியாது! பத்து தினங்களுக்கு முன் ஏற்பட்ட 'அட்டாக்'கினால் என் நாவும் பேசும் சக்தியை இழந்துவிட்டது. உன்னுடைய வரவை ஒவ்வொரு நிமிடமும் எதிர்பார்க்கிறேன். எனக்காக இல்லாவிட்டாலும் உன் அம்மா அப்பாவுக்குத் 'தம் மகள் இனிமேல் வாழாவெட்டியல்ல' என்கிற மன நிம்மதியைக் கொடுப்பதற்காகவாகிலும் நீ வருவாய் என்று நம்புகிறேன்.

உன் கோபால்

உடனே ஒரு பேப்பரும் பேனாவும் எடுத்துக் கொண்டு எழுதத் தொடங்கினாள் அருணா.

திரு கோபால அவர்களுக்கு,

கடிதம் கிடைத்தது. நான்கு வருடங்களாகத் தங்களிடமிருந்து ஜீவனாம்சம் வாங்கிக்



சர்வர்: என்ன சார்! எல்லாரும் ரெண்டு இட்லி அல்லது நாலு இட்லிதான் கேப்பாங்க; நீங்க மட்டும் ஐந்து கேட்கிறீங்களே!

சாப்பிட வந்தவர்: டேபிள் ஆடுது. ஒரு இட்லியை எடுத்து முட்டுக் கொடுக்கலாமேன்னுதான்!

—எஸ். மாரியப்பன்

கொண்டு நான் வாழா வெட்டியாக இருந்து வந்தது உண்மைதான். தாங்கள் மட்டும் அப்போது வாழ்ந்து வந்திருக்கிறீர்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மையே!

என் பெற்றோருக்கு மன நிம்மதியைக் கொடுக்க வேண்டும் என்பதில் என்னைவிட உங்களுக்கு ரொம்ப அக்கறை இருப்பது பாராட்டுக்குரிய விஷயம்தான். இனி அந்த நிலை மாறிவிடும்.

திருமணம் என்கிற புனிதமான பந்தத்தைத் தாங்கள் எந்த விதத்தில் மதித்து வந்திருக்கிறீர்களோ அதே விதத்தில்தான் நானும் மதித்து வர விரும்புகிறேன். இதுவரையில் நீங்கள் எனக்கு ஜீவனாம்சம் அனுப்பி வந்திருக்கிறீர்கள். இனிமேல் நான் உங்களுக்கு மாதந்தோறும் ஜீவனாம்சம் அனுப்பி வருவேன். அது என் கடமை. இதுவரையில் தாங்கள் எனக்கு அனுப்பி வந்த பணத்தை அப்படியே சேர்த்து ஒரு 'டிராப்ட்' வாங்கி இத்துடன் அனுப்பியிருக்கிறேன். அது உங்களுடைய வைத்தியச் செலவுக்கு உதவும். தவிர மணியார்டர் மூலம் நூறு ரூபாய் அனுப்பியுள்ளேன். இனியும் மாதந்தோறும் அனுப்பிவிடுவேன்.

இப்படிக்கு அருணா

"வீண் செலவு. வீண் சிரமம். இதை அவன் வாங்கிக் கொள்ள மாட்டான். திரும்பித்தான் வரப் போகிறது!"

திரும்பினாள் அருணா.

விசாலம்தான் சொன்னது.

"திரும்பி வராது!" என்றாள் அருணா.

"அவன் ஆண்பிள்ளை" என்றாள் விசாலம்.

"ஆம். அவர் ஒரு இந்திய ஆண்பிள்ளை. என் முழுச் சம்பளத்தையும் கேட்பாரே தவிர திருப்பி அனுப்பிவிட மாட்டார்! அப்படி அவர் திருப்பி அனுப்பிவிட்டால் நான் உடனே அவரிடம் போய்விடத் தயார்!" என்றாள் அருணா.

பல வருடங்களுக்குப் பிறகும் கூட அருணா மணியார்டர் செய்து கொண்டுதான் இருக்கிறாள். அதைப் பார்க்க விசாலம்தான் இல்லை!



இதை அங்கீகரியுங்கள்

—விதவையொருத்தி பூ விற்பது போன்ற
விசித்திர வாழ்க்கை.
அவனது கனவுகளுக்குள் தேன் வழிகிறது.
கண்களுக்கெதிரில் சீழ் வடிகிறது.
துடைப்பத்தில் கட்டிவிடாதீர்கள் என்று
ஒரு பட்டுக் குஞ்சம் இங்கே
வேண்டிக் கேட்கிறது.
ஆதங்கமன்று இந்தக் கவிதை.
இது. சத்தியத்தின் மிகமிக மெல்லிய
ஆவேசம்.
ஒரு பிள்ளைமனிதனின் பெருமூச்சு—

புல்லாங் குழலில்
   ஓட்டைக ளென்று
      புறக்கணிக் காதீர் – அட
புரியா தோரே!
   மூங்கிலா மென்று
      முறித்தெறி யாதீர்!
கல்லால் அடித்தென்
   கவிதைச் சிறகைக்
      காயப் படுத்தாதீர் – அட
காதறுந் தோரே!
   கனவுத் தேவனின்
      கானம் மறுக்காதீர்!
பருத்தி விதையினைச்
   சதுப்பு நிலத்தில்
      விதைக்க முயல்கின்றீர் – ஒரு
பட்டாம் பூச்சியின்
   இறக்கைக ளிரண்டைச்
      சிதைக்க முனைகின்றீர்!
இரீடம் தலைக்குச்
   சுமையென் றுநீர்
      கீழே எறிகின்றீர் – ஒரு
தோளுஞ் சுவியைக்
   இறுக்கம் என்று
      கிழித்து மகிழ்கின்றீர்

குமிழி உடையும்
   குரலைக் கேட்டே
      குமுறி அழுபவனின் – பசுங்
கோரைப் புற்கள்
   கோபப் படாமல்
      பாதம் பதிப்பவனின்
இமைகளுக் குள்ளே
   இப்படி நீங்கள்
      அமிலம் விடலாமா – இந்த
எதிர்கா லத்தின்
   தமிழ்மொழி விரலைத்
      தறித்து விடலாமா?
இதயம் பெயர்த்தே
   இந்தத் தாளில்
      இறக்கி வைக்கின்றேன் – என்
இரத்தம் நிரப்பி
   இந்தக் கவிதை
      எழுதி முடிக்கின்றேன்.
உதிக்கும் சூரியன்
   ஒருகா லத்தும்
      உதிர்ந்து போகாது – நான்
ஒருவன் வளர்வது
   தள்ளிப் போயினும்
      தவிர்க்க வியலாது!

— சுதா முருகேசன் —


மீசையோ மீசை!



சினிமாவில்தான் எத்தனை வித ரெடிமேட் மீசைகளை உபயோகிக்கிறார்கள்! அவற்றில்சிலவற்றைப் புது முகம் அரவிந்துக்கு ஒட்ட வைத்துப் பார்த்தபோது!.....









○ எம். ஜே. ராஜீவ்

வெற்றிக்குப் போராட்டம்

● மேற்கு ஜெர்மனியில் உள்ள ட்யூபிஸ் பர்க்கில் இம்மாதக் கடைசியில் நடைபெறப் போகும் உலகப் படகுஓட்டப் போட்டிக்குத் தமிழ் நாட்டிலிருந்து போயிருக்கும் ஒரே இளைஞர் எம். ஜே. ராஜீவ். லயோலா கல்லூரியில் இவ்வருடம் பி. காம் பாஸ் செய்த ராஜீவ் 79ல் ஜூனியர் நேஷனலில் தங்கப் பதக்கத்தை வென்றவர். இசை, ஐந்து கிலோ மீட்டர் ஓட்டம், பளு தூக்குதல் — இவை இவரது உடல் வலிமைக்கு உதவியிருக்கின்றன. போட் கிளப்பில் காலையும் மாலையும் மூன்று மணி நேரப் பயிற்சி: இப்போது பூனாவில் தனிப் பயிற்சி முகாம் முடிந்து ட்யூபிஸ்பர்க்குக்குப் புறப்பட்டுப் போயிருக்கிறார்.

கொள்கைக்குப் போராட்டம்

● சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கமில்லா வழக்கயாக ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரை 'அட்ஹாக்' நீதிபதியாக நியமித்திருக்கிறார்கள். சென்னை வழக்கறிஞர்கள் சங்கம் இதைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறது. சங்கத் தலைவர்



○ சுந்தர்லால் பகுகுணா

'சிப்கோ' போராட்டம்

● ஜோத்பூர் மகாராஜா ஒரு புது அரண்மனை கட்ட விரும்பினார். அருகிலுள்ள காட்டிலிருந்து அதற்கான மரங்களை வெட்டச் சென்றனர் அவரது ஆட்கள். அம்ருதா•தேவி என்ற இளம் பெண்ணும், கிராமத்தைச் சேர்ந்த முதியோரும் சிறுவர் சிறுமிகளும், வாளுடன் வரும் ஆட்களைப் பார்த்து ஒவ்வொரு மரத்தையும் ஓடிப்போய்க் கட்டிக் கொண்டனர். முதலில் தங்களை வெட்டிப் போடும்படி கேட்டுக் கொண்டனர். 250 வருடங்களுக்குமுன் நிகழ்ந்தஇந்தக் கதையை மீண்டும் உயிர்ப்பித்திருக்கிறார் ஐம்பத்தாறு வயதான சுந்தர்லால் பகுகுணா என்ற உத்தரப் பிரதேச வாசி.

ஒற்றை மனிதராக நின்று மரங்களையும், காடுகளையும் வெட்டி வீழ்த்துவதை எதிர்த்துப் போராடும் பகுகுணா, சமீபத்தில் செய்த பாத யாத்திரை காஷ்மீர் முதல் கோஹிமா வரை 4000 கி. மீ.

இவரது 'சிப்கோ' போராட்டம் மெல்ல மெல்ல உலகம் முழுவதும் பரவி வருகிறது. 'சிப்கோ' என்றால் 'மரத்தைக் கட்டிக்கொள்' என்று அர்த்தமாம்.

- சாருகேசி

வாழ்க்கைப் போராட்டம்

போராட்டம்!

திரு ஜி. ராமசாமியிடம் இந்த நியமனத்தில் என்ன தவறு என்று கேட்டபோது—''தாற்காலிக நீதிபதியாகப் பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ள அரசியல் சட்டம் இடம் தருகிறது. சாதாரணமாக எல்லா நீதிபதி பதவிகளும் பூர்த்தியாகி வழக்குகள் நிறைய தேங்கிவிட்டால் இப்படிச் செய்வதுண்டு. ஆனால் இங்கேயோ மூன்று நீதிபதி பதவிகள் காலியாக இருக்கின்றன. தவிர அடிஷனல் ஜட்ஜ் பதவிகளும் காலியாக இருக்கின்றன. எங்களுக்கு நீதிபதி வேணுகோபால் அவர்களிடம் மரியாதையும் அன்பும் உண்டு. ஆனால் இது ஒரு கொள்கைப் பிரச்னை. அதனால்தான் கண்டனம் தெரிவிக்கிறோம். நிரந்தர நீதிபதிகளை நியமிப்பதில் தாமதத்துக்கும் காரணம்: சில பெயர்களை ஒத்துக்கொள்வதில் உயர் நீதி மன்றத்துக்கும் மாநில அரசுக்கும் உள்ள கருத்து வேற்றுமைதான்!''



ஜி. ராமசாமி



நடிப்பு: புதுமுகம் அரவிந்த்
மேக்-அப்: கிருஷ்ணசாமி
போட்டோ: ஜெய்மோகன்
தொகுப்பு: எஸ். சந்திரமௌலி

போராட்டம்! போராட்டம்!

கூறும் எண்களை லாவகமாக டயல் செய்யும் திரு மைக்கேல் தாஸைக் கண்டதும் வியப்பு உண்டாகிறது. காரணம் அவர் இரு கண்களையும் இழந்தவர். சொல்கிறார்:

''பந்து ஒன்று கண் மேல் பட்டு ஒரு கண் போய்விட்டது. இன்னொரு சமயம் மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் இன்னொரு கண்ணையும் இழந்தேன். பிறகுதான் ஊனமுற்றோருக்கென உருவாக்கப்பட்ட ஃபோன் ஆப்பரேட்டர் வேலைக்கு விண்ணப்பித்தேன். ரூ. 500 டெபாஸிட். வேலையை விடும்போது திருப்பித் தந்து விடுவார்கள். வங்கியில் டெபாஸிட் தொகை கடனாகப் பெற்றுச் சிறுகச் சிறுகத் திருப்பித் தரலாம். இந்த வேலை சிரமமாக இல்லை. கூட்டமாயிருக்கும் போது அவர்களையே டயல் செய்யச் சொல்லி நான் கனெக்ஷன் மட்டும் தருவேன். ஒரு காலுக்கு 20 பைசா கமிஷன் என்பதை விட மாத சம்பள அமைப்பே நல்லது. காரணம் ''ராங் கால்கள்'' நிறைய வருகின்றன. சிலர் தகராறு செய்கிறார்கள். முடிவில் நஷ்டம் எனக்குத்தான். மேலும் கால்கள் செய்யப்பட்டதை விட அதிகமாய்ப் பதிவு ஆவதுண்டு என்கிறார்கள். —வி. தியாகு



மைக்கேல் தாஸ்

அத்தியாயம் 33

காயத்ரி குழந்தைகளை அணைத்துக் கொண்ட நேரத்தில் கோர்ட் வாசலில் செல்லத்தம்பி தவிப்புடன் உட்கார்ந்து கொண்டிருந்தான். ராவுத்தர் கார் தொலைவில் இருந்தது. ராவுத்தரும் அவரது வக்கீலும் தத்துவம் பேசிக் கொண்டிருந்தார்கள். கௌசல்யா அவர்களைக் கடக்கும் போது அதிக வெட்கப்பட்டுச் செல்லத்தம்பிக்காக டீயும் பீடியும் வாங்கி வந்தான்.

போக்குவரத்து இன்ஸ்பெக்டர் நடராசன் வராந்தாவில் வர, செல்லத்தம்பி டீ கிளாஸுடன் எழுந்தான்.

''என்னடா.... ஜாமீன்ல வெளிய வந்துட்டா என்னு... மரியாதையில்லாம எதிர்க்க நின்னு டீ குடிக்கச் சொல்லுதா?''

''அதெல்லாம் இல்லீங்க. தலை சுத்தலா, கேரா இருந்திச்சு. அதான் இதுகிட்டச் சொல்லி டீ வாங்கியாந்தேன்.''

''வக்கீல் வச்சு ஆட்டினு போலீஸ்காரரைப் புடுங்கிப் போட்ருலாம்னு நெனைக்கிறாரா ராவுத்தரு?''

''அதெல்லாம் இல்லீங்க. ஏதோ ரெண்டு மாசம் கொறையாதான்னு பேசத்தான்.''

''பேசட்டும் பாத்துடறேன். புத்தியில்லைடா ராவுத்தருக்கு. போலீஸ்காரனை மொறைச்சுக்கிறாரே முடியுமா?''

''டீ சாப்டிறீங்களா... கௌசல்யா டீ வாங்கிக்கினு வா....''

''ஒனக்குக் கொஞ்சம் புத்தி இருக்கு.''

''இன்னிக்கு வுட்டாக்கூட நான் நாளைக்கு தெருவுல வண்டி ஓட்டணுமே. வண்டி ஓட்றவன் யாரை மொறைச்சுக்க முடியும்? அதும் லாரி ஓட்றவன் சண்டை போட்டா முடியுமா? நேத்திக்குப் பூந்தமல்லியாண்ட ஸ்பிரிட்டு லாரி கவுந்து போச்சாம். பாம்பே டிரைவரு லாரியாண்ட பப்ளிக் வரவேணாம்னு கெஞ்சிக் கால்ல விளுந்து கத்தியிருக்கான். அவனைத் தள்ளி வுட்டுட்டுத் தவலை, ட்ரம், கொடம் எடுத்துக்னு ஊர் ஜனம் ஸ்பிரிட்டு பெட்ரோல்னு புடிச்சிருக்கு. டமால்னு வெடிச்சதும் புடிச்சவன் பத்துப் பேரும் பொசுங்கிப் பூட்டான். ஏண்டா தடுக்கலைன்னு அந்த டிரைவரைப் பொதுஜனம் போட்டு மிதிச்சிருக்கு. அடிபட்டுச் சுருண்ட டிரைவருக்கு ஜாமீன்கூட இல்லேன்னுட்டாங்களாம். அந்த டிரைவர் கதி என்னவும், அடி, உதை, அவமானம், ஜெயில், நட்டு நஷ்டம், வேலை போன கஷ்டம் எல்லாம் அவன் தலைலதானே...''

''அப்ப ஏண்டா வண்டி ஓட்ட வர... போய் மல்லாக்கொட்டை பயிர் பண்றது தானே... துட்டு ஆசை... மாடு புடிக்கிறது கேவலம்னு நெனைச்சு வண்டி ஓட்ட வரீங்க.''

''அப்டீ பேசாத சார். பொறக்கறப்பவே போலீசு இன்ஸ்பெக்டர்னு பொறக்கறோம். இதைவிட அதுபெரிசுன்னுதான் ஓடிவரோம். வந்தாத்தான் தெரியுது அதுல இருக்கிற புடுங்கல். வாணாம்னு போவ முடியலையே. நாலு மாசம் ஜெயில்ல போட்டா வெளில வந்து பீடி வியாபாரம் பண்ணவா முடியும். திரும்பியும் வண்டிதான் ஓட்டணும்.''

''டிரைவர் ஆவணும்னு தீர்மானம் பண்ணிட்டே.''

''ஒங்க மாதிரிப் பெரியவங்க மனசு வச்சா டிரைவர் என்னு சார்.... ஒனராவே ஆயிடலாம்.''

''அட்ரு சக்கை... மடில துட்டு கனந்தாம் போல.''

''துட்டா இல்ல சார். மல்லாக் கொட்டைப் பயிர் நெலம்தான். ஒத்திக்கு வுட்ருக்குது. வித்துட்டு வரணும். டீ சாப்டு சார். கௌசல்யா, ஐயா கிட்டக் குடு.''

''இத எங்கப் புடிச்ச? கெட்டப் பொம்பளையாச்சே.''

''யாரு கெட்டவங்க... யாரு நல்லவங்க. பதந் தெரிஞ்சு ஓட்டினு எல்லா வண்டியும் நல்ல வண்டிதான். எனக்கு க்ளட்சு ஒரு மாதிரி லூஸா இருக்கணும். இன்னொருத்தருக்கு டக்குன்னு கேக்கணும். கிளட்சு சரியில்லன்னு ஓட்டத் தெரிஞ்சவன் எவனும் சொல்ல மாட்டான். அவன் வாட்டத்துக்கு அட்ஜஸ்ட் பண்ணிக்குவான்.''



''சைலன்ஸ்.'' கோர்ட் கூடிற்று. கூண்டில் செல்லத்தம்பி கை கட்டி நின்றான்.

''ஹிட் அண்ட் ரன்னு? விட்னஸ் எப்படி? யாரு? ஐ விட்னஸ் உண்டா? கூப்பிடுங்க முதல்ல. பாதிப் பாதியா கேஸ் கொண்டாராதீங்க நடராசன். ஐ விட்னஸ் உண்டா இல்லையா? டெண்ட் வினசல் ஒட்டையெல்லாம் விட்னஸ் இடையாது. விபத்தைப் பார்த்தது யார்? எப்போது? லாரி நம்பர் தெரியுமா? ரிப்போர்ட் செய்த ஆள் லாரி நெம்பர் சொன்னுரு? ஹைறவேல ஆயிரம் லாரி போகுது. சரியா எஸ்டாபிளிஷ் பண்ணுங்க. உம் பேர் என்னப்பா?''

''செல்லத்தம்பிங்க....''

''செல்லத்தம்பி. இவங்க சொல்ற நபரை நீ அடிச்சுப் போட்டுட்டு ஓட்டினீங்களா?''

''தெரிலீங்க தொரை.''

''பம்பர் ஏன் உடைஞ்சுது?''

''வளைஞ்சு கெடந்தது. நிமித்திறேனும். ஓடைஞ்சு போச்சுங்க.''

''எப்போ வளைஞ்சுது?''

''தெரிலீங்க. நானூறு மைல் போற லாரிங்க. எங்கினு ரா வேளைல தட்டிட்டிருக்கும்.''

''நீங்க ஆள் அடிச்சுப் போட்டுதா எழுதிக் குடுத்திருக்கீங்க. எப்படி?''


''நீதான் இடிச்சேன்னுரு. இல்லேன்னு எப்படிச் சொல்றது? சொல்லிட்டு எப்படி மறுபடி ரோட்ல நடக்கறது?''

''அடிச்சாங்களா உன்னே?... வலுக் கட்டாயமா கையெழுத்துப் போடச் சொன்னுங்களா?''

''அதெல்லாம் இல்லீங்க. ராவுல காட்டுப் பக்கம் வண்டி ஓட்டச் சொல்ல நாய் நரி குறுக்கே உளும். தட்டுன்னு முட்டி எகிறும் அந்த மாதிரி ஆகியிருக்கலாம்.''



உயிருள்ள இறந்த காலங்கள்



உயிருக்குயிராய் நேசிக்கும் நண்பன் செய்யும் முதல் துரோகம்; உயிருக்கும் மேலாய்ப் பாசம் வைத்திருக்கும் பெற்றோர் அளிக்கும் அதிர்ச்சி. உயர் சாதி என்கிற இரும்புச் சங்கிலி பூணூலாகத் தோளில் கனப்பதால் மருத்துவப் படிப்புக்கு இடம் கிடைக்காமல் அரசு அவனுக்குச் செய்யும் கொடுமை. இத்தனையும் இளைஞன் வெங்கட சுப்பிரமணியை, காப்டன் திராவிடமணியாக்குகின்றன. தன் இறந்த காலம் அவனுள் உசுப்பிவிடும் பழி வாங்குகிற உணர்ச்சியில் அவன் தாய் நாட்டுக்கு எதிராகச் செயல் படுவதாக நினைக்கப்படுகிறான். விளைவு? இள வயது நண்பன் இந்திரஜித்தின் துப்பாக்கியிலிருந்து அவசரப்பட்டு வெளிப்படும் குண்டு துளைக்க, தலை சாய்கிறான் வெங்கடசுப்பிரமணி என்கிற திராவிடமணி.

தமிழ் நாடக மேடைகளில் சீரியஸ் சப்ஜெக்டுகள் குறைவுதான். 'புதியதோர் உலகம்', 'நெஞ்சங்கள் வாழ்த்தட்டும்', 'தொடரும் அத்தியாயம்' என்று தொடர்ந்து ஹாட்ரிக் சாதனையாக, சிறந்த நாடகாசிரியராகக் கௌரவிக்கப்பட்ட 'பரத்' துணிச்சலாக மேடையேற்றியிருக்கும் இந்த நாடகம், பாராட்டப்பட வேண்டிய புதிய முயற்சி.

—சாருகேசி

''அது காட்டுப் பகுதியா நடராசன்?''

''வயல் பகுதி சார்.''

''மக்கள் வசிக்கும் இடம் இல்லையா?''

''ஊர்க்குள்றப் போச் சொல்ல அப்படிச் சத்தம்போட்டா நிறுத்திடுவோம் தொரை.''

''அந்தக் தட் சத்தம்கேட்ட பிறகு உன்னை யாரும் நிறுத்தல...இல்லையா?''

''ஆள் இடிச்சதாத் தெரியாதுங்க.''

''அப்புறம் ஹிட் அண்ட் ரன் எப்படி ஆகும் நடராஜன்?''

வண்டியின் நெளிசலும், அடிபட்டவரின் காயமும், மண் தரை ஓரம், டயர் தடமும் லாரி டயர் வடிவமும் பம்பரில் ஒட்டியுள்ள சுண்டு விரல், இறந்த நபரின் கை சேதமும், கடந்த செக்போஸ்ட் நேரமும் இறந்த நபரின் மரண நேரமும்... நடராசன் விளக்கிப் பேசினார்.

''என்ன செல்லத் தம்பி...இதுக்கு என்ன சொல்றே''

''இடிச்சிருக்கலாம் சாமி. ஆளு குரலே கேக்கல. யாரும் கூச்சல் போட்டு நிறுத்தல. ஆளு இடிச்சது எனக்குத் தெரியவே இல்ல சாமி.''

''இவங்க சுண்டு விரல் பம்பர்ல பார்த்த பிறகு போலீஸ்ல ரிப்போர்ட்பண்ணல சார்.''

''ஏம்பா... பதில் சொல்லு.''

''வேற யாரோ ஏத்தி தெருல கிடந்து நம்ப டயர்ல பட்டு ஒட்டிக்கிட்டிருந்திருக்கலாம்னு நெனைச்சோம் சாமி. குழம்பிட்டோம்.''

''இந்த லாரியை நீங்க கண்டுபிடிச்ச விதம் என்ன நடராசன்?''

மொட்டை போன் கால் என்று நடராசன் எழுதவில்லை. தானே தேடிக் கண்டுபிடித்ததாய் விவரித்திருந்தார்.

''எதேச்சையா இந்த லாரி கண்ல பட்டு விசாரிச்சீங்க. விசாரிச்சப்பா இருக்கலாம்னு சொன்னாங்க. அப்படித்தானே?'' கோர்ட் கேள்வி கேட்டது.

நடராசனால் மறுக்க முடியவில்லை.

''இது ஹிட் அண்ட் ரன் இல்லே. விட்னஸ் போறாது. அஜாக்கிரதையாய் வண்டி ஓட்டிய குற்றம் ஆறு வாரம் வெறும் சிறைத் தண்டனை. கூடவே அபராதம் ஆயிரம் ரூபாய். வண்டி ஓட்டிய செல்லத்தம்பி ஏற்கனவே பதினைந்து நாட்கள் சிறையில் இருந்துவிட்டபடியால்.....''

கௌசல்யா துள்ளிக் குதித்தாள்.

''காலு பிடிச்ச முதலே துணி உருவித் தின்னுடுச்சாம். போட்டும் போ. உசிரு முக்கியமா. முண்டக் கட்டையா நிக்கறது முக்கியமா. பொத்திக்கினு ஓடிடலாம் போ. நாலு வாரம் ஜெயிலு. வர அம்மாசிக்கு அடுத்த அம்மாசி தண்ணித் தொட்டித் தெருவுக்கு வந்துரலாம். மாலை போட்டு நான் இட்டாரேன். ஏன் அழுவுற. அழுவாதே போ.'' கௌசல்யா செல்லதம்பியின் கண்களைத் துடைத்துவிட்டு அழுதாள்.

செல்லத்தம்பி சந்தோஷம் தாங்காமல் அழுதான். ஆறு மாசமோ ஒரு வருடமோ என்று பயந்த பயம் கரைந்து போனதில், அந்தக் கரைந்த பயத்தின் விடுதலையில் அழுதான்.



கரகரப்பு கரைஞ்சு போகுது!
தொண்டையிலே கரகரப்பு என்றால் தொல்லை மிகக்
கடுமைதான். யாரையுமே பாதிக்கும் இது நம்மைப்
பிடிக்கும் வழிகளோ ஏராளம். புகை, தூசு, எண்ணெய்
மிகுந்த கார உணவு, குறிப்பாக ஐஸ் கிரீம் மற்றும்
குளிர்ந்த பானங்கள். கரகரப்பின் முதல் அறிகுறி
தோன்றும்போதே ஸ்ட்ரெப்ஸில்ஸ் சாப்பிடுங்கள்.
ம்ம்ம்...இது சுவைமிக்கது. இது கரைந்து
போகும்போதே வேலையைத் தொடங்குகிறது.
தொண்டைக்கு இதமளிக்கிறது. வாயில் புத்துணர்ச்சி
திகழச் செய்து சுத்தமாக வைக்கிறது.
சுவையுடன் சுகமளிக்குது
ஸ்ட்ரெப்ஸில்ஸ்
தொண்டைக் கரகரப்புக்கு சுவையான சிகிச்சை
4 இனசுவைகளிலே, ஆரஞ்சு, லெமன், திஞ்ஜர்-லெமன் மற்றும் ரெகுலர்.
Strepsils

''நீயே பேசி உடைச்சிட்டியேடா கேஸை. வக்கீலே வாண்டாம் ஒனக்கு.'' ராவுத்தர் வக்கீல் தட்டிக் கொடுக்கத் தலையைக் குனிந்து ஏற்றான்.

ராவுத்தர் ஐயாவும் கௌசல்யாவும் கோர்ட் வரை தனக்காகவே வந்த தைர்யம் தான் பேச வைத்தது என்றான். தன் சார்பில் அபராதம் கட்டின ராவுத்தரைத் தரையில் விழுந்து கும்பிட்டான்.

''கடவுளுக்குத் தெரியும் வண்டி ஓட்டினது நீயில்லேன்னு. உம்பேர்ல குத்தம் இல்லேன்னு. குத்தம் இல்லாத மனசுதான் சத்தியம். சத்தமா பேசும். ''ராவுத்தர் ஆதரவாய்ப் பேசினார் கௌசல்யா வாரம் தவறாது சிறைக்கு வந்து பார்ப்பதாய்ச் சொன்னாள். கோர்ட் கலைந்து போலீஸ் வண்டி ஏறுகிற வரை பேசிக் கொண்டிருந்தான்.

யார் அது என்று வேறு வழக்குக்கு வந்திருந்த பெண்கள் கேட்டபோது 'எங்க ஆம்பிளே' என்றாள்.

உறவு என்பது சடங்கால் வருவதில்லை. அது ஒரு உணர்வு. உணர்வு வரவேண்டும் என்பதற்கான கருவிதான் சடங்கே ஒழிய கருவியே உணர்வாகாது. புருஷன் என்பவன் யார்? நம்பிக்கை தருபவன். புருஷனின் கடமை என்ன? இங்கிலிருந்து பெண்களைக் காப்பாற்றுதல். பெண்ணின் கடமை என்ன? புருஷனின் பெருமையை வளர்ப்பது. அவனுக்கு இடையறாது துணை நிற்பது. எனவே தான் கடவுள் பரம புருஷன். மனிதர் அனைவரும் பெண்கள் என்கிறதான பாவம் வேதத்தில் சொல்லப்படுகிறது.

வக்கீலும் ராவுத்தரும் கோர்ட் முடிந்த பிறகும் பேசிக் கொண்டிருந்த தத்துவம் கௌசல்யாவுக்கும் செல்லத் தம்பிக்கும் புரியவில்லை.

புருஷனும் மனைவியும் முற்றிலும் கலத்தல் என்பது இல்லை. அதே நேரம் மனைவியல்லாது புருஷனுக்குப் பெருமை இல்லை. புருஷனில்லாது பெண்ணுக்குப் புகலிடம் இல்லை. பரமாத்மா புருஷன். ஜீவாத்மா மனைவி. இதுவே த்வைதம். இரண்டானது. வெவ்வேறானது. வெவ்வேறாயினும் விலக முடியாதது. விலகல் இல்லாதது. வக்கீல் ராவுத்தருக்கு விளக்கிக் கொண்டிருந்தார்

செல்லத்தம்பியும் கௌசல்யாவும் அந்த வேதனை நேரத்தில் மனத்தால் புருஷன் மனைவியானார்கள். சேர்ந்து நடக்க முடிவு செய்தார்கள். எத்தனை சோதனை வந்தாலும் விலகக் கூடாது என்றார்கள். விலக முடியாது என்று நினைத்தார்கள்.

தத்துவம் தெரிந்து வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுதல் என்பது எல்லோருக்கும் நியதியில்லை. சிலருக்குச் சட்டென்று வாழ்க்கையே தத்துவமாகிறது.


விஸ்வநாதன் முனகினான். முகத்தில் ஈரம் படுவதாய் உணர்ந்தான். கண்களை மெல்லத் திறந்தான். குழந்தைகளை அவன் முன்னே தூக்கிக் காட்டிக் கொண்டிருந்த காயத்ரி சந்தோஷமாய் ஹலோ என்றாள். விஸ்வநாதனுக்குத் தன்னெதிரே இருப்பது யார் என்று தெரியவில்லை. ''தாரிணி, தாரிணி, தாரிணி எங்கே'' முனகினான். (தொடரும்)



நியூட்ரமுல் சக்தி.
சேம்பியன்கள் தேர்ந்தெடுக்கும் சக்தி.
நியூட்ரமுல். அமுல் பால்வளம், அருமையான மால்ட்,
ஆரோக்கிய வைட்டமின்கள், ஆர்வமிகு புரதம்,
ஆதார உலோகதாதுக்கள், சப்புக் கொட்டிட சாக்கலேட்...
இவ்வளவுக்கும் விலை மலிவு—போர்ன்விடா, பூஸ்ட்,
மால்டோவா எதனையும் விட. மறவாதீர்கள் ஐஎஸ்ஐ தர
முத்திரை தாங்கியது நியூட்ரமுல் ஒன்றுதான்.
விளங்குவீர் நியூட்ரமுல் 'வஸ்தாத்'தாக.
Nutramul
MILK'S NOURISHING DRINK
IS: 1806
உயரம், வலிமை, உடல்திடம்--
பெருக்குவது எப்படி ?
பார்த்தறியாச் சலுகை: பலம்பெருக்கப் புத்தகம்!
NUTRAMUL P.O. BOX 10148, BOMBAY-400 001.
பெயர்
முகவரி
விற்பனையாளர்கள் விடுப்போர்:
குஜராத் கோ-ஆபரேட்டிவ் மில்க்
மார்க்கெட்டிங் ஃபெட. லிட்.,
ஆனந்த்-388 001.

மங்கைக்கு இரங்கிய பனந்தாள் ஈசன்

ஆனந்தி



ராஜகோபுரம் கொடிமரம்

சிவபெருமானை ஸம்ஹார மூர்த்தியாகவும் திருமாலைக் காத்தல் கடவுளாகவும் பொதுவாக நாம் நினைத்துவருகின்றோம். ஆனால் மார்க்கண்டேயனுடைய அன்புக்கும் அர்ச்சுனனுடைய பக்திக்கும் சுந்தரருடைய அதிகாரத்துக்கும் நந்தனாரின் எளிமைக்கும் கட்டுப்பட்டவர் சிவபெருமான்.

கண்ணபிரான் திரௌபதியின் மானம் காத்த கதை எல்லோரும் அறிந்தது. திருப்பனந்தாள் தாடகையீச்சரத்தில் ஒரு பெண்ணின் மானத்தைக் காத்து அருள் புரிந்தார் ஈசன்.

தாடகை என்ற பெண் தனக்கு ஒரு மகன் வேண்டும் என்பதற்காக இரட்டைப் பனையடியில் இருந்த சிவலிங்கத்தைத் தினமும் பக்தியோடு பூசித்து வந்தாள்.

ஒரு நாள் மலர் மாலையைச் சூட்ட எழுந்த போது ஆடை நெகிழ்ந்தது. மாலையைச் சிவபெருமான் திருமுடியில் அணிவிக்க முடியாமல் தாடகை திகைத்தபோது ஈசன் தம் திருமுடியை முன்னால் சாய்த்து மாலையை ஏற்றுக் கொண்டார். இறைவன் கருணையைக் கண்டு மனம் நெகிழ்ந்த தாடகை பூஜை செய்வதற்கு இரண்டு கரங்கள் போதவில்லையே என்று ஏங்கியதால் பதினாறு கரங்களை அவளுக்கு அளித்தார் எம்பெருமான்.

''எனக்கு அருள்பாலித்ததை அனைவரும் நினைவுகூர்வதற்காக இந்தத் தலத்துக்கு என் பெயர் வழங்க வேண்டும்'' என்று வரம் கேட்டாள் தாடகை.

இதை நினைவில் கொண்டு ஞானசம்பந்தப் பெருமான் இந்தக்கோயிலுக்கு வந்தபோது

''அலைமலி தண்புனலும்
மதி அரவும் அணிந்த
தலைவன் ஊர் பனந்தாள்
இருத் தாடகை யீச்சரமே''

என்று பாடி அருளினார். தாடகை எப்பேர்ப்பட்ட பாக்கியசாலி! இருத்தாடகையீச்சரம் என்றல்லவா பாடிவிட்டார்.

இருள் சூழ்ந்து வரும் நேரம். திருப்பனந்தாள் கோவில் தருமையாதீனத்தின் பராமரிப்பில் இருக்கிறது. எங்கும் தூய்மை, சாந்தம் நிலவுகிறது. இருட்டிவிட்டால், திருச்சுற்றிலுள்ள சிற்பங்களைப் பார்க்க முடியாதென்று கோபுர வாசலைத் தாண்டியதும் பிராகாரத்தில் நடையை எட்டிப் போட வேண்டியிருக்கிறது. துவஜஸ்தம்பம், பதினாறு கால் மண்டபத்தைக் கடந்து நாக கன்னிகைத் தீர்த்தத்தைப் பார்க்கிறோம். தீர்த்தத்தைத் தலையில் தெளித்துக்கொண்டு விறுவிறுவென்று நடக்க வேண்டியிருக்கிறது. உள் கோபுரமும் தாண்டிச் சென்றால் மிக அழகிய சிற்பங்களைக் காணலாம். கஜ ஸம்ஹார மூர்த்தி வடிவமும் அருகே தேவி சற்று அச்சத்துடன் நிற்பது போன்ற நிலையும் கல்லில் செதுக்கியதா இது என்று பிரமிப்பூட்டுகிறது. ஊர்த்வ தாண்டவ மூர்த்தியின் அரிய வடிவத்தையும் கண்டு வியக்கிறோம். கையில் வில்லோடு திரிபுர ஸம்ஹாரக் கோலம்.

பொன் வேய்ந்த பராந்தகச் சக்கரவர்த்தியின் காலத்தில் கருங்கல் திருப்பணியாகக் கட்டப்பட்டது என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். 'பல கல் வெட்டுக்



ஊர்த்துவ தாண்டவம்

களும் பெரிய புராண கதைகளை ஒட்டிய அபூர்வமான சிற்பங்களும் இந்தக் கோவிலில் இருக்கின்றன.

பனந்தாளீசர் சந்நிதி. திரை விலகி அடுக்குத் தீபத்தைத் தூக்கிப் பிடிக்கிறார் அர்ச்சகர். எவ்வளவு பெரிய தீபம்! அதை எப்படித் தூக்குகிறாரோ! அடுக்கு தீபம் அசைய அதன் சுடர்களும் அசைகின்றன. செஞ்சடையப்பர் கற்பூர ஜோதியின் ஒளியில் பிரகாசமாகத் தெரிகிறார்.

''கரமொளிர் கதிர்களேழ் நிலை மாடங்
கடப்பரி தாகிநிற் பனசை
வரமொளிர் பெரிய நாயகி மகிழ
வாழ் சடையப்ப நாயகனே!''


திருக்கடவூரில் குங்கிலியக் கலயர் என்ற சிவனடியார் ஒருவர் தினமும் கோவிலில் ஈசனுக்குச் சாம்பிராணி போடுவார். அவரது துணைவியார் நீலாயி என்று கல்வெட்டுக் கூறுகிறது. குங்கிலியத் திருப்பணியிலேயே அவரது செல்வம் கரைந்து விட்டது. ஒரு நாள் குழந்தைகளின் பசி காணப் பொறுக்காது நீலாயி தன் மாங்கல்யத்தை அவரிடம் கொடுத்து விற்று அரிசி வாங்கி வரும்படி கூறினாள். திருமாங்கல்யத்தைக் கொண்டு சென்ற கலயர் எதிரில் ஒரு வண்டி வந்தது. எல்லாம் குங்கிலியப் பொதி. அப்படியே பொற் தாலியைக் கொடுத்துவிட்டுக் குங்கிலியத்தைக் கோவிலில் இறக்கிக் கொண்டார். நள்ளிரவு வரை மணம் வீசத் தூபமிட்டுக் கொண்டிருந்தார்.


கலயர் முன் ஈசன் தோன்றி 'வீட்டிற்குச் சென்று பசி நீங்குக' என்று கூறினாராம்.

○ தாடகை பூஜை வரலாறு



○ குங்கிலியக் கலய நாயனார் சிவலிங்கத்தை நிமிர்த்துதல்





○ தலவிருட்சம் இரட்டைப்பனை

குபேரனைப் போல வீடு அடையாளம் தெரியாமல் விழித்தார் கலயர். அப்படிச் செல்வம் நிரம்பி விட்டது. தூப கைங்கரியத் தினாலேயே கைலாய பதவி கிடைத்திருக்கும் அவருக்கு!

சோழ மன்னனான வீரசேனன் பனந்தாளுக்கு வந்து அருணஜடேச்வரரைப் பணிந்தான். லிங்கத் திருமேனி சாய்ந்திருப்பதைக் கண்டு நிமிர்த்த முயன்றான். யானை குதிரைகளைப் பூட்டி நிமிர்த்தப் பார்த்தார்கள். முடியவில்லை. குங்கிலியக் கலயர் பனந்தாளுக்கு வந்தார். யானைகளை அவிழ்க்கச் சொல்லித் தம் கழுத்தில் கயிற்றைக் கட்டிக் கொண்டு இழுத்தார். உயிர் போவதானாலும் சிவத் தொண்டு செய்ய வேண்டுமென்ற மன உறுதிக்கு ஈசன் கட்டுப்பட்டார். லிங்கத் திருமேனி நிமிர்ந்து விட்டது.

● ● ●

மலையரசன் பெற்ற தவக் கொழுந்தான அம்பிகையே இந்தத் தலத்தில் ஞானோபதேசம் பெற்றாள். இதை நிரூபிப்பது போல அம்மன் சந்நிதி சுவாமி சந்நிதியை எதிர் நோக்கி யிருக்கிறது. உபதேசம் பெறுவதற்கு முன் பாலாம்பிகையாகப் பூஜித்த தேவி உபதேசம் பெற்றதும் பிருஹந்நாயகியாக பெரிய நாயகியாக வளர்ந்து அருள் புரிகிறாள். இந்தத் தாலவனம் ஞானவனமாகவும் விளங்குகிறது. அம்பிகை கற்பூர ஜோதியில் ஞானப் பிழம்பாக ஒளிர்கிறாள்.

பெரிய பெருமாட்டியான தேவி சற்று வளைந்த கிரீடமும் ஆபரணங்களும் அணிந்து பளபளக்கும் ஆடை அலங்காரங்களுடன் மாலைகள் மணம் வீச மங்கல வடிவமாக நிற்கிறாள்.

சுமதி என்ற நாக கன்னிகை பூஜித்து அயோத்யாதிபதியை நாயகனாகப் பெற்ற தலம் இது. வெளிப் பிராகாரத்தில் இரட்டைப்பனையின் அருகே நாககன்னிகை வந்து பூஜித்த கிணறு இருக்கிறது.

ஐராவதம் பூஜித்த தலம்.

மண்ணியாறு உட்பட பல தீர்த்தங்களினுல் சிறப்புப் பெற்ற தலம்.

நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார், அருணகிரிநாதர், சிதம்பர முனிவர் முதலியோர் பாடிப் பரவிய தலம்.

செஞ்சடை வேதிய தேசிகர் என்னும் புலவர் தலபுராணம் பாடியிருக்கிறுர்.

திருப்பனந்தாள், ஸ்ரீகாசி மடத்தினுல் மிகவும் புகழ் பெற்றிருக்கிறது.

ஸ்ரீ காசி மடம் என்றதும் குமரகுருபர சுவாமிகளும் பிள்ளைத் தமிழும் நினைவு வராமலிருக்காது. இறையுணர்வைப் பெருக்கவும், தமிழ் மொழி சிறக்சவும் இவர் பாடிய பாடல்கள் அற்புதமானவை.

தமிழ்த் தாத்தாவான டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் இந்த மகானைப் புகழ்ந்து பக்கம் பக்கமாக எழுதியிருக்கிறுர்.

குமரகுருபரர் இயற்றிய சகல கலாவல்லி மாலை எளிய இனிய பாக்களால் அமைந்திருக்கிறது. மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ், முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ், கந்தர் கலி வெண்பா, சிதம்பர மும்மணிக் கோவை, கைலைக் கலம்பகம் முதலிய அரிய நூல்களைத் தமிழ் மொழி வளம் பெருகத் தந்தவர் குருபரர்.

இந்த மகானுடைய பரம்பரையில் வந்து இப்போது காசி மடத்தின் தலைவராக உள்ள ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக் குமாரசாமித் தம்பிரான் அவர்கள் அந்தப் பெருமையை நிலைநாட்டி வருகிறுர்கள். திருக்கயிலாய யாத்திரையை மேற்கொண்டு கைலயங்கிரியைத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றவர்கள். அவர்களுடைய எளிமையும் அடக்கமும் நம்மைத் திகைப்பில் ஆழ்த்துகின்றன.

மடத்தின் உள்ளே இருக்கும் தடாகத்தின் மத்தியில் உள்ள வெள்ளை வாரணப் பெருமான் சந்நிதியில் தீபாராதனை நடக்கிறது. சுவாமிகள் கண் மூடி த்யானத்தில் ஆழ்ந்து காணப்படுகிறுர். வெண்மை நிறமுள்ள விநாயகப் பெருமான் சிவந்த ரோஜா மாலை அணிந்து அமர்ந்திருந்த கோலம் அற்புதம். காசி விசுவநாதர், விசாலாட்சியை வணங்கி சுவாமிகள் அளித்த பிரஸாதத்தை வாங்கிக் கொண்டபோது மனம் நிறைந்து ததும்புகிறது.

பிறகு விநாயகர் கோயிலுக்கு வெளியே சற்று நேரம் அமர்ந்திருக்க நேரிட்டது. எதிரே உயர்ந்த கோபுரம். கீழே தண்ணீர், மின்னும் தாரகைகள். மென்மையான காற்று. தெய்விக மணம். சாந்தம் தவழும் சூழ்நிலை. தண்ணீரில் அபூர்வமாகக் கேட்கும் 'களக்' என்ற ஒலியைத் தவிர வேறு சப்தம் இல்லை. இடதுபுறத்தில் மடம். எல்லாம் ஏதோ கனவுலகக் காட்சியாகத் தோன்றுகிறது.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை இணையடி நீழலே!

புகைப்படங்கள்: என். ராமகிருஷ்ணு

அருள்வாக்கு

அந்தக் காலத்தில் எல்லா சாஸ்திரங்களும் — வேதாந்தம், வைத்தியம், சங்கீதம், டிக்ஷனரி கூடத்தான் — சுலோகங்களாகத்தான் செய்யப்பட்டன. காரணம் என்ன? அப்போது அச்சுப் போட்டுப் புத்தகம் தயாரிக்கத் தெரியாது. எனவே கடைக்குப் போய் விலை கொடுத்து எத்தனை பிரதி வேண்டுமானுலும் வாங்கிக் கொள்ளலாம் என்றுல் முடியாது. அத்தனை வித்தியார்த்திகளுக்கும் ஏட்டுச் சுவடியில் எழுதிக் கொடுப்பது என்றுல் அதற்கே ஆயுசு காலம் போதாது. எனவே எதையும் மனப் பாடம் பண்ணுகிறமாதிரி கொடுப்பதே யுக்தம் என்று கண்டார்கள். பேச்சு நடையில் இருப்பது மறந்து போகும். எப்போதும் நாம் பேசிக் கொண்டே இருப்பதால் அதே நடையில் இருக்கிற பாடம் தனியாக மனசில் நிற்காமல் உதிர்ந்து போய் விடும். ஆனுல் அதுவே ஒரு சந்தம்,



எதுகை, மோனை முதலானவைகளோடு சேர்ந்து செய்யுளாக வந்து விட்டால் மனப்பாடம் செய்து மனசில் மறக்காமல் பதித்துக் கொள்ளலாம். இதனுல் தான் எந்த சாஸ்திரத்தையும் சுலோகங்களாகச் செய்து உருப்போட வைத்தார்கள். அச்சுப் புத்தகங்கள் வருகிற வரையில் மகா பண்டிதர்களாக இருந்தவர் ஓர் ஏட்டுச் சுவடி கூட இல்லாமல் ஞாபகத்திலிருந்தே சகல சாஸ்திரங்களையும் கற்றுக் கொண்டு சொல்லி வந்தார்கள். 'இப்போது புஸ்தகம் என்று ஒன்று இருப்பதால் 'பார்த்துக் கொள்வதற்குத்தான் புத்தகம் இருக்கிறதே' என்று எவரும் எதையும் இப்படி மனசுக்குள் ஆழமாக வாங்கிக் கொள்ளாத நிலைமையையே பார்க்கிறேம். இன்று வெளியே லைப்ரரிகள் அதிகம். அக்காலத்தில் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் கூட ரொம்பப் பேர் நடமாடும் வாசக சாலைகளாக இருந்து வந்தார்கள். காரணம் நெட்டுருப் பழக்கம்தான். இப்படி நெட்டுரு பண்ணுவதாலேயே புத்திக்கு ஒரு பலம், ஐகாக்ரியம் (Concentration) ஒழுக்கம் (Mental discipline) இவையும் மாணுக்கருக்கு உண்டாயிற்று.

• ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராசார்ய சுவாமிகள்


ஒரு சாதாரண டிட்டர்ஜெண்ட்
சலவை கட்டியை விட
எடையோ இரண்டு மடங்கு
விலேயோ
சிலகாசுகள்தான் அதிகம்
அதிகப்படியான சலவை செய்யும் டிட்டர்ஜெண்ட் கட்டிகள்
சிக்கன முறையில் சலவை செய்யும் சோப் பார்கள்.
நிகரமான எடை 300 கிராம்கள்
டோட்டல்
நீலநிற. டிட்டர்ஜெண்ட் பார்
Total
BLUE DETERGENT BAR
எளிதான சலவைக் கேற்ற இந்து பகுதிகளேக் கொண்டது
தரமான தயாரிப்பிஜே வழங்குவோர்:
கர்நாடக சோப்ஸ் அண்டு டிட்டர்ஜெண்ட்ஸ் லிமிடெட்
பெங்களூர்
விற்பஜே செய்வோர்:
மைசூர் சேல்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட் பெங்களூர்
MCA/TDB/52/TAM-R

சென்ற வாரம்

முதல் வரிசையில் ஏழாவது ஸீட்டில் அமர்ந்திருக்கிறார் சுந்தரமூர்த்தி. நாடகத்தின் ஆசிரியருக்கும் அதே ஸீட் வழங்கப்பட்டிருக்கிறது. இவர் நகர மறுக்கிறார். வாக்குவாதம் தொடர்கிறது. நாடக ஆசிரியரின் தங்கை நாடகத்தில் முக்கிய பாத்திரமேற்று நடிப்பவள். அவளும் சர்ச்சையில் பங்கேற்கிறாள். நாடகக் கலையில் மட்டுமின்றிச் சகல துறைகளிலும் வாழ்க்கையிலும் மாறுதல்கள் சதா நிகழ்வது பற்றியும் அதனைக் காண மறுப்பவர் பற்றியும் விவாதம் நீடிக்கிறது. சபா காரியதரிசி வருகிறார். அவர் தலையிட்டால் ஓர் உடன்பாடு ஏற்படுமா? பார்ப்போம்!

சுந்தர: ராமன் இங்க வாய்யா.
செக்ரட்டரி: என்ன அண்ணா (விசுவநாதனைப் பார்த்து) நமஸ்காரம். (சுந்தரமூர்த்தியிடம்) ஸார் தான்... (தொண்டையை உயர்த்துகிறார். தெளிவாகப் பேச முடியாமல் போய்த் துப்பிவிட்டு வருகிறார். திரும்பி வந்து) ஸார் தான்...
சுந்தர: தெரியும். சொன்னார். இன்னிக்கு டிராமாவை இவர் தான் எழுதியிருக்காராம். அதெல்லாம் சரி, ராமன், நான் இந்தச் சபாவிலே எத்தனை நாளா மெம்பர்?
செக்ரட்டரி: என்ன இப்படிக் கேட்டுட்டேள்? ஆரம்பத்திலேருந்தே நீங்கதானே மெம்பர்! (விசுவிடம்) அடுத்த வருஷம் இவர் பட்டம் கூட மாட்டப் போறோம்.
சுந்தர: எத்தனை வருஷமா இந்த இடத்தில உட்கார்ந்துண்டிருக்கேன்?
செக்: இத பாருங்க. மத்த ஸீட்டெல்லாம் ஃபுல்லி ரிசர்வ்ட். இன்னிக்கு கமிஷனர் வரார். டி. வி. டைரக்டர் வரார். அருமை நாயகம் வரார்.
சுந்தர: ஏன், நான் மட்டும் வரமாட்டேனா?
செக்: ஆனஸ்ட்டா, அதான். நீங்க இந்த மாதிரி எக்ஸ்பெரிமெண்டல் டிராமாவுக்கெல்லாம் வரமாட்டீங்கன்னு நினைச்சோம். அதான் சார் இந்தக் குழப்பம். இன்னிக்கு ஒரு நாள் அட்ஜஸ்ட் பண்ணிக்கிறீங்களா?
சுந்தர (கண்டிப்பாக): அதெல்லாம் முடியாதுப்பா.
செக்ர (சுருதி மாறி): அண்ணா, மன்னிச்சுக்கணும். ரொம்பப் பிடிவாதம் புடிக்கறேள்.
சுந்தர: நானா? நானா பிடிவாதம் புடிக்கறேன்?
செக்ர: ஒரு நாளைக்கு அட்ஜஸ்ட் பண்ணிக்க மாட்டேளா?
சுந்தர: ஏன், அவர்தான் அட்ஜஸ்ட் பண்ணிண்டு போகட்டுமே!
செக்ர: அவர் எழுதியிருக்கார். அவருக்கு முன் வரிசையில இடம் இல்லேன்னா என்னண்ணா இது? இப்ப நான் என்ன சொல்றேன், டி ரோல சௌகரியமா ஒரு இடம் போட்டுத் தந்துட்டாப் போறது.
சுந்தர: முடியாது. நான் இந்த ஸீட்லதான் உக்காருவேன். நீ என்ன வேணா செஞ்சுக்கோ. இப்ப என்னை மட்டும் இங்கிருந்து கிளப்ப முயற்சி பண்ணினே,

மாறுதல் வரும்

சுஜாதா

செக்ரட்ரி: ஏன்? என்ன விஷயம்?
சுந்தர: இவருக்கு என் ஸீட்டைக் குடுத்திருக்கியே, என்னய்யா ஆர்கனைசேஷன்!
செக்ர: இஸ் இட்? (விசுவிடம்) சார், கொஞ்சம் காமிங்கோ. (டிக்கட்டை வாங்கிப் பார்த்துவிட்டு, யோசித்து) இது எப்படி ஆச்சு?
சுந்தர: பாத்தியா! (என்று பெண்ணைப் பார்க்கிறார்.)
செக்: சார், ஐம் ஸோ ஸாரி. இன்னிக்கு மட்டும் வேறே ரோவில ஸீட் போட்டுக் குடுத்துர்றேன்.
சுந்தர: அது எப்படி இவருக்கு மட்டும் சலுகை? இவரை அங்கே போகச்சொல்லு.
செக்ர: சார், இவர் யார் தெரியுமோல்லியோ? ஆதர்.... டிராமாவோட சிருஷ்டி கர்த்தா.
சுந்தர: இவர் யாரா இருந்தா என்ன? பாக்கறவங்க இல்லாம டிராமாவே கிடையாது தெரியுமா? அதனால எனக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கணும்.
செக்ர: எழுதினவருக்கு ஒரு மரியாதை வேண்டாமா?
சுந்தர: வேற ஸீட்டுப் போட்டுக் குடுக்கறது. என் ஸீட்தான் ஆம்புடுதோ?

...''பாக்கிறவங்க இல்லாம டிராமா கிடையாது தெரியுமா? அதனாலே எனக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கணும்!''





செக்ரட்டரி: அவர் எழுதியிருக்கார், அவருக்கு முன் வரிசையிலே இடம் இல்லேன்னு என்னன்னு இது...
சுந்தரமூர்த்தி: முடியாது நான் இந்த ஸீட்லதான் உட்காருவேன் நீ என்ன வேணு செஞ்சுக்கோ! இப்ப என்னே மட்டும் இங்கிருந்து கிளப்ப முயற்சி பண்ணினே, கோர்ட்டுலே வழக்குப் போட்டுடுவேன்...!

புகைப்படங்கள்: ரங்கிஷ்

கோர்ட்டுல வழக்குப் போட்டுருவேன். ப்ரீச் ஆப் காண்ட்ராக்ட்னு. என் சொத்தையே தீர்த்தாலும் சரி, கடைசி வரைக்கும் இதைப் பார்த்துருவேன்.

செக்ர: நானு நாற்காலி தள்ளி உக்காரக் கூடாதா? என்னன்னு இது?

சுந்தர: முடியாது. ஆன் பிரின்ஸிபிள் முடியாது.

செக்ர (பரிதாபமாக, பெண்ணைப் பார்த்து, விசுவைப் பார்த்து): ஸாரி ஸார். நீங்க வந்து ஒண்ணு செய்யுங்கோ பக்கத்திலேயே இந்த ஸீட்லேயே உக்காந்து பாருங்கோ. இங்க வரப்போற கோகுல் ஸார் அவ்வளவு பிடிவாதம் பிடிக்க மாட்டார்னு நினைக்கிறேன். அவரை வேணு ரிக்வெஸ்ட் பண்ணிப் பார்க்கறேன். என்ன! (சுந்தரமூர்த்தியிடம் ஆவேசமாக) அண்ணு, உங்க ஏ-செவன்லயே ஜீவித காலம் வரைக்கும் உக்காருங்கோ. நாங்க அட்ஜஸ்ட் பண்ணிக்கிறோம். அதுக்குத்தானே நாங்க இருக்கோம். (விசுவிடம்) நீங்க இங்க உக்காந்துக்கங்கோ சார். (பெண்ணிடம்) ஸாரி மிஸ் ராதா, உங்களே மேக்கப் ரூம்ல கூப்பிட்டுண்டிருக்கா.

(பெண் முறைத்து விட்டுப் போகிருள். செக்ரட்டரி கெஞ்சும் குரலில் அவளுடன் பேசிக் கொண்டு செல்ல, விசு உட்காருகிருன். சற்று நேரம் கனமான மௌனம்.)

சுந்தர (தன்னிச்சையாக): நான் எதுக்குச் சொல்ல வரேன்னு, ஒரு பிரின்ஸிபிள்னு லைஃப்ல வேணும் இல்லேயா? நீ சரியா ஆர்கனைஸ் பண்ணும தப்புப் பண்ணிட்டா அதுக்கு நான் வளைஞ்சு கொடுக்கணுமா? நான் சொல்றது சரின்னு படறதா உங்களுக்கு? இப்ப உங்க பேர்ல எனக்கு மரியாதைக் குறைவு ஏதும் இல்லே. ஆனு, வாழ்க்கையில ஒரு பிரின்ஸிபிள் வேண்டாம்?

விசுவ: வாஸ்தவம்தான்.

சுந்தர: பர்சனலா இதை எடுத்துக்கக் கூடாது நீங்க. என் லைஃப் பூரா இப்படி நான் சண்டை போட்டிருக்கேன். பிரமோஷன் கொடுக்கலேன்னு சுப்ரீம் கோர்ட் வரைக்கும் போனேன். ஒருமுறை டிரான்ஸ்பர் பண்ணுனய்யா. அது ரூல்படி தப்புன்னு சொல்லிக் காட்டினேன். பாஸ் அதுக்கு ப்ரமோஷன்ல கையை வச்சான். ரூட்டைப் போட்டுட்டேன். எதுக்குச் சொல்ல வரேன்னு, ஒரு ப்ரின்ஸிப்பிள்னு வெச்சுண்டா, அதை விடவே கூடாது. அதுலேருந்து மாறவே கூடாது.

விசுவ: அது எப்படி ஸார்? மாறுதல் இல்லாம முன்னேற்றமே இல்லேயே சார்.

சுந்தர: மாறணும்னு நீ மாறிட்டுப்போய்யா. நான் எதுக்கு மாறணும்?

விசுவ: அதுகூட ஒரு விதத்தில வாஸ்தவம் தான்.

சுந்தர: இப்ப நாடகத்தையே எடுத்துக்க. எனக்குப் பிடிச்ச நாடகம்றது வேறே. அதிலே பாட்டு இருக்கணும். படிப்பினே இருக்கணும். இப்ப நீ நாடகம் போடற. அது எனக்குப் பிடிக்கணும்னு கட்டாயமில்லேயே. எதுக்காக ஒன்னுடை வால் மூளை நான் ஏத்துக்கணும்? இந்த ஒலகத்திலே இருக்கிற வரைக்கும் ஒரு பிடிவாதம் வெச்சுண்டு இருக்க எனக்கு உரிமை இருக்கா இல்லியா?

விசுவ: அது உங்களைச் சுத்துப்பட்ட சமூகத்தைப் பாதிக்காம இருக்கிறவரைக்கும் வெச்சக்கலாம் சார்.

சுந்தர்: இப்ப நான் இந்தச் சீட்டைக் கொடுக்க மாட்டேன்னு சொன்னது எந்த விதத்திலே மத்தவங்களைப் பாதிக்கிறது?

விசுவ: குடுத்தா என்ன ஆயிடும் சார்?

சுந்தர்: குடுக்காட்டா என்ன ஆயிடும்னு நான் கேக்கறேன்.

விசுவ: இது ஒரு சின்ன உதாரணமா இருக்கலாம். இந்த மாதிரி பெரியவங்களுடைய பலவிதமான பிடிவாதங்களினால இளைய வர்கள் செய்ய நினைக்கிற மாறுதல்களுக்குத் தடங்கல் வருதுன்னு சொல்றேன்.

சுந்தர்: அது எப்படி? எல்லா மாறுதல்களை யும் நாங்க ஏத்துக்கணும்னு கட்டாயம் இல்லையே?

விசுவ: உங்களுக்குப் பிடிச்ச நாடகம் அந்தக் காலத்திலே பாட்டுப் பாடிக்கிட்டு ஸ்டேஜில சஞ்சீவி மலை பறக்கறதுன்னு சொல்றீங்க. அது இந்தக் காலத்துக்குச் சரிப் பட்டு வராது. பலபேர் அனுபவிக்க மாட்டாங்க. ரசிக்க மாட்டாங்க. இப்ப உங்களை மாதிரி ஆளுங்க அரசாங்கத்திலேயோ பொறுப்புள்ள பதவிகளிலேயோ இருக்கீங்க. இயல்பா ஒருவித பரிணாம வளர்ச்சியா ஏற்பட வேண்டிய மாறுதல ஒங்களாலே ஏத்துக்க முடியல்லே. உங்களோட பிடிவாதத்தினால உங்களோட இடியா-ஸின்க்ரஸியால மாறுதலுக்கு ஆதரவு இல்லாமப் போயிடறது இல்லையா? ஒங்களோட ஐடியாவை எங்க மேலே திணிக்கிறீங்க....

சுந்தர்: நீ சொல்ற மாறுதல்தான் நல்லதுன்னு எப்படி எப்பவும் எடுத்துக்க முடியும்?

விசுவ: நல்லது கெட்டதுன்னு இல்லே சார் மாறுதல். மாறுதல் இல்லேன்னா மனுசன் செத்துப் போயிடுவான். எல்லாத்திலேயும் மாறுதல் வந்துதான் தீரணும். நீங்க பேசிக்கிட்டு இருக்கப்பவே ஒங்க செல்கள் எல்லாம் மாறிக்கிட்டு இருக்குது. அதைத் தவிர்க்கவே முடியாது.

சுந்தர்: மாறுதல்ங்கறது நல்லதுக்கா கெடுதலுக்கான்னு பார்க்கணுமா வேண்டாமா?

விசுவ: அய்யோ, நல்லது கெடுதல் எல்லாம் பத்தி இந்த மாறுதலுக்குக் கவலை இல்லே சார். மாறுதல்ங்கறது ஒரு மூர்க்கத்தனமான நியதி. நீங்க இன்னிக்குப் பிடிவாதம் பிடிச்சீங்க. இந்தப் பிடிவாதம் கிறது கொஞ்சம் அதிகமான ஜனங்களைப் பாதிக்கும்படியா இருந்தா, உங்களை இந்த நாற்காலிலேருந்து கிளப்பித் தூக்கிப் போட்டுட்டுப் போயிடுவாங்க. அதுக்குப் பேரு வெறும் மாறுதல் இல்லே... புரட்சி.

சுந்தர்: மாறுதலோ புரட்சியோ, நம்ம கிட்டே முடியாதப்பா.

விசுவ: வந்துரும் சார், வந்துரும்.

சுந்தர்: சரி, அதுபாட்டுக்கு வரட்டும். (கெடிகாரத்தைப் பார்த்து) இன்னிக்கு உன் நாடகம் என்ன சொல்லுது?

விசுவ: என் நாடகம் இந்த மாறுதலைப் பத்தித்தான் சார். நாடகம்கிறது பாட்டு, படிப்பினைன்னீங்க. என் அபிப்பிராயத்தில நாடகம், நம்முடைய பாசாங்குகள் பிடிவாதங்களை எல்லாம் காட்டணும். இன்னிக்கு உங்க கூடப் பேசினதில எத்தனை விஷயங்கள் வெளில வந்தது பாருங்க. உங்க மனைவியை அழைச்சுக்கிட்டு வராததுக்கு நீங்க சொன்ன காரணம்; என் தங்கையைப் பார்த்ததும் உங்க போக்குல, கண்ல தெரிஞ்ச மாறுதல்; ப்ரமோஷன் கொடுக்கலேங்கிறதுக்கு நீங்க சுப்ரீம் கோர்ட்டு வரைக்கும் போனது; உங்களுக்கு ப்ரமோஷனுக்குத் தகுதி இல்லாமக் கூட இருக்கலாம். கொடுக்காதது நியாயமாகக் கூட இருக்கலாம். (ஆவேசத்துடன்) ஆனா, உங்க பிடிவாதம், ஒரு தகர நாற்காலிக்குக் கூட சுப்ரீம் கோர்ட் வரை போனீங்க. கேட்டா, ப்ரின்ஸிப்பிள்! உங்க மாதிரி ஆட்கள்தான் இப்ப நம்ம தேசத்தோட தலை விதியை நிர்ணயிச்சுட்டு இருக்காங்க. ஒரு சொந்தக் குரோதத்தைத் தேசிய அளவுக்கு உயர்த்தறீங்க. மாறுதல் வரதை மறுக்கறீங்க. (அமைதியுடன்) இதையெல்லாம்தான் என் நாடகம் காட்டுது சார்.

வானவில்லுக்கு வர்ணங்கள் ஏழு!

லதா: மேற்கத்திய இசையில் விஷய ஞானத்தோடு கூடிய ஈடுபாடு உள்ளவர்.

லதா: எதிராஜ் கல்லூரி பட்டதாரி

லதா: உடை அலங்காரப் போட்டியில் பரிசு பெற்றவர்.

லதா: பல நிறுவனங்களுக்கு விளம்பர மாடலாக விளங்கியவர்.

லதா: இன்று ஒரு வங்கியில் பணி புரிந்தபடியே....

லதா: தபால் மூலம் எம். ஏ. சரித்திரம் பயில்கிறார்.

லதா: இந்த வாரக் கல்கி மேலட்டையை அலங்கரிக்கிறார்.

—சிக்கி

வண்ணப்படம்: உத்ரா





Smt. RENGAMONY

In fond and affectionate memory of

Smt. RENGAMONY

Born : 25-3-1925

Died : 29-8-1972

Beloved wife of S. Padmanabhan Affectionate mother of Jana and Kanna, mother-in-law, of J. Gopalan & Malathy, Grandmother of Sandhya & Srinivas

நேசமுள்ள வான்சுடரே! வாசகர் கருத்து





● 'மௌனத்தில் பேசிடுவோம்' என்ற தொடரை 'மரணத்தில் கூடிடுவோம்' என்று பத்மாவை எழுத வைத்த 'ராம்' ஒரு 'நேசமுள்ள வான் சுடரே!' ஜெயராஜின் ஓவியம் தொடர் கதைக்கு உயிரூட்டியது!

தூத்துக்குடி-6 — உஷா முருகன்

● வாரா வாரம் நெஞ்சத்தைத் துள்ளல் போடும் விதமாக எழுதிவிட்டு, கடைசியில் வட்டியும் முதலுமாக நெஞ்சைப் பிழியப் பிழியத் துடிதுடிக்கச் செய்துவிட்டார்.

ஊரூர்வெளிக்கடை — ராஜன்

● 'ராம் உதட்டில் சின்னப் புன்னகையை வைத்துக் கொண்டு கனவுகள் தொல்லை தராத நிரந்தரத் துயிலில் ஆழ்ந்துவிட்டான்' என்று முடியும் வரிகளைப் படித்ததும் நான் 'ஓ!' வென்று அழுதே விட்டேன்.

திருவண்ணாமலை — சாந்தி ராஜா

● நீ இவ்வளவு விரைவில் 18 வாரங்களில் தோன்றி வளர்ந்து மறைந்து விடுவாய் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனால் உண்மையிலேயே நீ ஒரு பிரகாசமான சுடர்தான்.

தருமபுரி-2 — திருமதி தனலட்சுமி

● சவிதாவின் 'நேசமுள்ள வான் சுடரே' தொடர் என் கண்களில் கண்ணீரை வர வழைத்து விட்டது. ராமின் முடிவும் பத்மாவின் சோகமும் நெஞ்சை விட்டகலாத ஒன்று.

முத்தரசநல்லூர் — கே.எஸ். சுந்தரவல்லி

● இனிமையான கவிதை ஒன்றைப் படித்த திருப்தி ஏற்பட்டபோதிலும் கதையின் முடிவு மனசைக் கனத்துப் போகச் செய்து விட்டது.

போடிநாயக்கனூர் — எஸ். சையது முகமது

சுந்தர: அப்படியா? யாரு நடிகர்கள்? நம்ம ராதா, அப்புறம்?

விசுவ: அப்புறம் நானு, செக்ரட்டரி, நீங்க... அவ்வளவுதான்.

சுந்தர: என்னப்பா சொல்றே? புரியும் படியாச் சொல்லு, நானு?

விசுவ: இதுவரைக்கும் நாம பேசிக்கிட்டு இருந்ததுதான் என் முதல் ஓரங்க நாடகம். சார், நாடகம் மாறிப் போச்சு. (எதிரே கையைக் காட்டி) அத பாருங்க, அவுங்கள்ளாம் இதுவரைக்கும் நம்மைத் தான் பார்த்துக்கிட்டு இருந்தாங்க. (பக்கவாட்டில் பார்த்து உரக்க) விளக்கைப் போடுப்பா ஆடியன்ஸுக்கு!

(ஹாலில் பொது ஒளி ஏற்பட)

இதான் சார் நாடகத்திலே ஏற்பட்டுக்கிட்டு இருக்கிற மாறுதல்!

சுந்தர (நின்று, ஆடியன்ஸைப் பார்த்து, பிரமித்து) அடப் பாவி, நான் வரல்லே! எனக்கு இந்த மாறுதல் வேண்டாம்! வேண்டவே வேண்டாம்.

(தன் பொருள்களையெல்லாம் அள்ளிக்கொண்டு ஓடுகிறார்.)

விசுவ: அதைத்தான் நான் சொல்றேன். வெலகிக்கிங்கன்னுட்டு!

(ஏ-ஏழு ஸீட்டில் விசுவநாதன் உட்கார்ந்து கொள்ள, மேடை விளக்குகள் மங்கி மறைய, திரை விழுகிறது.)

அடுத்த வாரம்: 'வாசல்' ஆரம்பம்



மரண தண்டனையை எப்படி நிறைவேற்றுவது?

மரண தண்டனையே கூடாது. கடவுள் கொடுத்த உயிரைப் பறிக்க மனிதனுக்கு உரிமை கிடையாது என்ற விவாதமே ஓயவில்லை. இதற்குள் மரண தண்டனையை எப்படி நிறைவேற்றுவது என்ற பிரச்சினை மனிதாபிமானிகளின் கவனத்தைக் கவர்ந்துள்ளது.

தூக்கு மேடைக்கு மரண தண்டனை பெற்ற குற்றவாளி அனுப்பப்படுவது வழக்கமாக இருந்தது. இந்தியாவில் இன்றும் பெரும்பாலும் இம்முறைதான் அனுஷ்டிக்கப்படுகிறது. ஆனால் முன்னேற்ற மடைந்த மேல்நாடுகளில் இது ரொம்பக் கொடூரமான காரியம் என்று கருதி, சுட்டு விடும்படி கூறினார்கள். ஆனால் இதயத்தைத் துளைக்கும் ஒரே தோட்டாவில் மரணம் சம்பவிக்காமல் சில சமயம் குறி பிசகிப் போவதால் கைதி படாதபாடு படுவதைக் கண்டனர்.

எனவே மின்சார நாற்காலியைக் கண்டு பிடித்தனர். ஆனால் மின்சார நாற்காலியும் பல சமயங்களில் பழுதடைந்து போகக் கைதி சித்திரவதைக்குள்ளாக நேர்கிறது. ஒருசமயம் 1900 வோல்ட் மின்சாரத்தை மூன்று தரம் பாய்ச்ச வேண்டியிருந்தது, ஒரு மரண தண்டனைக் கைதியைக்கொல்ல. சாதாரணமாக முதல் தடவையே மரணம் சம்பவித்திருக்க வேண்டும். ஆனால் இயந்திரத்தில் ஏதோ கோளாறு. கைதி எப்படித் துடித்திருப்பான்!

இதன் பிறகு விஷவாயுவை அறைக்குள் அனுப்பி ஆளைத் தீர்த்துக் கட்டிவிட முயற்சி நடந்தது. ஆனால் படிப்படியாக விஷவாயு அதிகரிக்கும் போது கைதி படக்கூடிய மனவேதனையையும் உடல் வேதனையையும் எண்ணிப்பார்க்க இதுவும் கைவிடப்பட்டது.

கடைசியாக இப்போது ரத்தநாளத்தில் விஷ மருந்தை ஏற்றிச் சுலபமாகவும் வலியில் லாமலும் மரண தண்டனை பெற்றவர்களைக் கொன்று விடலாம் என்று தீர்மானித்திருக் கிறார்கள். அமெரிக்காவில் ஒன்பது மாநிலங்கள், இந்த முறையை இப்போது கையாள்கின்றன.

'மரண தண்டனை விதித்தாலும் வலியில் லாமல் மரணம் சம்பவிக்கும் என்பதில் ஆறுதல் பெறலாம்' என்பது வாதம். ஆனால் மரணம் எப்படி இருந்தது என்று திரும்பி வந்து யாரும் கூறியதில்லை யாதலால் இந்த விஷ மருந்து ஊசி விவகாரமும் அதையொட்டிய ''வலி தெரியா மரணம்'' என்ற பிரசாரமும் மாபெரும் மோசடிகளே என்று மனிதாபிமானிகள் ஆட்சேபணைக் குரல் எழுப்பியுள்ளனர்.

மரணதண்டனையே முற்றிலும் ஒழிக்கப் பட்டாலன்றி இவர்கள் அமைதி காண மாட்டார்கள்.

நன்றி: கார்டியன்

மேற்கு ஜெர்மனியில் டீ. வி.யை எதிர்க்கும் சங்கம் ஒன்றுள்ளது. இதனை ஆரம்பித்த பால் ஹேனாவர் ஒரு விளை யாட்டுக் கழக நிர்வாகி. சங்கத்தில் 253 உறுப்பினர்கள் உள்ளனர். ''டெலி விஷன் என்பது சோம்பலை வளர்க்கும் சாதனம்; சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலை மழுங்கச் செய்கிறது; மனிதர்களை முட் டாளாக்குகிறது. எனவே டீ. வி.யைப் போட்டு உடைப்பதே எங்கள் சங்கத் தின் நோக்கம்'' என்கிறார் 48 வய தான ஹேனாவர்.

இ. வே. சுரேந்திரநாதன்





ராஜேஷ்குமார்


பிரேம்குமாரின் போஸ்ட் மார்ட்டம்

மர்ம நாவல்

[1]

அழுக்காகிப்போன மேகங்கள் ஆகாயம் பூராவும் உட்கார்ந்திருந்தாலும் மழை பெய்யாத ஒரு ஜூலை மாத வியாழக் கிழமையின் காலை நேரம். ஏழு மணியாக ஒரு நிமிஷம் முப்பது விநாடிகள் பாக்கி யிருந்தது.

போலீஸ் ஸ்டேஷனின் உள்ளே, நட்டு. மர மேஜையின் முனையில், இந்தக் கதையை



எழுத ஆரம்பிக்கும் நிமிஷம் வரை கம்மென்றிருந்த டெலிபோன், இந்த வரியை எழுதும்போது திடீரென்று குரைக்க ஆரம்பித்தது. சீரான குரைப்பு.

பழைய கேஸ் ஹிஸ்டரி பைலொன்றில் சில தகவல்களுக்காக, பைலினின்றும் அடிக்கும் எலிப்புழுக்கை வாடையையும்தாங்கிக்கொண்டு ஆழ்ந்து போயிருந்த இன்ஸ்பெக்டர் கோகுல்நாத் ரிஸீவரை எடுத்துத் தம் காதுக்குக் கொடுத்தார்.

சரியாய்ப் பத்து விநாடிகள் கழித்து நிமிர்ந்தார்.

''எனிட்? எந்த ரோட்ல?''

''.......''

''காரமடை மேட்டுப்பாளையம் ரோடா ஸ்பெஸிபிக்கா எந்த இடத்துலன்னு சொல்ல முடியுமா?''

''......''

''காட்டேரி டெக்ஸ்டைல்ஸுக்குமுன்னாடி வர்ற பாலமா? பத்தாம் நம்பர் புளிய மரமா? பாடியை எப்பப் பார்த்தீங்க?''

''......''

''இப்பத்தானா? நான் அங்க வந்து சேர்ற வரைக்கும் நீங்க எங்கேயும் போயிடாதீங்க...



தைரியமாத் தகவல் கொடுத்திருக்கீங்க.... நன்றி!''

ரிஸீவரை வைத்தார் கோகுல்நாத். தொப்பியைக் கழற்றி வழுக்கையில் அரும்பியிருந்த வியர்வை வரிகளைக் கைக்குட்டையால் அழுந்தத் துடைத்துக் கொண்டார். எதிரே உட்கார்ந்திருந்த இன்வெஸ்டிகேஷன் டிபார்ட்மெண்டைச் சேர்ந்த விவேக்கை ஏறிட்டார்.

டீயை உறிஞ்சிக் கொண்டிருந்த விவேக் மெல்லச் சிரித்தான். கேட்டான்.

''என்ன சாவு செய்தியா? ஆணா பெண்ணா.''

''ஆண்...''

''குன்னூர் லேகா கேஸை முடிச்சுட்டு இப்பத்தான் அக்கடான்னு நாற்காலியில் சாஞ்சு டீயைக் குடிக்க ஆரம்பிச்சோம். அதுக்குள்ளே கேஸ் வந்தாச்சா...? நம்ம அரசாங்கம் எதைக் கட்டுப்படுத்தினாலும் சரி ரெண்டே ரெண்டை மட்டும் கட்டுப்படுத்த முடியாது. ஒண்ணு குழந்தை பெத்துக்கறது; ரெண்டு கொலை செய்யறதை!''

கோகுல்நாத் புன்னகைத்துக் கொண்டே மறுபடியும் தொப்பியைத் தலைக்குக் கொடுத்தார். ''விவேக்! நீங்க நினைக்கிற மாதிரி இது கொலையாய் இருக்க முடியாது. எவனோ ஒருத்தன் காரமடை மேட்டுப்பாளையம் ரோட்ல, பத்தாம் நெம்பர் புளிய மரத்திலே தூக்குப்போட்டுக் கிட்டுத் தொங்கறானாம்...''

விவேக் காலியான டீக் கோப்பையை மேஜையின் மேல் டொக்கென்று வைத்துவிட்டு எழுந்தான். ''புறப்பட்டுட்டீங்களா கோகுல்நாத்?''

''உம்.''

''என்னை என்னோட ரூம்ல தள்ளிட்டு நீங்க ஸ்பாட்டுக்குப் போறதுல உங்களுக்கொன்றும் ஆட்சேபணை இல்லையே?''

''நத்திங்... வாங்க போகலாம்...!''

இருவரும் ஜீப்பை நோக்கி நடந்தார்கள்.

[2]

அந்தத்தேசிய நெடுஞ்சாலையின், சாய்ந்து போன கிலோ மீட்டர் கல் அருகே, ஏராளமான கிளைகளோடு தெரிந்த ஒரு புளிய மரத்தைச்சுற்றி ஜனங்கள் உதிரிகளாய்நின்று இருக்க, ஜீப்பை விட்டுக் கீழே இறங்கினார் கோகுல்நாத். கூடவே சப் இன்ஸ்பெக்டர் நவநீத், இரண்டு கான்ஸ்டபிள்கள் உதிர்ந்தார்கள்.

சொற்பக் கூட்டம் பயத்தோடு பின் வாங்க....

கோகுல்நாத்தின் பார்வை புளிய மரத்துக் கிளைகளுக்குத் தாவியது.

சிறிது தாழ்ந்த கிளையில் அந்த இளைஞனின் உடல் விரைப்போடு சலனமில்லாமல் தொங்கிக்கொண்டிருந்தது. உயரமாய், சிவப்பாய் சதைப் பிடிப்பில்லாமல் தெரிந்தான். உதட்டோரம் ரத்தம் — உறைந்த ரத்தம் — கருஞ்சிவப்பாய் கோடு போட்டிருக்க, கழுத்துக்கு ஒரு புதுக் கயிற்றை உபயோகித்திருந்தான். மூக்குக் கண்ணாடி கீழே விழுந்திருந்தது. விழிகள்... கயிற்றின் இறுக்கத்தில் பிதுக்கம் காட்டியிருந்தது. வெள்ளை பைஜாமாவும், சந்தனக் கலர் ஜிப்பாவும் உயிரில்லாத உடம்பின் காற்றின் உதவியில் படபடத்தது. உயிர் போகும் நேரத்தில் உடம்பு அதிகப்படியாய்த் துடித்திருக்க வேண்டும். தரையில் புளிய மரக் கிளைகள் கொத்துக் கொத்தாய் உதிர்ந்து கிடந்தன. ஸ்லிப்பர்கள் தூரத்தில் கிடந்தன.

''யங் ஃபெலோதான்... வயசு இருபத்தஞ்சுக்கு மேலே இருக்காது ஸார்...!''— கான்ஸ்டபிள் ஒருவர் சொல்ல, கோகுல்நாத் அந்த இளைஞனின் கால்களுக்குக் கீழே வந்து நின்றார். அண்ணாந்து பார்த்தார்.

முகம் வீங்கிப் பற்களுக்கு மத்தியில் துளி யூண்டு நாக்கு வெளிதாய் எட்டிப் பார்க்கக் கோரமாய்ச் செத்திருந்தான். உடம்பு பூராவும் பாறையாய் விறைப்புத் தன்மை ஏறியிருந்தது. வாயிலும் மூக்கிலும் வழிந்த ரத்தம் ஜிப்பாவின் சில இடங்களில் தெறித்திருந்தது.

கோகுல்நாத் கும்பலின் பக்கமாய்த் திரும்பினார்.

''போன்ல தகவல் சொன்னது யாரு?''

''மைசெல்ஃப் இன்ஸ்பெக்டர்!'' நடுத்தர வயதில் ஒருவர் முன்னே வந்தார். முகத்தில் படிப்பு வாசனை அடித்தது. கையில் சின்னதாய் 'கோக்' நிற ப்ரீஃப் கேஸ் தெரிந்தது.

''உங்க பேரு?''

''கிருஷ்ணமூர்த்தி.''

''பாடி உங்க கண்ணுக்கு எப்படித் தெரிஞ்சுது?''

கிருஷ்ணமூர்த்தி தயக்கமில்லாமல் சொன்னார். ''இன்ஸ்பெக்டர்! நான் ஒரு சேல்ஸ் எக்ஸிக்யூட்டிவ். ஜெயம் அண்டு கம்பெனியில இருக்கேன். மேட்டுப்பாளையம் சிறுமுகை விஸ்கோஸ் பாக்டரிக்குப் போவதற்காக ஸ்கூட்டர்ல வந்துக்கிட்டிருந்தேன். திடீர்னு ஸ்கூட்டர் மக்கர் பண்ணினதுனால ஸ்கூட்டரை இந்த மரத்துக்குக் கீழே நிறுத்திப்பார்த்துக் கிட்டிருந்தேன். எதேச்சையாத் திரும்பினப்ப இந்த பாடி தூக்கில தொங்கிட்டிருந்தது என்னோட பார்வையில பட்டது. உடனடியாஉங்களுக்குபோன்பண்ணினேன்.''

''தாங்க்யூ! யாரும் எதையும் தொடலையே?''

''நோ இன்ஸ்பெக்டர்!''

''கான்ஸ்டபிள்!'' — கோகுல்நாத் கூப்பிட்டார். ''பாடியைக் கீழே இறக்கி தரோவா செக் பண்ணிடுங்க... சுந்தரம்! நீங்க புட் பிரிண்ட்ஸ் ஏதாவது கிடைக்குதான்னு பார்த்துடுங்க... ஸ்நேப்ஸ் எல்லா ஆங்கிள்ளேயும் ரெண்டு ரெண்டா எடுத்துடுங்க....''

கான்டபிளும் போட்டோகிராப்பரும் பிங்கர் பிரிண்ட் எடுப்பவரும் நகர்ந்தார்கள். கோகுல்நாத் சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்தபடி, கயிற்றில் ஊசலாடிக் கொண்டிருந்த அந்த இளைஞனைப் பார்த்தார்.

இது தற்கொலைதான். கொலையாய் இருக்க வாய்ப்புக் கம்மி.

கொலை செய்திருந்தால் உடம்பு எப்படியும் சேதமாகியிருக்கும். இந்தக் கண் பிதுங்கல், வெளித் தள்ளிய நாக்கு இருக்க வாய்ப்பில்லை. மூக்கில் வாயில் வழிந்திருக்கிற இந்த ரத்தம் அந்தக் கயிற்றின் இறுக்கத்தால்தான் ஏற்பட்டிருக்கச் சாத்தியம்.

சிகரெட்டின் முதல் புகையை வெளியே விட்டார் கோகுல்நாத்.

''ஸார்!''

குரல் கேட்டுத் திரும்பினார்.

கான்ஸ்டபிள் கையில் ஒரு காகிதத் துண்டோடு நின்றிருந்தார். ''ஸார் பாடியைக் கீழே இறக்கி, 'செக்' பண்ணினதில் ஜிப்பா பாக்கெட்டில் இந்த லெட்டர் கிடைச்சுது''

''ஸலிட்?'' கோகுல்நாத் கடிதத்தை வாங்கினார். மெல்லப் பிரித்தார். அவ்வளவு பெரிய காகிதத் துண்டில் நான்கே வரிகள் ஓடியிருந்தன. எழுத்துக்கள் செங்குத்தாய்ச் சில பிழைகளோடு தெரிந்தன. முக்கியமாய் 'றி'க்குப் பதிலாய் 'ரி', 'ரு'க்குப் பதிலாய் று.

போலீஸ் அதிகாரி அவர்களுக்கு,

என்னைப் பற்றி யாருக்கும் தெறியவேண்டியதில்லை. என்பெயரையும் ஊர்ப் பெயரையும், என் குடும்பத்தார் பெயர்களையும் குரிப்பிட நான் விரும்பவில்லை. என்னுடைய வாழ்க்கையில் நான் சந்தித்த ஒரு தோல்வியின் காரணமாகத்தான் மரணத்தைத் தழுவியிருக்கிறேன். என்னுடைய மரணத்திற்கு யாரும் காரணமில்லை. என்னைப் பற்றிய விபரங்களைக் கிளறாமல் என் பிணத்தை அநாதைப் பிணமாய்ப் பாவித்து மெடிகல் காலேஜுக்குக் கொடுத்து விடுங்கள். தயவு செய்து என்னுடைய உறவினர்களைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு, என்னைப் புகைப்படம் எடுத்துப் பத்திரிகைகளில் பிரசுரிக்காதீர்கள். என்னுடைய மரணம் என்னைச் சேர்ந்தவர்களுக்கு தெறியாமல் இருக்க வேண்டும் என்பதே என் கடைசி விருப்பம். போஸ்ட் மார்ட்டம் முடிந்ததும் என் உடம்பை மெடிகல் காலேஜுக்குக் கொடுத்து விடுங்கள்.

இப்படிக்கு
பிரேம்குமார்.

பி.கு: கடிதம் என்றிருந்தால் பெயரும் கையெழுத்தும் வேண்டும். ஆகவே என் பெயரை மட்டும் குறிப்பிட்டிருக்கிறேன். இன்ஷியல் போட எனக்கு விருப்பமில்லை.

கடிதத்தை இரண்டு தரம் படித்த கோகுல்நாத். அதை மறுபடியும் மடித்துச் சட்டைப் பாக்கெட்டில் பத்திரப்படுத்தினார்.

''பாடியை முழுக்க செக் பண்ணிட்டீங்களா கான்ஸ்டபிள்?''

''உங்கள் படைப்புகள் அத்தனையும் 'ஜில்'லுன்னு இருக்கு சார்!''
''அப்படியா?''
''ஆமாம்... உங்க பொண்ணுங்க கலா, சுமதி, சுதா இவங்களைத்தான் சொல்றேன்!''

—எம். பாஸ்கர்



''எஸ் ஸார்!''

''லெட்டரைத் தவிர வேறே எதுவும் கிடைக்கலியா?''

''இல்ல ஸார்....டென் என்.பி. காய்ன்ஸ் மட்டும் கொஞ்சம் இருந்தது. ஒரு கிழிஞ்ச கர்சீப் இருந்தது. ஒரு பஸ் டிக்கெட் இருந்தது.''

''அந்த பஸ் டிக்கெட்டைக் குடுங்க.''

கான்ஸ்டபிள் இளஞ் சிவப்பில் ஒரு பஸ் டிக்கெட்டை நீட்டினார். கோகுல்நாத் அதை வாங்கிப் பார்த்தார்.

சேரன் போக்கு வரத்துக் கழகம். ரூ. 7.50 கான டிக்கெட் அது. எந்த ஊரிலிருந்து எந்த ஊருக்கு அந்த டிக்கெட் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான விவரம் அதில் குறிப்பிடாமல் வெறுமையாய் இருந்தது.

கோகுல்நாத் மோவாயைத் தடவிக்கொண்டார்.

மெல்ல நடந்து கீழே கிடத்தப்பட்டிருந்த அந்த இளைஞனிடம் வந்தார். கயிற்றில் தொங்கும்போது இருந்ததைவிடக் கீழே கிடத்தப்பட்டிருக்கும்போது முகம் விகாரமாய் இருந்தது. கழுத்து ஒரு பக்கமாய் வளைந்திருந்தது. புறங்கழுத்தின் பிடரிப் பாகத்தில் காய்ந்து போன ரத்தம் பிரிபிரியாய்த் தெரிந்தது. ஒரு வரிசை எறும்புகள் ரத்தக் கோட்டில் ஊர்வலம் போனது.

''இது நிச்சயமாய் சூயிஸைட்தான். லெட்டர்ல கிளியரா எழுதி விருக்கான். பாடியை போஸ்ட் மார்ட்டம் அனுப்பிடுங்க கான்ஸ்டபிள்! பிரஸ்ஸுக்கு போட்டோஸ் கொடுத்து ஆள் யாருன்னு கண்டு பிடிச்சுடலாம்!

''கோயமுத்தூர் லாட்ஜிகளிலே தங்கினவங்க யாராவது திரும்பாமலிருக்கிறாங்களான்னு விசாரியுங்க!

''பாடியை போஸ்ட் மார்ட்டம் அனுப்பி ரிப்போர்ட் வந்ததும் ஃபர்தரா ஸ்டெப்ஸ் எடுப்போம்.'' கோகுல்நாத் சொல்லிக்கொண்டே ஜீப்பை நோக்கி நடந்தார்.

அந்த மேட்டுப்பாளையம் ரோட்டில்—

அதற்குள் ஏகப்பட்ட வாகனங்கள் வரிசையாய் நின்றுவிட—

இப்போது கூட்டம் அதிகமாகத் தெரிந்தது.

[3]

சேரன் போக்கு வரத்துக் கழகம்.

கோகுல்நாத் தம் காக்கிச்சட்டைப்பையிலிருந்து அந்தக் கசங்கிப்போன ரோஸ் வண்ண டிக்கெட்டை எடுத்தார். ஆபீஸரிடம் நீட்டினார். மெல்லிய குரலில் சொன்னார்.

''இந்த டிக்கெட் சூயிசைட் பண்ணிக்கிட்ட ஒருத்தனோட சட்டைப் பாக்கெட்ல இருந்தது. ஊரோட பேர் இந்த டிக்கெட்டுல இல்லே.... ஏழு ரூபாய் ஐம்பது பைசாவுக்கான டிக்கெட். இந்த டிக்கெட் நம்பரை வெச்சுக்கிட்டு. இந்த டிக்கெட் எந்த தேதியில எந்த ரூட் பஸ்ல குடுத்திருக்காங்கன்னு சொல்ல முடியுமா?''

ஆபீஸர் டிக்கெட்டை வாங்கினார். கூட்டிலிருந்த மூக்குக் கண்ணாடியை ஜாக்கிரதையாய் உருவிக் கண்ணுக்குக் கொடுத்தபடி பார்த்தார்.

''தெ. 6798'' — வாய்க்குள் முணங்கியவர் சில வினாடிகள் கண் மூடி யோசித்துச் சொன்னார். ''இது அநேகமாய்க் கோயமுத்தூர் டு ஈரோடு ரூட் பஸ் டிக்கட்டாய் இருக்கலாம். இன்ஸ்பெக்டர்... எதுக்கும் வெரிபை பண்ணிக்கிறேன்....''

அருகிலிருந்த போனின் ரிஸீவரை எடுத்து ''சண்முகம்!'' என்றார்.

''......''

''கோயமுத்தூர் — ஈரோடு டிக்கெட் புக் லெட்ஜர் எடுத்து எந்தெந்த நம்பர்ல டிக்கெட் புக் ஆகியிருக்கு பாருங்க!''

கதவைத் திறந்து கொண்டு ஒரு கையில் டிக்கெட் புக்குகளோடும், மறுகையில் ஒரு சிறிய லெட்ஜரோடும் ஒரு இளைஞன் நுழைந்தான்.

''வாங்க சண்முகம்!''

''ஸார்... ரெண்டு நாளைக்கு முன்னாடி ஐ...மீன் பதினேழாம் தேதி இந்த நெம்பர் டிக்கெட் இஷ்யூ ஆயிருக்கு...''

''எந்த ட்ரிப்?''

''ஈரோடு டு கோயமுத்தூர்.''

கோகுல்நாத் குறுக்கிட்டார். ''அந்த ட்ரிப் கண்டக்டர் யார்னு சொல்ல முடியுமா? நான் அந்தக் கண்டக்டர் கிட்டே சில கேள்விகள் கேட்கணும்...''

ஆபீஸர் சண்முகத்தைப் பார்த்தார்.

''அந்த ட்ரிப்ல யார் இருந்தாங்க சண்முகம்?''

''மருதாசலம் ஸார்...''

''மருதாசலம் இப்ப டூட்டிலே இருக்காரா? இல்லே ஆப்ல இருக்காரா?''

''டூட்டிலே இருக்கார் ஸார்... ஈரோடு டு கரூர் போட்டிருக்கு...'' ஆபீஸர் கோகுல்நாத் பக்கம் திரும்பினார். ''இன்ஸ்பெக்டர்! அந்த மருதாசலம் வந்ததும் அவரை ஸ்டேஷனுக்கு அனுப்பி உங்களை வந்து பார்க்கும்படியாச் சொல்றேன்.''

நிறுத்தியிருந்த பைக்கை அதனுடைய ஸ்டாண்டிலிருந்து விடுவித்துக் கிக்கரை உதைத்துப் புகையைக் கொப்பி வெளியே வந்தார்.

ஸ்டேஷனை நோக்கி 'ஜிவ்'வினார்.

[4]

போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் டாக்டர் ஜெகதீஸ்வரனின் மேஜையின் மேல் காத்துக் கிடந்தது. அந்தப் பெரிய ரிப்போர்ட் காலம் காலமாய்ப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு காலமும் டாக்டரின் அவசரக் கையெழுத்தில் நிரம்பி யிருந்தது. நேம். ஏஜ். மோட் ஆப் டெத். ஹெட் காலம், தோரக்ஸ், அப்டாமின், அக்யூட் அப்டாமின் சின்னச் சின்னத் தலைப்புக்களின் கீழ் பொடிப் பொடியான ஆங்கில எழுத்துக்களில் மரணம் நிகழ்ந்ததைத் துருவும் கேள்விகள். கேள்விகளுக்கு எதிரே டாக்டரின் சிக்கன பதில்கள்.

''குட் ஈவினிங் டாக்டர்...''

கோகுல்நாத் உள்ளே நுழைந்தார். தொப்பியைக் கழற்றி மேஜையின் மேல் வைத்தார். டாக்டர் ஜெகதீஸ்வரன் பதிலுக்கு குட் ஈவினிங்கை உதிர்த்துவிட்டு போஸ்ட் மார்ட்

டம் ரிப்போர்ட்டைக் கோகுல்நாத்தின் முன்னால் நகர்த்தி வைத்தார். சொன்னார்:

''பிரேம்குமாரின் போஸ்ட்மார்ட்டம்!''

''என்ன டாக்டர் அது தற்கொலை கேஸ் தானே?''

''சென்ட்பர்ஸன்ட் ஸூயிஸைட்தான் இன்ஸ்பெக்டர்... கழுத்துல அழுத்தமா லிகேஜர் மார்க் தெரியுது. தைராய்ட் கார்டிலேஜுக்கு மேலே லேரின்க்ஸ் சின்னுக்கு நடுவில், தாடை எலும்புக்கு ஒட்டின மாதிரி நல்லா தெரியுது. உடம்புல காயம் எதுவும் இல்லே... அடிச்சு கொலை செஞ்சு அப்புறமா தூக்குல தொங்க விட்ட கேஸ் மாதிரி தெரியலே... நேச்சுரல் ஹேங்கிங் இது... ஆனா செத்துப் போன இந்த பிரேம்குமார் தூக்குல தொங்கறதுக்கு முன்னாடி பெதடின் இஞ்செக்ஷன் எடுத்திருக்கார். இடது தோள் பட்டையில இஞ்செக்ஷன் மார்க் ஒண்ணு தெரியுது. தூக்குல தொங்குறப்போ வலி தெரியாமல் இருக்கிறதுக்காக அந்த இஞ்சக்ஷனை எடுத்திருக்கலாம்...''

கோகுல்நாத் நிம்மதிப்பெருமூச்சொன்றை நெட்டுயிர்த்தார். ''தாங்க் காட். பாடியை மெடிகல் காலேஜுக்கு அனுப்பிவிட்டு, கேஸ் ஹிஸ்டரி பைலை மூட்டை கட்டி டிஸ்போஸல் செக்ஷனுக்கு அனுப்பிடலாம்... டாக்டர்! இந்தப் பிரேம்குமார் மரணம் ஒரு தற்கொலையா இல்லாம ஒரு கொலைன்னு போஸ்ட் மார்ட்டம் சொல்லி யிருந்தா நான் ரொம்பவும் திணறிப் போயிருப்பேன்.''

டாக்டர் புன்னகைத்தார். ''இது ப்யூர்லி ஸூயிஸைட் கேஸ், இன்ஸ்பெக்டர்! நீங்கதாராளமாய் பைலை மூடலாம்.''

கோகுல்நாத் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டில் ஆழ்ந்தார்.

25 வயதுக்கான வெல் பில்ட் பாடி. எக்ஸாமினேஷன் ஆப் லங்க்ஸ், ஹார்ட்: பிபோர் டெத் தே வேர் இன் நார்மல் கண்டிஷன். நோ இன்ஜுரிஸ், நோ பாய்சன் பார்டிகள்ஸ். இரைப் பையில் செரிக்காத உணவு. அமிலம் அதிகப்படியான சுரப்பு. கால் பிளாடர் செக்ரீசன் அபௌவ் நார்மல். ரத்தம் சுத்த ரத்தம். வெண்ட்ரிக்களில் பாய்ந்த ரத்தம் அசுத்தக் குறைவு. — ஏகப்பட்ட புள்ளி விவரங்களுக்குப் பின்னால் டாக்டர் ஜெகதீஸ்வரன் முத்திரை அடித்த மாதிரி சற்றுப் பெரிய எழுத்துக்களில் எழுதியிருந்தார். மரணம் ஏற்பட்டிருக்கக் கூடிய சாத்தியத்தைக் கூறியிருந்தார்.

Death caused by upper cervical vertebra dislocated with compression of spinal cord.

''தேங்க்யூ டாக்டர்!'' போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டைச் சுருட்டிக் கொண்டு எழுந்தார் கோகுல்நாத்.



[5]

டெலிபோன் கூப்பிட்டது.

''இன்ஸ்பெக்டர் இருக்காரா?''

''இன்ஸ்பெக்டர்தான் பேசறது. நீங்க யாரு?''

மறு முனையில் குரல் சட்டென்று பவ்யமானது. ''இன்ஸ்பெக்டர்! நான் பங்கஜா லாட்ஜிலிருந்து லாட்ஜ் மானேஜர் பேசறேன். உங்க கிட்ட ஒரு விஷயம் சொல்லணும்.''

''சொல்லுங்க...''

''போன வாரம் வெள்ளிக் கிழமை ஒரு யங் சேப் எங்க லாட்ஜ்ல ரூம் எடுத்தான். ஒரு நாள் மட்டும் தங்கிட்டு வெளியே போனவன் இந்த நிமிஷம் வரைக்கும் வரலே. ரூம்ல லக்கேஜ் இருக்கு. போலீஸ் பர்மிஷனோட ரூமோட லாக்கை உடைச்சு லக்கேஜை உங்க கிட்ட ஹாண்ட் ஓவர் பண்ணிடலாம்னு நினைக்கிறேன். சிரமம் பார்க்காம கான்ஸ்டபிளை அனுப்ப நீங்களா?''

கோகுல்நாத் சரக்கென்று நிமிர்ந்தார்.

''ஒரு வாரமா ரூமுக்கு வரலேயா? அவனோட பேர் என்ன?''

''விஜயகுமார்.''

''அட்ரஸ்?''

''85, நந்தனம் காலனி, மெட்ராஸ்ன்னு லெட்ஜர்ல எழுதியிருக்கான்.''

''சரி ஒரு பத்து நிமிஷம் வெயிட் பண்ணுங்க. நான் உடனடியா புறப்பட்டு வர்றேன்.'' — கோகுல்நாத் ரிஸீவரைச் சாத்திவிட்டு எழுந்தார். அதே நிமிஷம்...

விவேக் ஸ்டேஷனுக்கு வெளியே பைக்கை நிறுத்திவிட்டு உள்ளே வந்து கொண்டிருந்தான். வெய்யில் முகத்தை வியர்வையால் நனைத்திருக்க, கூலிங் கிளாஸ் கண்களைக் கவ்வியிருந்தது.

''என்ன கோகுல்நாத். வெளியே புறப்பட்டுட்டீங்களா?''

''ஆமா விவேக்... அந்தப் பிரேம்குமார் ஸூயிஸைட் கேஸ் இன்னும் அடையாளம் தெரியாத கேஸாவே இருக்கு. இப்பத்தான் பங்கஜா லாட்ஜ்லேருந்து போன் வந்தது. ஒரு யங் சேப். விஜயகுமார்னு பேர், லாட்ஜ்ல ரூம் எடுத்துத் தங்கினவன் ஒரு வாரமா ரூமுக்கே வரலேயாம்... ஒருவேளை அவன் பிரேம்குமாராய் இருக்கலாமே?''

விவேக் சிரித்தான். ''அவன் பேரு விஜய குமார்னு சொன்னீங்க அவன் எப்படி பிரேம் குமாரா இருக்க முடியும்?''

''பெயரையும் அட்ரஸையும் மாத்திக் குடுத்திருக்கலாமே விவேக். அவன் தற்கொலை பண்ணிக்கிற எண்ணத்தோடவே இந்த ஊருக்கு வந்திருக்கான். தன்னோட சாவு தன்னைச் சேர்ந்தவங்க யாருக்கும் தெரியக் கூடாதுன்னு நினைச்சிருக்கான். இந்த நிலைமையில அவன் எப்படித் தன்னோட உண்மையான பேரையும் அட்ரஸையும் கொடுப்பான்? செத்துப்போன பிரேம்குமாரை லாட்ஜ் மானேஜரும் லாட்ஜ்ல இருக்கிற ரூம் பையன்களும் கண்டிப்பா பார்த்திருப்பாங்க. அவுங்ககிட்ட இந்தப் போட்டோக்களைக் காட்டினா அடையாளம் சொல்லிட்டுப் போறாங்க....''

லாட்ஜுக்குப் போனார்கள்.

கோகுல்நாத் கவரை எடுத்து நான்கைந்து போட்டோக்களை உருவி நீட்டினார். பிரேம்குமார் தொங்கிக் கொண்டிருக்க, நாலாபுறமும் காமரா அவனைப் பார்த்திருந்தது.

''லாட்ஜ் பசங்களுக்குத் தெரிந்திருக்கும் அவங்களைக் கூப்பிடறேன்...

''டேய் குருசாமி! நாராயணன்... சிக்கிரம் வாங்கடா...'' அழைத்தார் மானேஜர்.

வேக வேகமாய் வந்து அரை வட்டம் போட்டு நின்றார்கள்.

''இந்த ரூம்ல ஒரு ஆள் தங்கியிருந்தானே அவனை உங்கள்ல எத்தனை பேர் பார்த்திருக்கீங்க?''

எல்லோரும் பார்த்திருப்பதாய்த் தலையாட்டினார்கள்.

''இந்தப் போட்டோவை நல்லாப் பாத்து இதுல தூக்குப் போட்டுக்கிட்டுத் தொங்கற ஆளு நம்ம லாட்ஜ்ல தங்கின ஆள்தானான்னு பார்த்துச் சொல்லுங்க!''

ஆளுக்கொரு போட்டோவை நீட்டினார் மானேஜர்.

எச்சிலை அவஸ்தையாய் விழுங்கிக் கொண்டு, கைகளில் ஒரு நடுக்கம் தொற்றிக் கொள்ள போட்டோக்களை வாங்கிப் பார்த்தார்கள் அந்த நான்கு பையன்களும்.

அரை நிமிஷ நேரத்துக்குப் பிறகு—

''அதே ஆள்தான் சார்'' என்றனர் நால்வரும்.

போட்டோக்களை வாங்கிக் கொண்ட கோகுல்நாத் பையன்களை அனுப்பிவிட்டு லாட்ஜ் மானேஜரை ஏறிட்டார்.

''ரூமைத் திறங்க பார்த்திடுவோம்.''

மானேஜர் ரூம் கதவைத் திறந்து விட்டார்.

சின்ன அறை. சுவரோரமாய் ஒரு கட்டில். சுவரில் ஒரு ஷெல்ப். ஜன்னலோரமாய்ச் சிறிய சைஸ் மேஜை. ஸ்டூல் நாற்காலி. மேஜையின் மேல் வாட்டர் ஜக். விவேக் பார்வையைத் தாழ்த்தினான்.

கட்டிலுக்குக் கீழே அந்த ஸூட் கேஸ் தெரிந்தது.

சிவப்பு நிற ஸூட் கேஸ்.

விவேக் அதை இழுத்தான். கனமில்லாமல் வந்தது. லாக்கர்கள் பூட்டப்படாமல் நெகிழ்வாய் இருந்தன. ஸூட்கேஸைக் கட்டிலின் மேல் கிடத்தித் திறந்தான் விவேக்.

பொருட்கள் சொற்பம்.

வெள்ளை நிற பாண்ட், க்ரே நிற சர்ட், ஒரு ஜிப்பா. ஒரு பைஜாமா, ஜட்டி, பனியன் தைலப் பாட்டில், சவர செட், ஒரு நெயில் கட்டர், கசங்கிய கர்சீப்புகள், உதிரியாய்ச் சில காகிதங்கள்.

விவேக் அறையைச் சுற்றிப் பார்த்தான்.

ஒரு ஸூட்கேஸைத் தவிர வேறு எதுவுமே அங்கு இல்லை.

''உங்க லாட்ஜ் லெட்ஜரைக் கொஞ்சம் கொண்டு வாங்க!''

மானேஜர் கீழே இறங்கிப் போனார்.

''கோகுல்நாத்! ஒரு விஷயத்தைக் கவனிச்சீங்களா?''

''என்ன விவேக்?''

''அந்தப் பிரேம்குமார் அல்லது விஜயகுமார் தற்கொலை பண்ணிக்கணும்னு நினைச்சிருந்தா இந்த ரூம்லேயே பண்ணியிருந்திருக்கலாமே... ஒதுக்குப்புறமா இருக்கிற புளிய மரத்தைத் தேடிப் போயிருக்கான். என்ன காரணம்னு நினைக்கிறீங்க?''

''அவன்தான் தன்னோட லெட்டர்ல க்ளியரா மென்ஷன் பண்ணியிருக்கானே விவேக்? என்னோட மரணம் என்னைச் சார்ந்தவங்க யாருக்கும் தெரியக் கூடாது. என்னோட மரணம் யாருக்கும் தெரியறதை நான் விரும்பலைன்னு எழுதியிருக்கானே?''

விவேக் புன்னகைத்தான். ''ஊரை விட்டு வேற ஒரு ஊருக்கு வந்து தற்கொலை பண்ணிக்க நினைக்கிறவன் ஸூட்கேஸோடு வர மாட்டான் கோகுல்நாத். தன்னோட மரணம் யாருக்கும் தெரியக் கூடாதுன்னு நினைக்கிறவன் லாட்ஜ்ல ரூம் எடுத்துத் தங்கியிருக்க மாட்டான். நேரா புளிய மரத்துக்குத்தான் போவான்....

''கோகுல்நாத்! அந்தப் பிரேம்குமார் எழுதின லெட்டர் உங்க கிட்ட இருந்தா ஒரு நிமிஷம் அதைக் குடுங்க!''

கோகுல்நாத் தன் சட்டைப் பையினின்றும் நான்காய் மடித்திருந்த அந்தக் கடிதத்தை எடுத்து நீட்டினார். விவேக் அதை வாங்கிப் பிரித்தான். கடிதத்தை ஒருமுறை முழுக்கப் படித்துவிட்டு கோகுல்நாத்தை ஏறிட்டான்.

''இந்த லெட்டர் அந்தப் பிரேம்குமாரோட ஜிப்பா—பையில் இருந்தது அப்படித்தானே கோகுல்நாத்?''

''ஆமாம்.''

''இந்த லெட்டரை எழுதினது பிரேம்குமார்தான்னு எப்படி முடிவு கட்டினீங்க? இதுக்கு முந்தி அவனோட கையெழுத்து உங்களுக்குப் பரிச்சயமா?''

''இல்லை!''

''பின்னே எப்படி இது பிரேம்குமாரோட கையெழுத்துத்தான்னு முடிவு கட்டினீங்க?''

''ஒரு அஸம்ஷன்தான்!''

''எனக்கென்னமோ மனசுக்குள் ஒரு உதைப்பு. இந்தப் பிரேம்குமார் சாதாரண தற்கொலைக் கேஸ் இல்லை. யாரோ இயக்கியிருக்காங்க. பலவந்தமா கொல்லப்பட்டிருக்கான்...''

''விவேக்!''—லேசாய் அதிர்ந்தார் கோகுல்நாத்.

லாட்ஜ் மானேஜர் லெட்ஜரோடு மாடி ஏறி வந்தார்.

லெட்ஜரை நீட்டினார். கட்டு விரலை நீட்டி லெட்ஜரின் அடிப் பாகத்தில் எழுதியிருந்த அட்ரஸைக் காட்டினார். கோகுல்நாத்தும் விவேக்கும் பார்வையை அதன் மேல் ஓட்டினார்கள்.

S. J. VIJAYAKUMAR
85A, Nandanam Colony
Madras

விவேக் சரேலென மானேஜரிடம் நிமிர்ந்தான். ''இந்தக் கையெழுத்து உங்களுடையதா மானேஜர்?'' மானேஜர் தலையை ஆட்டினார். ''இல்லே ஸார்! நான் எண்ணிக்குமே லாட்ஜ்ல என்ட்ரி போட மாட்டேன். கஸ்டமரை எழுதச் சொல்லிடுவேன்...''

''இது அவன் எழுதினதுதான்னு உங்களுக்கு நிச்சயமாத் தெரியும்?''

''நிச்சயம்!''

''ஸி... கோகுல்நாத்! அந்தப் பிரேம்குமார்தான் இங்கே தங்கியிருந்த விஜயகுமார்னு லாட்ஜைச் சேர்ந்த பசங்க சொல்லிட்டாங்க. பிரேம்குமார் வீட்டிலிருந்து கைப்பத்தின லெட்டர்ல இருக்கிற கையெழுத்துக்கும், இங்கே லெட்ஜர்ல இருக்கிற கையெழுத்துக்கும் ஏகப்பட்ட வித்தியாசம் இருக்கு. பிரேம்குமார் லெட்டர்ல எழுத்துக்கள் பூராவும் ஒரு எலிமெண்டரி ஸ்கூல் பையன் எழுதின மாதிரி கோணல் மாணலா இருக்கு. அதே சமயம் லெட்ஜர்ல இருக்கிற கையெழுத்தைப் பாருங்க. ஒரு வெல் எஜுகேட்டடோட தேறண்ட் ரைட்டிங் மாதிரி இல்லே?''

''யூ ஆர் கரெக்ட் விவேக்!'' — கேஸ் சிக்கலாகப் போகிறதே என்னும் நினைப்பில் முகம் வியர்த்துத் தளர்ந்து போக ஆரம்பித்திருந்தார் கோகுல்நாத். 'வெறும் தற்கொலை கேஸ்தான். உறவினர்களை ட்ரேஸ் அவுட் பண்ண முடியாததால் பாடியை மெடிகல் காலேஜுக்கு அனுப்பியாயிற்று' என்னும் வாசகத்தோடு பைலை க்ளோஸ் செய்ய நினைத்திருந்தவர், பிரேம்குமார் மரணத்தில் என்னமோ நடந்திருக்கிறது என்றும் உணர்வு



வந்ததும் சங்கையானார். உதடுகளை ஈரப் படுத்திக் கொண்டு நலிந்த குரலில் சொன்னார்: ''விவேக்! டாக்டர் கொடுத்த போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்படி பிரேம்குமார் தற்கொலை பண்ணிக்கிட்டதற்கான சாத்தியங்கள்தான்அதிகமாயிருக்கு. போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டை நீங்க பார்க்கலீங்களா?''

''உம்...! எந்த டாக்டர் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் கொடுத்திருக்கார்?'' விவேக் கேட்க கோகுல்நாத் சொன்னார்:

''டாக்டர் ஜெகதீஸ்வரன்.''

''அவரோட ரிப்போர்ட் பெரும்பாலும் சரியா இருக்கும். எதுக்கும் ஒரு தடவை அவரைப் பார்த்துப் பேசிடலாம்.''

[6]

விவேக் முழங்கைகளை மேஜையில் ஊன்றிக்கொண்டான். ''டாக்டர்! பிரேம்குமாரோட போஸ்ட் மார்ட்டத்தில் சில டவுட்ஸ் எனக்கு அரைஸ் ஆகியிருக்கு. குட் ஐ க்ளாரிபை தெம்?''

''வெல்கம் கேளுங்க மிஸ்டர் விவேக்!''

''டாக்டர்! பிரேம்குமார் மரணம் ஸுயிஸைடல் டெத்ன்னு ரிப்போர்ட்ல சொல்லியிருக்கீங்க... அது கொலையா இருக்க முடியாதா?''

''இருக்க வாய்ப்பில்லை விவேக். ஒருத்தரை அடிச்சுக் கொன்னு தூக்கில தொங்க விடறதுக்கும், தன்னைத் தானே ஒருத்தர் தூக்குப் போட்டுச் சாகிறதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு. போஸ்ட் மார்ட்டத்தில் ஈஸியாக் கண்டு பிடிச்சுடலாம்.

''எக்ஸ்க்யூஸ் மீ டாக்டர்...நீங்ககொடுத்த போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்ல வலது கை தோள்பட்டையில் ஒரு இன்ஜெக்ஷன் மார்க் தெரியறதாக் குறிப்பிட்டு, அது பெதடின் இன்ஜெக்ஷன்தான்னு கன்பார்ம் பண்ணியிருக்கீங்க... எப்படி டாக்டர்?''

''கெமிகல் எக்ஸாமினேஷன் அதை ப்ரூவ் பண்ணியிருக்கு.''

''ப்ரேம்குமார் பெதடின் இஞ்ஜெக்ஷன் எடுத்துக்கிட்ட பின்னாடி தூக்குப் போட்டுக்கிட்டுச் செத்திருக்கார்... இது சாத்தியமா டாக்டர்?''

''உயிர் போகிறபோது உடம்பு வலியை உணரக் கூடாதுங்கிறதுக்காகச் சில பேர் இப்படிட்ரக்ஸ்எடுத்துக்குவாங்க...அதுமாதிரி எடுத்திருக்கலாம்...'' டாக்டர் சொன்னார்.

''ஏன் டாக்டர் இப்படி நடந்திருக்க சான்ஸ் இல்லையா? பிரேம்குமாருக்கு வேண்டாதவங்க யாராவது பிரேம்குமாருக்கு பெதடின் இஞ்ஜெக்ஷன் குடுத்து அவன் மயக்கநிலையில் இருக்கும் போது கழுத்துல கயித்தை மாட்டித் தொங்க விட்டிருக்கக் கூடாதா?''

''மே.... பி... ஆனா நான் அப்படி நினைக்கலை.... ஏன்னா பிரேம்குமாரோட உடம்பு ரெசிஸ்ட் பண்ணினதுக்கான அடையாளமே உடம்பிலே இல்லே...''

''டாக்டர்... ஒன்மோர் கொஸ்டியன்...''

''கேளுங்க...''

''பெதடின் அடிக்கடி எடுத்துக்கிறவங்க செல்ஃப் இஞ்செக்ஷன் போட்டுப்பாங்க... அடிக்கடி அந்த இஞ்செக்ஷன் போட்டுக்கிறதுனால அவங்களுக்குத் தோள்பட்டையில நிறைய இஞ்செக்ஷன் மார்க்ஸ் இருக்கும் இல்லையா...?''

''ஆமா!''

''அந்த மாதிரியான மார்க்ஸ் பிரேம்குமாரோட தோள்பட்டையில இருந்ததா டாக்டர்?...''

''இல்லை... விவேக்... ஒரேயொரு மார்க் தான் இருந்தது. அதைத்தான் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்ல நோட் பண்ணியிருக்கேன்...''

''உங்க ரிப்போர்ட்படி பார்த்தா பிரேம்குமாருக்கு அதுதான் முதல் பெதடின் இஞ்செக்ஷன் இல்லையா டாக்டர்...?''

''எஸ்...''

''அடிக்கடி பெதடின் போட்டு அதுக்கு ''அடிக்ட்' ஆனவங்களே ஒரு இஞ்செக்ஷன் எடுத்துக்கிட்டா...அதனோட டிரௌஸினஸை டாலரேட் பண்ணிக்க முடியாதுன்னு சொல்லுங்களே... உண்மையா டாக்டர்...?''

''செண்ட் பர்செண்ட்...''

''அப்படீன்னு... முதல் தடவையா பெதடின் இஞ்செக்ஷன் எடுத்துக்கிட்ட பிரேம்குமார் அந்த டிரௌஸினஸையும் மீறி எப்படி எழுந்து... நடந்து... மரத்துலே கயித்தை மாட்டித் தொங்கியிருக்க முடியும் டாக்டர்... அல்லது அவனையாராவது அங்கே இழுத்துக்கிட்டுப் போய்த் தூக்கு மாட்டினா எப்படி ரெஸிஸ்ட் பண்ணமுடியும்?''

டாக்டர் ஜெகதீஸ்வரன் நெற்றியைச் சொறிந்து கொண்டார். விவேக்கைப்பார்த்து அவஸ்தையாய்ச் சிரித்தார்.

[7]

மெட்ராஸ் விஜிலென்ஸிலிருந்து அந்த போன் கால் வந்தபோது சூரியன் காணாமல் போய் ஒரு மணி நேரம் ஆகியிருந்தது.

விவேக் மேஜைநுனியில் உட்கார்ந்து ரிஸீவரில் ஆர்வமாயிருந்தான்.

''சொல்லுங்க மிஸ்டர் டானியேல்...! நாங்க குடுத்த அந்த நந்தனம் அட்ரஸுக்குப் போயிருந்தீங்களா...?''

''உம்... போயிருந்தோம்... பட் நீங்க சொன்ன அந்த டோர் நம்பர் வீடு பூட்டியிருந்தது. காம்பௌண்ட் சுவத்துல 'எல்' ஆங்கிள் தகடு அடிச்ச 'Tex Spares' ன்னு ஒரு போர்டு மாட்டியிருந்தது...''

''அக்கம் பக்கத்துல விசாரிச்சீங்களா?''

''விசாரிச்சோம்... அந்த வீட்ல சிரஞ்சீவின்னு ஒருத்தர் டெக்ஸ்டைல்ஸ் ஸ்பேர்ஸ் பிஸினஸைப் பார்த்துட்டு தனியா இருக்கிறதா சொன்னாங்க... அதுக்கு மேல் யாருக்கும் அந்தச் சிரஞ்சீவியைப் பத்திச் சரியா தெரியலே... மாசத்துல பாதி நாள் வடநாட்டுப் பக்கம் பிஸினஸ் டூர் போயிடுவாராம்... இப்பவும் டூர்லதான் இருப்பார்ன்னு சொல்லுங்க...!''

''போச்சடா...! அப்புறம்... டானியல் இந்த பிரேம்குமார், விஜயகுமார் பேர்களைச் சொல்லி, அடையாளம் சொல்லி அக்கம்பக்கத்துல விசாரிச்சீங்களா...?''

''விசாரிச்சோம்... யாருக்கும் தெரியலை விவேக்...போட்டோவையும் காட்டிப் பார்த்தோம்... அந்த மாதிரி ஆளை நாங்கபார்த்ததில்லேன்னு சொல்லிட்டாங்க...''

''டானியல்...! தேங்க் யூ பார் யுவர் கைண்ட் இன்பர்மேஷன். அந்த வீட்டை எந்நேரமும் கண்காணிக்க ஒரு 'காப்' போடுங்க. அந்தச் சிரஞ்சீவி வந்ததும் எனக்குத் தகவல் கொடுங்க... நானும் கோகுல்நாத்தும் மெட்ராஸ் புறப்பட்டு வர்றோம்...''

''எஸ்... சார்...''

''டெக்ஸ் ஸ்பேர்லே பிஸினஸ் சம்பந்தப்பட்ட மத்த ஆட்களிடம் சிரஞ்சீவியைப் பத்தி விசாரிக்கப் பாருங்க... ஏதாவது க்ளூ கிடைக்கும்...''

''ஓ... கே... ஸார்...''

''தென் மெட்ராஸ் பேப்பர்ல தொடர்ந்த மாதிரி ஒரு நாலு நாளைக்குப் பிரேம்குமார் போட்டோவைப் போடச் சொல்லுங்க. பிரேம்குமார் அடிக்கடி மெட்ராஸ் வர்றது யாருக்காவது தெரிஞ்சிருக்கலாம்...''

[8]

மூன்றும் வருட மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு அனாடமி லேப்பில் உபயோகப்பட்டுக்கொண்டிருந்த பிரேம்குமார் என்கிற விஜயகுமார் செத்துப்போன இருபத்தியாறாவது நாள்.

இடம்: போலீஸ் ஸ்டேஷன்.

காலை எட்டுமணி ஏழு நிமிஷம்.

''நேத்தைக்கு ராத்திரி பத்து மணி வரைக்கும் சிரஞ்சீவி மெட்ராஸ் வரலைன்னு டானியல் போன் பண்ணியிருந்தார் விவேக்.''

விவேக் சிகரெட்டின் சாம்பலை ஆஷ்ட்ரேயில் உதிர்த்துவிட்டு, உதடுகளை அசைத்தான். ''எப்படியும் வந்துதானே ஆகணும்... வரட்டும்... நிதானமாகவே வரட்டும்... சிரஞ்சீவியைப் பத்தி டேனியல் விசாரிக்க அனுப்பின டிட்பிட்ஸ் சொஞ்சம் தெம்பா இருக்கு கோகுல்நாத். அவனோட பர்சனல் லைஃப் சுத்தமில்லே. சரியான வுமனைஸர்... ஸ்மக்ளிங்கில் ஒருதடவை மாட்டியிருக்கான். நிறைய மைனஸ் பாயிண்ட் இருக்கு... அவனுக்கும் பிரேம்குமாருக்கும் ஏதாவது நடந்திருக்கலாம்...''

விவேக் பேசப்பேச—

டெலிபோன் 'ங்ர்ர்ர் ங்ர்ர்ர்' என்றது.

விவேக் ரிஸீவரை எடுத்தான்.

''ஹலோ... விவேக் ஸ்பீக்கிங்!...''

''மிஸ்டர் விவேக்... நான் அர்ஜுனன் பி—ஒன் ஸ்டேஷன்...''

''சொல்லுங்க மிஸ்டர் அர்ஜுனன்... என்ன விஷயம்...?''

''கான்ஸ்டபிளை அனுப்பி ஒரு ஹிண்டு வாங்கிட்டு வரச் சொல்லி அதனோட ரெண்டாம் பக்கத்தைப் பாருங்க...!''

மறுமுனையில் அர்ஜுனன் போனைவைத்து விட்டார்.

கான்ஸ்டபிளை அனுப்பிப்பக்கத்து பெட்டிக் கடையில் ஒரு ஹிண்டுவை வாங்கிவரச் செய்து அதனுடைய இரண்டாம் பக்கத்தைப் பிரித்தபோது —

விவேக்கும், கோகுல்நாத்தும் அதிர்ந்து சரேலென ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். டார்ச்சை மறுபடியும் அந்தப் பக்கத்தில் பதித்தது.

ஹிண்டுவின் இரண்டாம் பக்கத்தில் எட்டாவது பத்தியின் மையத்தில் 'Missing' தலைப்புக்குக் கீழே பிரேம்குமாரின் பாஸ் போர்ட்சைஸ் போட்டோ பளிச்சென்று தெரிந்தது.

S. Kempanna
If found kindly inform
Mr. Sheshappa, 18, Gold wing area
4th Cross, Bellary
Finder will be rewarded
Inserted by Seshappa (Father)
Kalpanadevi (Mother) Mirudhula (Wife)

விவேக் அந்தப் போட்டோவை உற்றுப் பார்த்தான். சந்தேகமில்லை. செத்துப் போன பிரேம்குமார்தான்.

[9]

ஏறக் குறைய ஒன்றரை நாள் பிரயாணத்துக்குப் பிறகு, பெல்லாரியைத் தொட்ட விவேக்கும், கோகுல்நாத்தும் கோல்ட் விங் ஏரியாவைக் கண்டு பிடித்து, நாலாவது குறுக்குத் தெருவில் இருந்த 18வது நெம்பர் வீட்டை நெருங்கியபோது நல்ல மத்தியான நேரம். அப்போது அவர்கள் போலீஸ் உடையில் இருக்கவில்லை.

கெம்பண்ணா பங்களா மினி சைஸில் தெரிந்தது. சமீபத்தில் சூப்பர்செம் நீலநிற டிஸ்டம்பரில் அநாயாசமாய்க் குளித்திருந்தது.

போர்ட்டிகோவில் சின்னதாய், சிவப்பாய் ஹெரால்ட் பியட் நின்றிருந்தது. ஒரு புல் வெளி மிலிடெரி பச்சை நிறத்தில் வட்டமாய் ஒட்டியிருக்க, அதைச் சுற்றிலும் ரோஜா பதியன்கள் மண் தொட்டிகளில் புஷ்டியாய் வளர்ந்திருந்தன.

> ''ஆபீஸில் இத்தனை நாள் மானேஜருக்குத் தெரியாமல் சீட்டு ஆடியது இப்போ தெரிஞ்சு போய் விபரீதம் ஆயிடுத்து.''
> ''ஏன் என்ன ஆச்சு?''
> ''அவரையும் சேர்த்துக் கொள்ளச் சொல்றார்.'' -கிழை அ. கதிர்வேல்



காலிங் பெல்லைத் தொட்டான் விவேக்.

அது பங்களாவின் உ...ள்...ளே...ஏ...ஏ. ''கிங்கிங்' என்றது. விவேக்கும், கோகுல் நாத்தும் கதவு திறக்கப்படக் காத்திருந் தார்கள்.

ஒரு நிமிஷம்....

இரண்டு நிமிஷம்....

பங்களாவின் உள்ளே ஆழ்ந்த மௌனம்.

''இன்னொரு தடவை அடிங்க விவேக்!''

விவேக் மறுபடியும் காலிங்பெல்லின் மேல் கையை வைத்தான். கதவு விலகியது.

ஏறக்குறைய அறுபது வயதைத் தொட்டுக் கொண்டிருந்த அந்தப் பெரியவர், பஞ்ச கச்ச வேஷ்டியோடும், வெற்று மார்பு பூணூலோடும் நெற்றியில் ஸ்ரீசூர்ணத்தோடும் தெரிந்தார்.

''நீரு எவ்ரு?'' அவர் கன்னடத்தில் வாயசைத்த அதே நேரம் விவேக் ஆங்கிலத்தில் ஆரம்பித்தான்.

''எக்ஸ்க்யூஸ் மீ... நாங்க கோயம்புத்தூர்லேயிருந்து வர்றோம்... கன்னடம் தெரியாது. குட் யூ ஸ்பீக் இங்கிலீஷ்?''

அவர் தலையசைத்தார், ''எஸ், கம் இன்.''

உள்ளே போனார்கள்.

பெரியவர் வரவேற்பறையிலிருந்த நாற்காலிகளைக் காட்டி அவர்களை உட்காரவைத்து எதிரே தாமும் அமர்ந்தார். ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தார். ''நீங்க யார்? எதற்காக வந்திருக்கிறீர்கள் என்று நான் தெரிஞ்சுக்கலாமா?''

''ஷ்யூர்...'' என்ற விவேக் கொஞ்சம் தயக்கமாக ''நீங்க...?'' என்று இழுக்க, அவர் ''ஐயாம்சேஷப்பா. ரிடையர்ட்ரெவின்யூ ஆபீஸர்'' என்றார்.

''மிஸ்டர் சேஷப்பா! இந்த விளம்பரத்தைக் கொடுத்தது நீங்கதானே?'' விவேக் பேப்பரைப் பிரித்து அந்த விளம்பரத்தை அவர் முன்னே காட்டினான்.

''எஸ்...அந்தப் போட்டோவிலே இருக்கிற கெம்பண்ணா என்னோட மூத்த மகன். இருபத்தைஞ்சு நாளைக்கு முன்னாடி திடீரென்று வீட்டை விட்டுப் போனவன் இன்னிக்குத் தேதிவரைக்கும் திரும்பலே. அதான் கவலைப் பட்டுக் கொண்டு ஒரு விளம்பரம் கொடுத்தேன். எம் மகனை எங்கேயாவது பார்த்தீங்களா ஸார்?''

''மிஸ்டர் சேஷப்பா உங்க மகன் கெம்பண்ணாவுக்கு நாங்கரெண்டு பேரும் ஃப்ரண்ட்ஸ். போன வாரம் கோயமுத்தூர் ரயில்வே ஸ்டேஷன்ல வெச்சு பார்த்தோம். ஆனா அவன் கூடச் சரியாப் பேச முடியலே...நேத்தைக்குக் காலையில ஹிந்து பேப்பரைப் பார்த்ததும் எங்க ரெண்டு பேருக்கும் ஒரு ஷாக். அதனால் தான் புறப்பட்டு வந்தோம்.''

விவேக் பேசப் பேச சேஷப்பா நாற்காலியிலிருந்து சரேலென எழுந்தார். மாடியையும் பக்கவாட்டில் இருந்த அறையையும் பார்த்துக் கன்னடத்தில் கத்தினார்.

''கல்பனா...! பங்காரப்பா... இல்லி பா... இல்லி பந்து நோடு''

அந்தக் கத்தலில் அவருடைய உடம்பு பதறிக் கொண்டிருந்தது.

அடுத்த விநாடி ஐம்பது வயதுக்கு மேற்பட்ட ஒரு அம்மாள் ஆர்வமாய் வெளிப்பட்டாள். கன்னடத்தில் நாக்குழறக் கேட்டாள். ''என்ன நம்ம மகன் கிடைச்சுட்டானு... எங்கே... எங்கே?''

சேஷப்பா தன் மனைவியின் தோளைப் பற்றி அருகே உட்கார வைத்துக்கொண்டார். ''கல்பனு... இவங்க கோயமுத்தூரிலிருந்து வந்திருக்காங்க. நம்ம கெம்பண்ணுவை ரயில்வே ஸ்டேஷன்லே வெச்சுப்பார்த்தாங்களாம். அவன் கோயம்புத்தூர்லதான் இருக்கான்னு கண்டிப்பா மெட்ராஸ் போனு சிரஞ்சீவியைப் பார்க்காம இருக்க மாட்டான்...''

''சிரஞ்சீவின்னு சொன்னீங்களே யார் அது?''

சேஷப்பா தம் மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கொண்டே சொன்னார்: ''கெம்பண்ணுவும் சிரஞ்சீவியும் ஒண்ணாப் படிச்சவங்க. கெம்பண்ணு அடிக்கடி மெட்ராஸ் போவான். சிரஞ்சீவியும் இங்கே அடிக்கடி வருவான். சிரஞ்சீவி டெக்ஸ்டைல் ஸ்பேர்ஸ் பிஸினஸ் பார்த்துக்கிட்டிருக்கான். கெம்பண்ணு வீட்டை விட்டுப் போனதும் சிரஞ்சீவிகிட்டத்தான் போயிருப்பான்னு நெனைச்சோம். சிரஞ்சீவிக்குப் போன் பண்ணிக்கேட்டோம். அவன் வரலைன்னு சொல்லிட்டான்.''

கோகுல்நாத் பேச்சில் குறுக்கிட்டார்.

''சேஷப்பா... நாங்க ஒரு கேள்வி கேட்டா நீங்க தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே?''

''இல்லே... கேளுங்க.''

''உங்க சன் கெம்பண்ணு எந்தக் காரணத்துக்காக வீட்டை விட்டுப் போனுரென்று உங்களுக்குத் தெரியுமா?''

''காரணம் புரியாமத்தான் நாங்களும் முழிச்சுக்கிட்டிருக்கோம்.''

''எம்மகனைப் பார்த்ததாச்சொல்றீங்களே? அவன் எப்படி இருக்கான்? நல்லா இருக்கானு? திரும்பவும் அவனைப் பார்ப்பீங்களா?''

பத்திரிகை ஆசிரியர்: குத்துச் சண்டை வீரரிடம் பேட்டி வாங்கிண்டு வரேன்னு போனே, இப்ப என்னடான்னு, கை, கால், தலை எல்லாத்துக்கும் பேண்டேஜ் போட்டுண்டு வந்து நிக்கறியே, என்ன விஷயம்?

நிருபர்: அவரிடம் வாய் தவறி ''போட்டிக்கு வந்திருக்கிறேன்''னு சொல்லிட்டேன்.

—கிருஷ்ண சங்கர்



சேஷப்பாவின் மனைவி விவேக்கின் கைகளைப் பற்றிக் கொண்டு மெலிதாய் விசும்பினுள்.

''கோயம்புத்தூர்ல இருந்தா நிச்சயமா அவனைப் பார்ப்போம். எப்படியும் கெம்பண்ணுவைக் கண்டு பிடிச்சுடலாம். டை... த...டை... மிஸ்டர் சேஷப்பா... கெம்பண்ணுவுக்கு விஜயகுமார்னு ஏதாவது பேர் இருக்கா?''

''உம்!... விஜயகுமார்ங்கிற பேர் அவனு வெச்சுக்கிட்டது. 'கெம்பண்ணு' என்னோட அப்பா பேர்... அவரோட ஞாபகார்த்தமா அந்தப் பேரை அவனுக்கு வெச்சேன். ஆனு அவனுக்குப் பிடிக்கலை. தன்னோட பேரை விஜயகுமார்னு மாத்திக்கப் போறதா சொல்லிட்டிருப்பான்.''

சேஷப்பா பேசிக் கொண்டிருந்த அதே நேரம்....

மாடிப் படிகளில் மெதுவாய் ஓர் இளைஞன் இறங்கிக் கொண்டிருந்தான். கொஞ்சம் சேஷப்பா சாயல். முகத்தில் மீசை பெரிதாய்த் தெரிந்தது.

சேஷப்பா மாடிப் பக்கம் திரும்பினுர். அந்த இளைஞனைப் பார்த்துவிட்டுச்சொன்னுர்: ''வர்றவன் என்னோட ரெண்டாவது மகன். பேர் பங்காரப்பா.''

பங்காரப்பா சிரிக்காத உதடுகளோடு விவேக்கையும் கோகுல்நாத்தையும் பார்த்தபடி நெருங்கினுன்.

விவேக் பங்காரப்பாவைப் பற்றி ஏதோ கேட்க வாயெடுத்த நேரம்... போர்ட்டிகோவில் அந்தக்கார் வேகமாகவந்துநின்றது.

''மிருதுளா கோயில்லயிருந்து வந்துட்டா போலிருக்கு!'' சேஷப்பா தன்னுடைய மனைவியைப் பார்த்துச் சொல்ல அந்த அம்மாள் போர்ட்டிகோவை எட்டிப் பார்த்தாள்.

காரின் கதவு அறையப்பட்ட சத்தம் கேட்ட சில விநாடிகளுக்குப் பிறகு அந்தப் பெண் அறைக்குள் நுழைந்தாள். அழகாயிருந்தாள்.

''அம்மா மிருதுளா...! நீ கோயில் கோயிலாச் சுத்தித் தெய்வங்களை வேண்டியது வீண் போகலையம்மா... உன்னோட புருஷனை இவங்க கோயமுத்தூர்ல பார்த்திருக்காங்க!''

சேஷப்பா சொல்லச் சொல்ல—

மிருதுளா கண்களில் நீர் தத்தளிக்க, நாசி விம்ம கோகுல்நாத்தையும் விவேக்கையும் பார்த்தாள். கன்னடத்தில் சந்தோஷக் கத்துக் கத்தினுள். ''அவரை எங்கே பார்த்தீங்க?... என்னோட ராஜாவை எங்க பார்த்தீங்க? என்னையும் அங்க கூட்டிக்கிட்டுப் போங்க....''

அவளுடைய கத்தல் விவேக்கைப் பாதித்தது.

கெம்பண்ணு தூக்கில் தொங்கிக்கொண்டிருந்த அந்தப் புகைப்படம் மனதை அறுத்தது. மிருதுளாவின் நெற்றிக்குங்குமமும் கழுத்தில் தொங்கிய தாலிக் கொடியும் கண்களில் பட வயிற்றில் சங்கடம் பிசைந்தது.

கெம்பண்ணு செத்துப் போனதை இவள் எப்படித் தாங்கிக் கொள்ளப் போகிருள்?

விவேக்கும் கோகுல்நாத்தும்எழுந்தார்கள்.

விவேக்கும் கோகுல்நாத்தும் அனைவரையும்பார்த்துப்பொதுவாய்கை குவித்துவிட்டுத்

திரும்புகையில் பின்புறச் சுவரில் பெரிதாய் மாட்டப்பட்டிருந்த அந்த நடுத்தர வயதுப் பெண்ணின் போட்டோ சந்தன மாலையோடு கண்ணில் பட்டது.

''போட்டோவில இருக்கிறவங்க யாரு?''— விவேக் கேட்டான்.

சேஷப்பா தயக்கமில்லாமல் சொன்னார்.

''கெம்பண்ணாவோட அம்மா. எனக்கு பர்ஸ்ட் ஒய்ப்.''

விவேக்கும் கோகுல்நாத்தும் சின்னதாய் அதிர்ந்தார்கள். ''மிஸஸ் கல்பனா உங்களுக்கு செகண்ட் ஒய்ஃபா? அவங்களோட சன் தான் மிஸ்டர் பங்காரப்பாவா?''

''ஆமாம்!''

உடம்பு பூராவும் வழியும் சிவப்போடு ஹெரால்ட் கார் போர்ட்டிக்கோவில் நிற்க, அவர்களை லாட்ஜில் இறக்கிவிட்டு வருமாறு டிரைவர் தேவராஜிடம் சொன்னார் சேஷப்பா.

[10]

ஹெரால்ட் கார் கதக் ரோட்டில் சீராய் வேகம் பிடித்து வழுக்க ஆரம்பித்தது.

பின் சீட்டில் கோகுல்நாத்தும் விவேக்கும் சிகரெட் புகைகளோடு சாய்ந்திருக்க, டிரைவர் காரை விரட்டிக் கொண்டிருந்தான். இளவயது டிரைவர். ஒரு சினிமா ஹீரோவுக்குத் தேவையான முக வெட்டு. வெல் பில்ட் பாடி.

''என்ன டிரைவர் உனக்குத் தமிழ் தெரியுமா?''

அவன் திரும்பிப் பார்த்துச் சிரித்தான்.

''தெலியது ஸார்!'' தெலுங்கில் சொன்னான்.

''இங்கிலீஷ்?''

அவன் உதட்டைப் பிதுக்கினான்.

விவேக் கோகுல்நாத்தைப் பார்த்தான். ''டிரைவர் கிட்டேயிருந்து ஏதாவது விஷயத்தைக் கறக்கலாம்னா பாஷை தகராறு.''

கோகுல்நாத் தனக்குத் தெரிந்த அரைக் கால்வாசித் தெலுங்கில் டிரைவரோடுபேசிப் பார்த்தார். ''டிரைவர்... நீ... பேரு?''

''தேவராஜ் ஸார்''

''கெம்பண்ணா இந்த இல்லு விட்டு என்னிக்கு போதா?''

''மீரு செப்பேதி நாகு அர்த்தம் காலே ஸார்....''

கார் பெல்லாரி ரயில்வே ஸ்டேஷனைத் தொட்டுக் கொண்டு, கீழ்வாக்கில் சரிந்த ரோட்டில் இறங்கி, மெயின் ரோட்டில் இருந்த மீனாட்சி லாட்ஜ் முன் நின்றது.

இருவரும் இறங்கிக் கொண்டார்கள்.

''நேனு ஒஸ்தானு ஸார்.'' — டிரைவர் காரைத் திருப்பிக் கொண்டு போனான். கோகுல்நாத்தும் விவேக்கும் லாட்ஜின் உள்ளே நடந்து ஆட்கள் இல்லாத வரவேற்பறையில் உட்கார்ந்து கொண்டார்கள்.

''கெம்பண்ணா சேஷப்பாவோட பர்ஸ்ட் ஒய்ப் சன். இந்த ஒரு பாயிண்ட் நமக்குப் பலம் கோகுல்நாத். அந்தப் பங்காரப்பா செகண்ட் ஒய்போட சன்... சேஷப்பாவுக்குச் சொத்து நிறையத் தேறும் போலிருக்கு... இந்தச் சொத்து விவகாரத்துல ஏதாவது கசமுசா நடந்திருக்கலாம். மனசு வெறுத்துக் கெம்பண்ணா வீட்டை விட்டு வெளியே போயிருக்கலாம். —வெளியே போன கெம்பண்ணாவை பாலோ பண்ணியிருக்காங்க...'' —விவேக் பேச்சை நிறுத்த—

கோகுல் தொடர்ந்தார். ''கோயமுத்தூருக்கு வந்த கெம்பண்ணா லாட்ஜ் எடுத்துத் தங்கியிருக்கான். லாட்ஜ் லெட்ஜர்ல தனக்குப் பிடித்தமான விஜயகுமார் பேரை எழுதிவிட்டு அட்ரஸை எழுதப் பிரியப் படாமே தன்னோட சிநேகிதன் ரெஞ்சிவியோட மெட்ராஸ் அட்ரஸைக் கொடுத்திருக்கான். கெம்பண்ணா லாட்ஜை விட்டு வெளியே வந்த சமயம் அவனுக்குத் தெரிந்த யாராலோ கட்டாயப்படுத்தப்பட்டு அழைத்துப் போகப்பட்டு பெதடின் ஊசியால் மயக்கப்பட்டுத் தொங்க விடப்பட்டிருக்கிறான். சரியா விவேக்?''

''கரெக்டா வர்றீங்க கோகுல்நாத். மிச்சத்தையும் சொல்லிடுங்க!''

கோகுல்நாத் புன்னகையோடு தொடர்ந்தார்.

''தூக்கில் தொங்க விடப்பட்ட கெம்பண்ணாவைப் பத்தித் தமிழ் நாட்டில யாருக்கும் தெரியாது. அதனால பிரேம்குமார்ங்கிற பேர்ல ஒரு தற்கொலைக் கடிதம் தயாரிக்கப்பட்டு கெம்பண்ணாவோட ஜிப்பா பாக்கெட்ல போட்டிருக்காங்க... ஒரு சேரன் பஸ் டிக்கெட்டையும் போட்டு போலீஸை ஒரு சின்ன வட்டத்திலேயே சுற்றும்படியா பண்ணியிருக்காங்க... கோயமுத்தூர் லாட்ஜ்காரன் மட்டும் போன் பண்ணிச் சொல்லலைன்னா கேஸ் அப்படியே அந்தரத்துல நின்னிருக்கும்...''

''கோகுல்நாத்! நாம இப்போ கேஸோட கடைசி கட்டத்தில இருக்கோம்... கெம்பண்ணாவோட கொலைக்குக் காரணமானவங்க

இந்துவார் பெட்
சோமவார் பெட்
மங்களவார் பெட்
புதவார் பெட்
குருவார் பெட்
சுக்ரவார் பெட்
சனிவார் பெட்
இவ்வாறு கிழமைகளின் பெயர்களைக் கொண்ட ஏழு பேட்டைகள் பூனா நகரத்தின் மையத்தில் உள்ளன.

—குண்டன்



அந்த வீட்லயும் இருக்கலாம்; வெளியேயும் இருக்கலாம்... அந்த மெட்ராஸ் பிரெண்ட் சிரஞ்சீவியாவும் இருக்கலாம்... நம்ம சந்தேகத்தை யார் மேலேயும் உடனடியாக் காட்டிடக் கூடாது...''

''அடுத்தபடியா நாம என்ன செய்யப் போறோம் விவேக்?''

''நாளைக்கு நாம மறுபடியும் சேஷப்பா வீட்டுக்குப் போகப் போறோம். அவங்க வீட்டு மெம்பர்ஸ் எல்லாரும் இருக்கிற சமயம், ''நேத்தைக்கு ராத்திரி கோயமுத்தூரிலிருந்து ஒரு பிரண்ட் 'கால்' போட்டு நம்பகிட்ட கெம்பண்ணனைப் பத்திப் பேசினதாகவும், கெம்பண்ண தற்சமயம் அவனோட கஸ்டடியில் இருக்கிறதாகவும், இப்போது கோயமுத்தூர் புறப்பட்டால் கெம்பண்ணனை அழைச்சுட்டுவந்துடலாம்னுசொல்லப் போறேன்... கெம்பண்ணனோட கொலைக்குக காரணமா இருக்கிறவங்க நிச்சயமா நான் சொன்னதைக்கேட்டு முகம் மாறித்திகைச்சுப் போயிடுவாங்க. யார்கிட்ட அந்த திகைப்பும், அதிர்ச்சியும் இருக்கோ அவங்களை நாம கண்காணிக்கப் போறோம்...!''

கோகுல்நாத் புன்னகைத்தார்.

''எல்லாருமே சந்தோஷப்பட்டுக் கோயமுத்தூர் புறப்படத் தயாராயிட்டா என்ன பண்ணுவீங்க விவேக்...? கோயமுத்தூர் போய்க் கெம்பண்ணனை எப்படி காட்டப் போறீங்க...? மெடிகல் காலேஜ் அனாடமி லேப்புக்குத்தான் கூட்டிட்டுப் போகணும்... ஒவ்வொரு உறுப்பா தேடிப்பிடிச்சு எடுத்துக் காட்டணும்...''

''அதுக்கு முன்னாடி கொலையாளியைப் பிடிச்சுடலாம் கோகுல்நாத்!''

''எனக்கென்னமோ அந்த நம்பிக்கை இன்னும் வரலே!''

> 'விதண்டாவாதம்' என்றால் என்ன?' 'வித்து' என்றால் விதை. 'அண்டம்' என்றால் மரம். 'உலகில் முதலில் விதையிலிருந்து மரம் முளைத்ததா? அல்லது மரத்திலிருந்து விதையா?' இதற்கு முடிவு காண்பது கஷ்டம். அதேபோல் விதண்டாவாதம் புரிபவர்களிடம் ஒரு வித முடிவுக்கும் வரும்படி செய்ய முடியாது.
>
> ஸ்ரீஜெயராம சர்மாவின் உரையில் கேட்டு எழுதியவர்: பத்மா தேசிகன்



[11]

மறுநாள் காலை ஏழு மணி. சேஷப்பா விடமிருந்து போன் வந்தது.

''வீட்ல டிபனுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கு... ஓட்டலில் சாப்பிடாதீங்க.... வீட்டுக்கு வந்துடுங்க...?

''நீங்க சாப்பிடுங்க... எங்களுக்காக ஏன் வெயிட் பண்றீங்க...? வந்துடறோம்!''

அதேவிநாடி —

அறைக்கதவை யாரோ 'டொக்'கென்று சப்தித்து அழைத்தார்கள். விவேக் போய்க் கதவைத் திறந்தான். டிரைவர் தேவராஜ்!

''அய்ய...பம்பிச்சினாரு...''அவன் தெலுங்கில் ஆரம்பிக்க விவேக் சிரித்தான்... ''வர்றோம்... வர்றோம்... ஒரு பத்து நிமிஷம் கீழே வெயிட் பண்ணு! வந்துடறோம்..! அவர் உள்ளே குளிச்சிட்டிருக்கார்...'' விவேக் தன் கையிலிருந்த கடிகாரத்தையும் பாத்ரூமையும் மாற்றி மாற்றிக் காட்டிப் பேசியதை — தேவராஜ் புரிந்து கொண்டான்.

இருவரும் காரில் ஏறியதும், கார் ரோட்டுக்கு வந்து வேகம் பிடித்து அம்பாய்ப் பாய — விவேக் தன் சட்டைப் பையில் சிகரெட்டைத் தேடினான். கிடைக்காமல் போகவே ''மை குட்னஸ்!'' நெற்றியில் விரல்களால் தட்டிக் கொண்டான்.

''சிகரெட் பாக்கெட்டையும் லைட்டரையும் ஹோட்டல் ரூம்லயே விட்டுட்டு வந்தாச்சு... கோகுல்நாத்...''

''டிரைவர்... சிகரெட் வேணும்... சிகரெட்...! காரை ஏதாவது கடைப்பக்கமா ஒதுக்கு... அதோ அந்தக் கடைக்கு முன்னாடி நிறுத்து...!''

''சிகரெட் காவல சார்...!'' தேவராஜ் கேட்டுக்கொண்டே காரை ஒடித்து ஒதுக்குப் புறமாய் நிறுத்தினான். ரோட்டின் எதிர்ச் சாரியில் அந்தக் கடை தெரிந்தது.

தேவராஜ் காரைவிட்டு இறங்கினான்.

''மீரு காருலனே உண்டண்ட சார்... நேனு வெள்ளி சிகரெட் தீஸ்கோனி ஒஸ்தானு...!'' விவேக் நீட்டிய ஐந்து ரூபாய் நோட்டை வாங்கிக் கொண்டு ரோட்டைக் கடந்து எதிர்ச்சாரிக்கு ஓடினான் தேவராஜ்.

''பெல்லாரி காரச் சாப்பாடு! சோலை... ஒரு க்னோரோஸ்ட்ரெப்பில் எடுத்துக்கிட்டா நல்லாயிருக்கும்... ஒன்மினிட்! நான் போய் வாங்கிட்டு வந்துடறேன்....''கோகுல்நாத் எழுந்தார்.

விவேக் தடுத்தான்.

''நீங்க கார்லயே இருங்க கோகுல்நாத்... நான் வாங்கிட்டு வந்துடறேன்... க்னோரோஸ்ட்ரெப்பில்தானே...?'' விவேக் கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கினான்.

எதிர்ச் சாரியை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

எதிரே இருந்த பெட்டிக்கடையில் தேவராஜ் சிகரெட் வாங்கிக் கொண்டிருக்க — அதனையொட்டினாற்போல் பார்மஸியை நெருங்கினான் விவேக்.

அதே விநாடி —

''அட சும்மா இரப்பா... நீ வேறே?''— குரல் கேட்டு விவேக் திரும்பினான்.

பெட்டிக் கடைக்காரனிடம் பேசிக்கொண்டிருந்தது தேவராஜ்தான்.

பேசியது தமிழில். தெலுங்கு வாடை, கன்னட வாசனை கலக்காத தமிழ்.

''ஆமா கார்ல இருக்கிறது யாரு?''

''நம்ம தமிழ்நாட்டுக்காரங்கதான்.... முதலாளி மகன் கெம்பண்ணாவைக் கோயமுத்தூர்ல பார்த்தாங்களாம்... வேலை கெட்டு வந்திருக்காளுக... சரி... நீ மொதல்ல கெரெட்டைக் குடு... அப்படியே நம்ம பிராண்ட் ஒரு பாக்கெட் எடுத்து வை!''

விவேக் மாத்திரை கூட வாங்காமல் அப்படியே காருக்குத்திரும்பினான். வேகமான நடை. காரில் ஏறி உட்கார்ந்தான்.

''விவேக்... க்ளோரோஸ்ட்ரெப்ஸில் வாங்கலே?''

''கோகுல்நாத்... உங்க க்ளோரோஸ்ட்ரெப்ஸிலுக்கு நன்றி சொல்லணும்... மாத்திரை அப்புறமா வாங்கிக்கலாம்... இப்ப நான் சொல்றதை கவனியுங்க கோகுல்நாத். டிரைவர் தேவராஜுக்குத் தமிழ் தெரிஞ்சிருக்கு. ஆனா தமிழ் தெரியாதது மாதிரி நம்மகிட்ட நடிக்கிறார்.... அங்கே என்னமோ இருக்கு...! சிகரெட் வாங்கிட்டு வர்றான்... அப்புறமா பேசலாம்...''

தேவராஜ் சிகரெட் பாக்கெட்டோடு காரில் ஏறி உட்கார்ந்தான். பாக்கெட்டையும் மீதிச் சில்லறையையும் விவேக்கிடம் கொடுத்துவிட்டுக் காரைக் கிளப்பினான்.

''தேவராஜ்... நீ முயற்சி செஞ்சா தமிழ்ல பேச முடியும்னு நினைக்கிறேன்... பேசிப் பாக்கிறியா...?''

காரை ஓட்டிக் கொண்டிருந்த தேவராஜ் 'பளிச்'சென்று திரும்பினான்.

''ஸார்?''

''பெட்டிக்கடைக்காரன்கிட்ட மட்டுந்தான் தமிழ் பேசுவியா தேவராஜ்?''

''ஸார்!''

''இந்த ஊர்ல... நீ எங்கே தங்கியிருக்கே...?''

''.......''

''ம்... சொல்லு...! நாங்க தமிழ்நாட்டிலேயிருந்து வேலைகெட்டு வரலை தேவராஜ்... வேலையோடத்தான் வந்திருக்கோம்... எங்ககிட்டே இருக்கிற போலீஸ் அட்டைகளைக் காட்டட்டுமா...?''

தேவராஜ் சகலமும் அதிர்வது தெரிந்தது.

''இப்போ, நேரா நீ உன்னோட ரூமுக்குப் போகப் போறே...! அப்புறந்தான் சேஷப்பாவோட பங்களாவுக்கு...!''

''ஸார்...! ஸா...ர்...! சும்மா தமாஷுக்கு... தமிழ் தெரியாதுன்னு உங்ககிட்டே... சொல்லி...!''

''பேசாதே... மொதல்ல உன்னோட ரூமுக்குப் போ. கோகுல்நாத்! உங்க பிஸ்டலை எங்கிட்ட குடுங்க... அப்பத்தான் தேவராஜ் காரை ஒழுங்கா ஓட்டுவான்.''

விவேக் பிஸ்டலை வாங்கிக் கொள்ள, கார் வேகம் எடுத்து ஓடியது. ரயில்வே லைனை ஒட்டினாற்போலிருந்த மண்சாலையில் திரும்பி ஒரு ஐந்து நிமிஷ பயணத்திற்குப் பிறகு ஓட்டு வீடுகள் நிறைய தெரிந்த குடியிருப்பைக் கடந்து — வேப்பமரங்கள் நிறையத் தெரிந்த ஒரு தெருவுக்குள் நுழைந்து கோடி வீட்டின் முன்னால் கார் தட்டென்று நின்றது.

''இதான் உன்னோட வீடா...?''

''ம்...''

விவேக் முதலில் காரைவிட்டு இறங்கினான். மெல்லிய குரலில் சொன்னான்.

''தேவராஜ்! வீட்டோட சாவியை கோகுல்நாத்கிட்ட குடு... அவர் வீட்டைத் திறக்கட்டும்... நீ எனக்கு முன்னாடி போ...''

போனான்.

கோகுல்நாத் பூட்டைத் திறந்துகொண்டு வீட்டின் உள்ளே போனார். சிறிய வீடு. ஒரு சமையலறை. ஒரு படுக்கையறை. படுக்கையறை நவீனமாய் இருந்தது.

''கோகுல்நாத்! தேவராஜைக் கொஞ்சம் பார்த்துக்குங்க... நான் ரூமை அலசிடறேன்.'' விவேக் பிஸ்டலைக் கோகுல்நாத்திடம் கொடுத்துவிட, அறையில் மூலையில் இருந்த மேஜையை நெருங்கினான். அதன் டிராயரை இழுத்தான்.

பழைய தமிழ் வார இதழ்கள் அடைசலாய்த் தெரிந்தன.

கீழ் இழுப்பறையைத் திறந்தான்.

நான்கைந்து இன்லண்ட் கவர்கள் கண்ணில் பட — அவைகளை எடுத்தான். பார்த்தான்.

எல்லாமே தேவராஜுக்கு வந்த கடிதங்கள்.

அன்புள்ள அண்ணா என்று ஆரம்பித்து— இப்படிக்கு உங்கள் தங்கை கமலா என்று முடியும் கடிதங்கள். விவேக் இழுப்பறையை மூடிவிட்டு நிமிர்ந்தான்.

ஷெல்ப்பில் ஒரு புத்தகம் தெரிய—

அதன் நடுவே ஒரு போஸ்ட் கவர் எட்டிப் பார்த்தது.

விவேக் எழுந்தான்.

கவரின் மேல் 'கமலா, கனகாபுரம் (வயா) சுப்புலாபுரம், . கன்னியாகுமரி என்று எழுதப்பட்டிருக்க ப்ரம் அட்ரஸில் தேவராஜின் பெயர் இருந்தது.

இன்னமும் தபாலில் போடாத கடிதம்.

கவரைப் பிரித்துக் கடிதத்தை எடுத்தான் விவேக்.



''அன்புள்ள தங்கை கமலாவுக்கு அண்ணன் தேவராஜ் எழுதியது. உன்னுடைய கடிதம் கிடைத்தது. உன்னுடைய கஷ்டங்களை எனக்குத் தெரிவித்திருந்தாய். உன்னுடைய கணவனோடு வாழ விரும்பவில்லையென்றும் எழுதியிருந்தாய். சிறிது பொறுமையாய் இரு...''

கடிதத்தை மேற்கொண்டு படிக்காமல் தலையை உயர்த்தினான் விவேக்.

''கோகுல்நாத் இந்த லெட்டரைப் பார்த்தீங்களா...?''

விவேக் கடிதத்தை நீட்டினான்.

கோகுல்நாத் வாங்கிப் பார்த்தார்.

அதிர்ச்சி அலைகள் அவரை ஆக்கிரமித்தது.

தூக்கில் தொங்கிய கெம்பண்ணாவின் ஜிப்பாவில் இருந்த லெட்டரில் காணப்பட்ட அதே கையெழுத்து. அதே மாதிரியான ரு.றி எழுத்துப் பிழைகள் கடிதம் பூராவும் ஒடியிருந்தது. தேவராஜின் பக்கமாய் திரும்பினார் கோகுல்நாத்.

''இந்த லெட்டரை எழுதினது நீ இல்லேன்னு சொல்லிடாதே தேவராஜ்! ஏன்னா இதே கையெழுத்துல நீ ஒரு லெட்டர் எழுதி பிரேம்குமார்ன்னு கையெழுத்துப் போட்டு கெம்பண்ணாவோட ஜிப்பாவிலே போட்டிருக்கே. அந்த லெட்டர் ஃபைல்ல இருக்கு... ஆமா எதுக்காக கெம்பண்ணாவைத் தீர்த்துக் கட்டினே...?''

''ஸார்...!''தேவராஜ் முகம் வெளுத்தது.

''சொல்லிடு...! இனிமே எதையும் மறைக்க முடியாது...!''

மேற்கு ஜெர்மனியில்எஃபன் ஹார்டு இரேவன் என்னும் பாங்குக் கொள்ளைக்காரனுக்குப் பன்னிரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இரேவன் புராதன முறையில் கல்லில் தெய்வ வடிவங்களைச் செதுக்கச் சிறையில் கற்றுக் கொண்டான். அவனுடைய சிற்பங்களுக்கு ஏகக் கிராக்கி ஏற்பட்டது. எனவே சிறைக்குள்ளேயே அவனை 'சுதந்திர வியாபாரி' ஆக்கி அவனிடமிருந்து 'சாப்பாடு, உடை, தங்குமிடம் ஆகியவற்றுக்காக மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட கட்டணமும் வசூலித்து விட்டார்கள்!

-விந்தை நிகழ்ச்சிகள் நூறு என்னும் புத்தகத்திலிருந்து. படமும் தகவலும்: செந்தமிழ்ச் செல்வன்



''ஸார்... நான் கெம்பண்ணாவைக் கொலை செய்ய மாட்டேன்னு ஆனவரைக்கும் சொல்லிப் பார்த்தேன்... ஆனா மிருதுளாம்மா கேட்கலே...!''

''மிருதுளாவா?''— அதிர்ந்தார்கள் விவேக்கும் கோகுல்நாத்தும்.

''ஆமா! மிருதுளாம்மாவும், நானும் ஒரு ராத்திரியிலே ஒண்ணா இருந்ததை கெம்பண்ணா பார்த்துட்டார்... அவர் வெளியே சொல்லிடறதுக்கு முன்னாடி அவரை இல்லாமெ பண்ணிடணும்... இல்லேன்னா என்னை மாமனார் வெளியே துரத்திடுவார்... அப்புறம் அப்பா, அம்மா இல்லாத நான் அநாதையா தெருவுல நிக்க வேண்டிவரும்... சொத்திலேயும் பங்கு கிடைக்காதுன்னு சொல்லி மிருதுளாம்மா என்னை மிரட்டினாங்க... ஆனா மிருதுளாம்மா எதிர்பார்த்தபடி கெம்பண்ணா அந்த விஷயத்தை யார்கிட்டேயும் சொல்லலே. மனசிலேயே அடக்கிக்கிட்டுச் சரியா சாப்பிடாமெ... ஒரு ஜடம் மாதிரி இருந்தார். ஆனாலும் மிருதுளாம்மாவுக்கு பயம் விடலே. என்னைக்காவது அவர் சொன்னாலும் சொல்லிடுவார்... அவரை இல்லாமெ பண்ணிடறதுதான் நல்லதுன்னு சொல்லி என்னை உசுப்பி விட்டாங்க...!''

''மிருதுளாவுக்கும் உனக்கும் எத்தனை நாளா இந்தத் தொடர்பு?'' விவேக் கேட்டான்.

''ஆறு மாசமா.''

''வழக்கமா எங்க சந்திச்சுக்குவீங்க...?''

''இந்த வீட்லதான்...''

''அதான் பெட்ரூமை மட்டும் விசேஷமா வெச்சிருக்கியா தேவராஜ்? எப்பக் கூப்பிட்டாலும் அந்த மிருதுளா இங்கே வருவாளா?''

''உம்... வருவாங்க... கோயிலுக்குப் போறேன்னு சொல்லிட்டு வருவாங்க...''

''இப்ப கூப்பிட்டாலும் வருவாளா?''

''உம்...''

''இந்த ஏரியாவில போன் எங்கே இருக்கு...?''

''அந்த கார்னர்ல பூத் இருக்கு...''

''கோகுல்நாத்! நீங்க இங்கேயே இருங்க. மிருதுளாவுக்கு போன் பண்ணிட்டு வந்துடறோம்... தேவராஜ்! நீ என்ன 'கோட்' வேர்ட்ஸை உபயோகப்படுத்தி அந்த மிருதுளாவைக் கூப்பிடுவியோ எனக்குத் தெரியாது. ஆனா அது இந்த வீட்டுக்கு வரணும். நீ எங்கிட்ட சிக்கிகிட்டிருக்கிறதைப்பத்தி மூச்சுக் காட்டக் கூடாது...!''

''சரி... ஸார்...''

விவேக்கும் தேவராஜூம் போனார்கள்.

போன் செய்துவிட்டு —

பத்து நிமிஷம் கழித்து வந்தார்கள்.

''கோகுல்நாத்! மிருதுளா வந்திட்டிருப்பா... கதவை வெறுமே சாத்திட்டு இப்படி வந்து உட்காருங்க...!''

கோகுல்நாத் கதவைச் சாத்திவிட்டு உள்ளே வந்து உட்கார்ந்தார்.

மூன்று பேரும் —

மிருதுளாவுக்காகக் காத்திருக்க ஆரம்பித்தார்கள்.

(முற்றும்)

பிரபல மனிதர்கள் குட்டித் தகவல்கள்

புஷ்பா தங்கதுரை

நேரம் கிடைக்கும் போதெல்லாம் பழைய புத்தகக்கடைகளுக்குப் போய், புத்தகங்களைப் புரட்டும் பழக்கமுடைய இவருக்கு சுமார் நூறு வருடங்களுக்கு முன் வெளியான தமிழ்நாட்டுக்கோவில்களைப் பற்றிய புத்தகம் ஒன்று கிடைத்தது.

சௌந்தரா கைலாசம்

இவர் டிரைவிங் கற்றுக் கொண்டது 'ஜீப்'பில் தான்.

குமரி அனந்தன்

தினமும் காலையில் எழுந்ததும் யோகாசனம் செய்கிற பழக்கம் உள்ளவர்.

பிரபு

அவுட்டோர் போகும்போது 'வீடியோ டெக்' எடுத்துக் கொண்டு போய் நேரம் கிடைக்கும் போதெல்லாம் படங்கள் பார்ப்பார்.

உசிலை மணி

எந்த விழாவில் பேசினாலும் 'லேடீஸ் அண்ட் ஜென்டில்மேன், டு-டேஸ் புரோகிராம்....' என ஆங்கிலத்தில் ஆரம்பித்து, 'இதற்கு மேல் இங்கிலீஷ் வராது' என்று சொல்லித் தமிழில் தொடர்வது உசிலை மணி ஸ்டைல்.

எஸ். வி. சேகர்

இன்று சென்னையில் மிக அதிக அளவு 'கேட் கலெக்ஷன்' ஆவது எஸ். வி. சேகர் நாடகங்களுக்குத்தான்.













தொகுப்பு: எஸ். சந்திரமௌலி











இந்துமதி

இவர் வீட்டில் இருக்கும்போது பெரும்பாலும் அணிவது 'மாக்ஸி' — சின்னச் சின்னப் பூக்கள் போட்டது.

எல். ஆர். நாராயணன்

அமெரிக்கா சென்றிருந்தபோது சுற்றுலாப் பயணிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையில் கிடைக்கும் உலகின் அனைத்து நாட்டு சின்னஞ்சிறு கொடிகளையும் வாங்கி வந்து, தன் அலுவலக அறையில் வரிசையாக வைத்திருக்கிறார்.

அமைச்சர் ஹண்டே

காரில் பயணம் செய்யும்போது, கர்நாடக இசை காஸெட்டுகளை இடைவிடாமல் தான் கேட்டு ரசிப்பதோடல்லாமல், உடனிருப்பவரையும் 'இது என்ன ராகம்?' என்று கேட்டு இசையறிவைச் சோதிப்பார்.

கிரேஸி மோகன்

டெலிவிஷனில் பிரபல ஆங்கிலத் தொடரான 'ஹியர் ஈஸ் லூஸி' போல, தமிழில் மனோரமாவை வைத்து, ''ஹியர் ஈஸ் கிரேஸி'' என்று ஒரு நகைச் சுவைத் தொடர் வழங்க வேண்டும் என்று கிரேஸி மோகனுக்கு ஆசை.

கிராக்கி

பத்திரிகைகளில் கட்டுரை எழுதி வருகிற சன்மானத்தைப் போலீஸ் சேவை நிதிக்கு அளித்து விடுகிறார்.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka